# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம் வெள்ளி, ஆடி 06, 2018. இதழ் - 20



இலஞ்சம் ,ஊழல் மற்றும் மோசடி தொடர்பிலான

**இலவச சட்ட ஆலோசனைக்கு**

அழையுங்கள்

**011 2 501 503**

மாத்தறை - 041 22 33 522 - வவுனியா - 024 222 76 76

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA

நேர்மையின் புகலிடம்

இல: 5/1, எலிபேங்க் வீதி, கொழும்பு - 05






**அறிவித்தல்**
**மட்டக்களப்பு மாநகர சபை**


மட்டக்களப்பு மாநகரசபை எல்லையினுள் அமைந்துள்ள பல்வேறுபட்ட கட்டடங்கள்,

பக்கம் - 03



**களனி பாலத்திற்கும் ஆமர்வீதிக்கும் நடுவே தோன்றிய பெரிய நிறுவனங்களின் சுவடுகள்**


பக்கம் - 07



**மலையகத் தமிழர்கள் என்போர் யார்?**

இலங்கை பிரித்தானியர் ஆட்சிக்கு கீழ் கொண்டுவரப்பட்டதன்பின்னர்

பக்கம் - 14



**சிங்கள பௌத்த பாசிசத்தின் "ட்ரோஜன் குதிரை"**

அரசியல் தந்திரோபாய செயற்பாட்டில் "ஊடுருவல்" (Infiltrate) என்பது

பக்கம் - 15



# விஜயகலா மகேஸ்வரனை பதவி விலகுமாறு பிரதமர் கூறியுள்ளார்!

விடுதலைப்புலிகள் மீள உருவாகினால்தான் மக்கள் நின்மதியாக இருக்க முடியும் என்ற தொனியில் பேசி, சர்ச்சையை உருவாக்கிய இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனை அமைச்சு பதவியில் இருந்து விலகுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கேட்டுள்ளதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

புதனன்று தன்னைச் சந்தித்த விஜயகலாவிடம் இதனை பிரதமர் வலியுறுத்தியதாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. அதேவேளை, அவருக்கு எதிராக கட்சி மட்டத்தில் நடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாடுகளும் தொடர்கின்றன.

தொடர்ச்சி... (பக்கம் -04 )

## மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் நிதிக்கு உதவவில்லை என்கிறது சீன நிறுவனம்



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரச்சாரத்துக்கு தமது நிறுவனம் நிதி உதவி செய்ததாக நியூயார்க் டைம்ஸ் சஞ்சிகை வெளியிட்ட செய்தியை மறுத்துள்ள சைனா ஹார்பர் என்ஜினியரிங் கம்பனி, இலங்கை அரசாங்கத்தால் அது குறித்து நடத்தப்படக் கூடிய எந்தவொரு விசாரணைக்கும் தாம் ஒத்துழைப்போம் என்று கூறியுள்ளது.

இது தொடர்பாக நடத்தப்பட்ட ஒரு செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய நிறுவனத்தின் இணை முகாமைத்துவ பணிப்பாளரான அன் ஷின், சீன நிறுவனத்தால், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் 2015ஆம் ஆண்டு தேர்தல் பிரச்சாரத்துக்கு நிதி வழங்கப்பட்டதாக நியூயார்க் டைம்ஸ் வெளியிட்ட செய்தி உண்மைக்கு புறம்பானது என்று கூறினார். இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான இரு தரப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தித் திட்டமானது தேசிய நலன் கருதிய ஒரு திட்டம் என்றும் அவர் கூறினார். அது வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொள்ளப்பட்ட ஒன்று என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையின் உள்நாட்டு விடயங்களில் தமது சீன நிறுவனம் எந்தச் சந்தர்ப்பத்திலும் தலையிட்டது கிடையாது என்றும் அவர் கூறினார்.

அம்பாந்தோட்டை துறைமுகம் இலங்கை மற்றும் அதன் மக்களுக்காக நிர்மாணிக்கப்பட்டது என்றும், இலங்கையில் முதலீட்டுக்கு ஆதரவான ஒரு சூழலுக்காகவே

தொடர்ச்சி... (பக்கம் -18 )

## வெளிநாட்டு செய்தியாளர் சங்கம் கவலை

வெளிநாட்டு ஊடகங்களுக்கு பணியாற்றும் செய்தியாளர்கள் இருவர் மிரட்டப்பட்டதாக கூறி இலங்கையில் உள்ள வெளிநாட்டுச் செய்தியாளர்களுக்கான அமைப்பு கவலை வெளியிட்டுள்ளது.

இது குறித்து அந்த அமைப்பு வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில், நியூயார்க் டைம்ஸ் பத்திரிகைக்கு அனுசரணையாக பணியாற்றிய இருவர் இவ்வாறான சிரமங்களுக்கு முகம் கொடுத்ததாக கூறியுள்ளது.

இது குறித்து ஊடக அமைச்சரான மங்கள சமரசிங்கவும் கண்டனம் தெரிவித்திருந்தார்.

ஒரு அரசியல் கட்சியின் கூட்டத்தில் இவர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டு, அவர்களை மிரட்டும் தொனியில் பேசியதாக கூறப்படுகின்றது.




# இந்திய மீனவர் கைது



இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த இந்திய மீனவர்கள் 12 பேர் நேற்று அதிகாலை காங்கேசன்துறை கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டதாக கடற்படை தெரிவித்துள்ளது.
நெடுந்தீவு கடற்பரப்பில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த மீனவர்கள் ஜகதாப் பட்டினம், தங்கட்சி மடம் ஆகிய இடங்களை சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களின் இரண்டு படகுகள், மற்றும் ஏனைய உடமைகள் என்பன கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர்களை இன்று ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# அகில இலங்கை சைக்கிளோட்டப் போட்டி



அகில இலங்கை பாடசாலைகள் சைக்கிளோட்டப் போட்டி திருகோணமலையில் ஞாயிற்றுக்கிழமை 2018.07.01 நடைபெற்றது. கல்வி அமைச்சு இதனை ஏற்பாடு செய்திருந்தது. ஆண்கள் பிரிவில் 59 போட்டியாளர்களும். பெண்கள் பிரிவில் 19 போட்டியாளர்களும் பங்கு கொண்டனர்.

ஆண்கள் பிரிவில் முதலாம் இடம் செஹேல் ஷாமூத் டி சில்வா மேரி ஸ்டெல்லா வித்தியாலயம் நீர்கொழும்பு, இரண்டாம் இடம் சிவிந்து பிமந்த, சுமண தர்ம மகா வித்தியாலயம் மாரவில, மூன்றாம் இடம் கிளவின் ஷெஷான் ரி கிரிஸ்ரி கிங் கல்லூரி வெல்வெரியா ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

பெண்கள் பிரிவில் முதலாம் இடம் ஷெனாலி பெரேரா நல்லாயன் கன்னியர் மடம் கொழும்பு, இரண்டாம் இடம் திலினி பிரவீனா நிவத்தக சேதிய மகா வித்தியாலயம் அநுராதபுரம், மூன்றாம் இடம் அகாசா சந்திரபினி சென் பீற்றர்ஸ் கல்லூரி நீர்கொழும்பு ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.
(கதிரவன் திருகோணமலை)

# மட்டக்களப்பு மாவட்ட பௌர்ணமி கலை விழா



கிராமத்துக்கலைகளை நகரத்துக்குக் கொண்டுவருதல், இளைய தலைமுறையினருக்கு எங்களுடைய பாரம்பரியக் கலைகளைக் கையளித்தல் உள்ளிட்ட நோக்கங்களின் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்ட செயலகம், மண்முனை வடக்கு பிரதேச செயலகம், மட்டக்களப்பு மாநகர சபை ஆகியவற்றின் ஏற்பாட்டில் பௌர்ணமிக் கலைவிழா நடைபெற்றது.

அருகிவரும் பாரம்பரியங்களிக் நிகழ்த்துகை செய்யும் வகையில் நடத்தத்திட்டமிடப்பட்டுள்ள இவ் பௌர்ணமி கலைவிழாவில் மண்முனை வடக்கு பிரதேச செயவலாளர் பிரிவிலுள்ள பறங்கியர் கலை மன்றத்தினரால் கப்றிஞ்சா நடன நிகழ்வும், மட்டக்களப்பின் புகழ் புறீத்த கலைஞர் ஏ.ஞானப்பிரகாசம், எம்.சடாட்சரம், அ.ச.பாய்வா ஆகியோரால் பிரபலமான மெல்லிசைப் பாடல்களும் இசைக்கப்பட்டன.

மாவட்ட அரசாங்க அதிபர் மா.உதயகுமாரின் வழிகாட்டலுக்கமைய மட்டக்களப்பு மாவட்ட கலாசார இணைப்பாளர் த.மலர்ச்செல்வனின் ஒழுங்குபடுத்தலில் மட்டக்களப்பு நகர காந்திப் பூங்காவில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி சிறிகாந்த் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், உதவி மாவட்டச் செயலாளர் ஏ.நவேஸ்வரன், மண்முனை வடக்கு

# கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்க பொதுக்கூட்டம்



கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் 33வது வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த புதன்கிழமை (04) பாசிக்குடாவில் அமைந்துள்ள எலிபன்ட் றொக் றிஸோட்டில் நடைபெற்றது.

கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் இரா. இராஜசேகரம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி த.ஜெயசிங்கம், பிரதி உபவேந்தர் வைத்திய கலாநிதி. கே.ஈ.கருணாகரன், சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர் கலாநிதி. எ.எஸ்.ஜெயசங்கர் மற்றும் கலை கலாசார பீட பீடாதிபதி மு.ரவி, பதில் பதிவாளர் அ.பகிரதன், நிதியாளர் எம்.எம்.பாரிஸ், தாபனங்கள் பிரிவின் (கல்விசாரா) சிரேஷ்ட உதவிப் பதிவாளர் வி.நவிரதன், மற்றும் சிரேஷ்ட உதவிப் பதிவாளர், சிரேஷ்ட உள்ளக கணக்காய்வாளர், மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்க தலைவர், செயலாளர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

கிழக்குப் பல்கலைக்கழகம், திருகோணமலை வளாகம் மற்றும் சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தைச் சேர்ந்த சுமார் 450 கல்விசாரா ஊழியர்கள் பங்கேற்றனர். அதன்போது கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கடமையாற்றி ஓய்வுபெற்ற ஊழியர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

கல்விசாரா ஊழியர் சங்க தலைவராக ஏ. ஜெகராஜ், உப தலைவராக இரா.இராஜசேகரம், செயலாளராக த.சிறிதரன், உபசெயலாளராக மா.அமிர்தலிங்கம், பொருளாளராக ச.ரவீந்ரகுமார் தெரிவு செய்யப்பட்டனர்.

தொடர்ச்சி... (பக்கம் -23 )

# வளத்தாப்பிட்டியில் சிறுவர்சந்தை!



சம்மாந்துறை வலயத்திற்குட்பட்ட பின்தங்கிய வளத்தாப்பிட்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் முதலாம் வகுப்பு மாணவர்கள், ஆசிரியையின் வழிகாட்டலில் சிறுவர்சந்தையை நேற்று நடாத்தினர். சிறுவர் சந்தையை வலயகல்வி அதிகாரிகள் கொண்ட குழுவொன்று பார்வையிடுவதையும் சேதனப்பசளை கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட மரக்கறிகளை கொள்வனவு செய்வதையும் காணலாம்.

படங்கள் காரைதீவு நிருபர்

# பிரித்தானியாவின் காரைதீவு ஒன்றியம் சிறப்பாக நடாத்திய முதல் கலாசார விளையாட்டுவிழா!





லண்டனிலுள்ள உலகத்தமிழர் வரலாற்று மையத்தில் பிரித்தானியாவின் காரைதீவு ஒன்றியம் முதல்முதலாக கலாசார பாரம்பரிய விளையாட்டு விழாவையும் ஒன்றுகூடலையும் வெகுவிமரிசையாக நடாத்தியது.

கடந்த சனிக்கிழமை(30) பொறியியலாளர் வடிவேல் ஜெகதாஸ் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் பிரித்தானியாவிலுள்ள காரைதீவைச் சேர்ந்த அத்தனை குடும்பங்களும் கலந்து சிறப்பித்தன.

அங்குள்ள பிள்ளையார் ஆலயத்தில் அமுது படைத்து விசேட பூஜையுடன் வழிபட்டபின், கலாசார நிகழ்வுகள் காலை 10மணிக்கு ஆரம்பமாயின. தாயகத்தில் நடப்பது போன்று அத்தனை நிகழ்ச்சிகளும் அங்கு நடந்தேறின.
கயிறிழுத்தல், முட்டி உடைத்தல், யானைக்கு கண்வைத்தல், சாக்கோட்டம், சங்கீதக்கதிரை,, பணிஸ் உண்ணுதல் சமநிலை ஓட்டம், சிறுவர்கள் பங்கேற்ற பலூன் ஊதி உடைத்தல், மிட்டாய்பை ஓட்டம் முதலான பல நிகழ்ச்சிகள் நடந்தேறின.

இறுதியில் பரிசளிப்பு நிகழ்வு செயலாளர் தாமோதரம் வாசிகனின் நன்றியறிதலுடன் மாலை 6மணிக்கு நிறைவுபெற்றது.

பிரித்தானியாவில் இருக்கக்கூடிய அனைத்து காரைதீவு மக்களும் கலந்துகொண்டு உறவுகளை வலுப்படுத்திக்கொண்டு மகிழ்ச்சியுடன் விளையாட்டு நிகழ்விலும் ஒன்று கூடலிலும் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

# இளைஞர்கழகங்களுக் கிடையிலான விளையாட்டுப் போட்டி!



தேசிய இளைஞர்சேவை மன்றத்தின் காரைதீவுப் பிரதேச இளைஞர்கழகங்கிடையிலான பிரதேச விளையாட்டுப்போட்டி 1/7/2018 காரைதீவு கனகரெட்ணம் விளையாட்டரங்கில் நடைபெற்றது. காலையில் மெய்வல்லுனர் போட்டிகளும் பிற்பகலில் காற்பந்தாட்டபோட்டியும் நடைபெற்று, பரிசளிப்பு நிகழ்வும் நடைபெற்றது. அதன்போதான படங்கள் இவை.

படங்கள் காரைதீவு நிருபர் சகா



# 'கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் பின்னால் அனைவரும் அணிதிரள வேண்டும்' - செங்கதிரோன்.த.கோபாலகிருஸ்ணன்



சகல தமிழ் அரசியல் கட்சிகளையும் ஒரு பொதுச் சின்னத்தின் கீழ் ஒன்றிணைய வைப்பதற்குக் கிழக்கு மாகாணத் தமிழர்கள் அனைவரும் கட்சி அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் பின்னால் அணி திரளவேண்டும் என்று அந்த அமைப்பின் ஸ்தாபகர்களில் ஒருவரான செங்கதிரோன் கோபாலகிருஸ்ணன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் செயற்பாடுகளைக் கிழக்கு மாகாணத்தின் தமிழ்க் கிராமங்கள் தோறும் முன்னெடுக்குமுகமாக பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் பொதுமக்கள் கலந்துரையாடல் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு, பிரதேச செயலாளர் பிரிவுமட்டக் கட்டமைப்புகளை உருவாக்கும் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

அந்த வகையில் இதுவரை (30.06.2018) அம்பாறை மாவட்டத்தில் ஆலையடிவேம்பு மற்றும் திருக்கோவில், கல்முனை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் கோறளைப்பற்று (வாழைச்சேனை), கோறளைப்பற்று வடக்கு (வாகரை), மண்முனை தென்எருவில் பற்று (களுவாஞ்சிக்குடியிலிருந்து குருக்கள் மடம் வரையிலான பகுதி), ஏறாவூர்ப்பற்று (செங்கலடி), போரதீவுப்பற்று (வெல்லாவெளி), மண்முனைப்பற்று (ஆரையம்பதி), மண்முனை தென்மேற்கு (கொக்கட்டிச்சோலை) ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.

இக்கூட்டங்களில் பொதுமக்கள் ஆர்வமுடன் கலந்துகொள்வதுடன் "எதிர்வரும் கிழக்குமாகாணசபைத் தேர்தலில் கிழக்கு மாகாணத் தமிழர்களின் சார்பில் அதிஉச்சபட்ச ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளும் வகையில் சகல தமிழ் அரசியல் கட்சிகளும் ஒரு பொதுச் சின்னத்தின் கீழ் ஒன்றிணைந்து ஓரணியில் போட்டியிட வேண்டும்" என்ற கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் தீர்மானத்தை நடைமுறைச் சாத்தியமாக்கும் செயற்பாடுகளைப் பொதுமக்கள் அமோகமாக வரவேற்றுள்ளனர்.

தொடர்ச்சி... (பக்கம் -18 )

# காரைதீவில் சித்தர் ரத பவனி




பன்னெடுங் காலமாக ஈழமணித் திருநாடெங்கும் நடமாடி பல சித்துக்கள் புரிந்து காரைதீவு பதியில் ஜீவ சமாதி அடைந்த சித்தருள் சித்தர் ஸ்ரீ சித்தானைக்குட்டி சுவாமி அவர்களின் 67வது குருபூசையை முன்னிட்டு நடைபெறும் வருடாந்த ரத பவனி ஊர்வலமானது 06.06.2018 வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு காரைதீவு ஸ்ரீ சித்தானைக்குட்டி ஜீவ சமாதி ஆலயத்திலிருந்து ஆரம்பமாகும்.

இவ் ஊர்வலமானது காரைதீவு, கல்முனை நகர் உள் வீதிகளுடாகச் சென்று நற்பட்டிமுனை , சேனைக்குடியிருப்பு, கிட்டங்கி ஊடாக நாவிதன்வெளி, அன்னமலை, வேப்பையடி, மண்டூர் முருகன் ஆலயம் சென்று மீண்டும் வேப்பையடி, நாவிதன்வெளி, வீரமுனை, சம்மாந்துறை பிரதான வீதியூடாக காரைதீவை வந்தடையும்.

சுமார் 25 உழவு இயந்திரங்களில் பக்தர்கள் அணிசேர சித்தரின் திருவுருவம் தாங்கிய ஊர்தி பின்னேவர இந்த ரதபவனி நகரவுள்ளதென ஆலய பரிபாலனசபைச்செயலாளர் த.தவகுமார் தெரிவித்தார்.

(காரைதீவு நிருபர் சகா)

# மட்டக்களப்பு மாநகரசபை
மඩකලපුව මහනගර සභාව
BATTICALOA MUNICIPAL COUNCIL

## அறிவித்தல்
## மட்டக்களப்பு மாநகர சபை

மட்டக்களப்பு மாநகரசபை எல்லையினுள் அமைந்துள்ள பல்வேறுபட்ட கட்டடங்கள், வியாபார நிலையங்கள், வீடுகள், விடுதிகள், சுற்றுமதில்கள், பொது மற்றும் அரச கட்டடங்கள் என்பன மாநகரசபையின் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஒழுங்கு விதிமுறைகள் மற்றும் சட்ட ஏற்பாடுகளுக்கு ஏற்ப மாநகர சபையின் முறையான எழுத்து மூலமான அனுமதி பெறப்பட்டு கட்டப்படவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் நாட்டில் நிலவிய சூழல் உட்பட பல்வேறுபட்ட காரணங்களால் உரிய சட்டநடைமுறைகள் முறையாகப் பின்பற்றப்படவில்லை என்பதோடு, இவை சட்டவிரோதமாக செயற்பாடுகளாகும்.

எவ்வாறாயினும் முறையற்ற கட்டட நிர்மாணங்கள் மட்டக்களப்பு மாநகரின் அபிவிருத்தியில் பாரிய பின்னடைவை ஏற்படுத்தும் என்ற காரணத்தினால் முறையான அனுமதி பெறப்படாமல் கட்டப்பட்டுள்ள அனைத்து கட்டடங்கள் தொடர்பிலும் மாநகரசபை கவனம்செலுத்தி நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசித்துள்ளது. அவ்வகையில் மாநகர எல்லைக்குள் வசிக்கும் அனைத்து பொதுமக்களுக்கும் அவர்களின் நலன் மற்றும் எதிர்கால அபிவிருத்தி என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள அனைத்து கட்டடங்களும் உரிய முறையில் கட்டட அனுமதி (Building Plan approval), இயைபுச் சான்றிதழ் (Certificate of Conformity – C of C) உட்பட ஏனைய அனைத்து சட்ட ரீதியான அனுமதிகள் என்பன முறையாக பெற்று அமைக்கப்பட்டுள்ளனவா என்பது தொடர்பிலான களப்பரிசோதனை ஒன்றினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் பொதுமக்களின் நன்மை கருதி மேற்படி முறையான அனுமதி பெற்றுக் கொள்ளத் தவறியவர்கள் தொடர்பில் முறையான அனுமதியினைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு சலுகைக் காலமொன்றினை வழங்க சபை அனுமதித்துள்ளதற்கமைய இவ் அறிவித்தல் பிரசுரிக்கப்படும் இன்றைய தினத்திலிருந்து 3 மாத கால அவகாசம் இத்தால் வழங்கப்படுவதுடன், குறிப்பிட்ட இக்காலப்பகுதியினுள் அனுமதி பெறப்படாத அனைத்து கட்டடங்களுக்குமான முறையான அனுமதியினைப் பெற்றுக் கொள்ளுமாறு மாநகரமுதல்வராகிய நான் அனைத்து மாநகரவாசிகளையும் கேட்டுக் கொள்கின்றேன்.

குறிப்பிட்ட சலுகைக்காலத்தினுள் முறையான அனுமதி பெற்று தத்தமது கட்டட நிர்மாணிப்புக்களை முறைப்படுத்த தவறும் நபர் தொடர்பிலே மாநகர சபை சட்ட நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசித்துள்ளதுடன் உரிய முறையற்ற நிர்மாணங்கள் அனைத்திற்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். எனவே உரிய இக்காலத்தினை சரியான முறையில் பயன்படுத்தி உரிய சட்டதிட்டங்களுக்கு அமைய அனைத்து கட்டட நிர்மாணிப்புகளுக்குமான சட்ட ரீதியான அனுமதியினைப் பெற்றுக் கொள்ளுமாறு பொது மக்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

இவ்விடயம் தொடர்பிலே மேலதிக விளக்கம் தேவைப்படுபவர்கள் எமது அலுவலகத்தொலைபேசி இலக்கம் 065-2222275 இனுடாக அல்லது நேரடியாக அலுவலகத்திற்கு வருகை தருவதின் மூலமோ பெற்றுக் கொள்ள முடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தி.சரவணபவன் (மாநகர முதல்வர்)
மாநகர சபை,
மட்டக்களப்பு

# கொகைன் போல அடிமைப்படுத்தும் சமூக ஊடகங்கள்

சமூக ஊடக நிறுவனங்கள் வேண்டுமென்றே நிதி ஆதாயத்திற்காக பயன்பாட்டாளர்களை தங்கள் தயாரிப்புகளுக்கு அடிமைப்படுத்துகின்றன என்று அமெரிக்காவிலுள்ள தொழில்நுட்ப நகரமான சிலிக்கான் வேலியை சேர்ந்த வல்லுநர்கள் கூறியதாக பிபிசி செய்தி வெளியிட்டுள்ளது.

"கொகைன் போல அடிமைப்படுத்தும் வகையில் உருவாக்கப்படும் சமூக வலைதளங்கள், பயனாளர்களை மீண்டும் மீண்டும் வரத் தூண்டுகின்றன" என்று மோசில்லா நிறுவனத்தின் முன்னாள் ஊழியரான அசா ரஸ்கின் கூறியுள்ளார்.

"நீங்கள் ஒவ்வொரு முறை கைபேசியை பயன்படுத்தும்போது உங்களின் பயன்பாட்டு நேரத்தை அதிகரிப்பதற்கும், உங்களை அடிமைப்படுத்துவதற்கும் ஆயிரக்கணக்கான பொறியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர் என்பதே நிதர்சனம்" என்று அவர் மேலும் கூறுகிறார்.

கடந்த 2006ஆம் ஆண்டு உருவாக்கிய, ஒரு இணையதள பக்கத்தை திறந்த பிறகு, அதில் கிளிக் செய்யாமல் தொடர்ந்து கீழ்நோக்கி பக்கத்தை தள்ளும் தொழில்நுட்பத்தையே, தற்போது பெரும்பாலான நிறுவனங்கள் தங்களது செயலியின் மூலம் பயன்பாட்டாளர்களை அடிமைப்படுத்துவதற்கு பயன்படுத்துகின்றன.

"உங்களது உணர்ச்சியை அறிவதற்குரிய நேரத்தை மூளைக்கு கொடுக்கவில்லை என்றால் நீங்கள் தொடர்ந்து ஸ்க்ரோல் செய்துகொண்டே இருப்பீர்கள்" என்று அவர் கூறுகிறார்.

# அழுவது உங்கள் குழந்தை : பொறுப்பற்ற பெற்றோராக இருக்காதீர்கள்!

குழந்தைகள் விவகாரத்துக்கான இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் குழந்தைகள் கொல்லப்பட்டமை, துஸ்பிரயோகம் செய்யப்பட்டமை குறித்துப் பேசியிருக்கிறார். அது அவர் கடமை.

ஆனால், தமது ஆட்சியில் இதனைச் செய்ய முடியவில்லை, விடுதலைப்புலிகள் காலத்தில் நிலைமை மிக நன்றாக இருந்தது என்ற தொனிப்பட பேசியிருக்கிறார்.



அவர் யதார்த்தத்தை பேசியிருக்கிறார், உண்மையை பேசியிருக்கிறார். ஆகவே அவரை விமர்சிப்பது தவறு என்று சிலர் வாதாடலாம். ஆனால், அப்படியான வாதங்களுக்கு ரஞ்சன் ராமநாயக்காவுடனான உரையாடலில் மூலம் அவரே பலம் இல்லாமல் செய்துவிட்டார். பதற்றத்தில் பேசிவிட்டதாக கூறியிருக்கிறார் அந்த உரையாடலில். (ரஞ்சன் ராமநாயக்க தனது சக அமைச்சர் ஒருவருடனான தொலைபேசி உரையாடலை பகிரங்கமாக வெளியிட்டது, அந்தரங்கத்தை மீறும், தவறான செயல் என்பது இன்னுமொரு விடயம்.)

இப்போது நடப்பது யார் ஆட்சி, குழந்தைகள் விவகாரத்துக்கு யார் பொறுப்பு என்பதை உணராமல், எதுவும் சரியில்லை என்று விஜயகலா பேசியிருக்கிறார். அவர்தான் அந்த விவகாரத்துக்கான இராஜாங்க அமைச்சர். அப்படியிருக்க, குழந்தைகளுக்கு எதிரான கொடுமைகளுக்கு அவரைத்தான் கேள்வி கேட்டிருக்க முடியுமே ஒழிய, அவர் ஏனையவர்களை குறைகூறிக்கொண்டிருக்க முடியாது.

அதுவும் அவரது அரசாங்கத்தால் பயங்கரவாத இயக்கமாக கருதப்படும் ஒரு அமைப்பின் ஆட்சியில்தான், பெண்கள், குழந்தைகள் நல்ல நிலையில் சுதந்திரமாக இருந்தார்கள் என்று கூறியிருக்கிறார். (விடுதலைப்புலிகளால் சிறார்கள் பலவந்தமாக படைக்கு சேர்க்கப்பட்டார்கள் என்று குற்றஞ்சாட்டப்படும் விடயத்துக்குள்ளும் நாம் போகவில்லை)

இப்போது காட்சிகள் மாறி, தெற்கில் அனைவரும் விஜயகலா சரியில்லை என்று கூற, வடக்கு கிழக்கில் சிலராவது அவர் செய்தது, பேசியது சரிதான் என்று வாதிட, சில பெண்கள் அமைப்புக்கள் மாத்திரமாவது, அவர் பெண் என்பதால் அழுத்தங்களுக்கு உள்ளாகிறார் என்று பேச பிரச்சினை எங்கோ சென்று விட்டது.

விடுதலைப்புலிகளை விஜயகலா பாராட்டிப் பேசியமை ஒன்றும் தெரியாமல், உணர்ச்சிவசப்பட்டு பேசிய விடயமாக எடுக்க முடியவில்லை. அவர் மாத்திரமல்ல, அவரது கணவர், முன்னாள் அமைச்சர் மகேஸ்வரன் கூட ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்துகொண்டே விடுதலைப்புலிகளை அவ்வப்போது பாராட்டிப் பேசி வந்துதான் இருக்கிறார்கள். அது, அவரது சொந்த அரசியல் நலனுக்கான பேச்சு.

அடுத்த தேர்தல்கள் விரைவில் வரலாம் என்ற எதிர்பார்ப்பில் பேசப்படுகின்ற அதிரடிப்பேச்சுக்கள் இவை. இங்கு பெண் என்பதால் அழுத்தம் என்றெல்லாம் வக்காலத்து வாங்க முடியாது. மொத்தத்தில் இங்கு நடப்பது ஒரு அரசியல் விளையாட்டுத்தான். விடுதலைப்புலிகளை தமது எதிரிகளாகக் காட்டி யாரெல்லாம் லாபமடைய முடியுமோ அவர்களெல்லாம் ஒரு புறமும், விடுதலைப்புலிகளின் அபிமானிகளாகக் காட்டி யாரெல்லாம் நன்மையடைய முடியுமோ, அவர்களெல்லாம் மறுபுறமும் ஒன்றாகக் கூடி இந்த விவகாரத்தை முன்வைத்து அரசியல் விளையாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். (யானை இருந்தாலும், செத்தாலும் ஆயிரம் பொன்).

விஜயகலா ஆரம்பித்த ஒரு சித்து விளையாட்டில் இரு புறமாக ஏனையவர்கள் பிரிந்து, விளையாட ஆரம்பித்துள்ளார்கள்.

ஆனால், இங்கு உண்மையான பிரச்சினை என்ன? குழந்தைகள் துஸ்பிரயோகம் நாட்டில் அதிகரித்துள்ளது என்ற குற்றச்சாட்டுத்தான் இங்கு பிரச்சினை. அதனை இலக்கு வைத்ததாக எவரும் எதுவும் செய்யவில்லை. பேசவும் இல்லை. இனப்பிரச்சினைத் தீர்வுக்கு எடுக்கப்படக்கூடிய மிகச்சில நடவடிக்கைகளையும் குழப்பும் வகையில்தான் எல்லோரும் செயற்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

அதாவது, சிறார் துஸ்பிரயோகம் எந்த அளவுக்கு நடந்துள்ளது என்பது குறித்த பரிதாபமான தரவுகள் அமைச்சரிடம் இருக்கிறது, அரசாங்கத்துக்கு தெரிந்திருக்கிறது, ஆனால் எவரும் எதுவும் செய்யவில்லை.

**சீவகன் பூபாலரட்ணம்**

அடிபட்ட குழந்தை அழ, அதனைத் தேற்றவோ அல்லது இனி அது அடிபடாமல் பாதுகாக்கவோ முயலாமல், தாயும் தந்தையும் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதுவும், முன்னாள் பக்கத்துவீட்டுக்கார எதிரி இருந்தபோது, குழந்தை நன்றாக இருந்தது என்று தாய் கூற, அப்படிக் கூறியது தாம்பத்திய விசுவாசத்துக்கு முரணானது என்று அப்பா



கூற, குடும்பமே பிரிந்து சண்டைபோட்டு, அடித்துக்கொண்டிருக்கிறார்கள்.

குழந்தைகள் அழுதுகொண்டிருக்கின்றன. அழுவது உங்கள் சொந்தக் குழந்தைகள், அவர்களை தேற்ற, பாதுகாக்க ஏதாவது செய்யுங்கள். பொறுப்பற்ற பெற்றோராக இருக்காதீர்கள்.

## விஜயகலா மகேஸ்வரனை பதவி விலகுமாறு பிரதமர் கூறியுள்ளார்!

தொடர்ச்சி...

விடுதலைப்புலிகளை ஆதரிக்கும் வகையில் விஜயகலா கூறிய கருத்துக்கள் அரசாங்க வட்டாரங்களில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளன. ஐக்கிய தேசிய கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் மஹிந்த ஆதரவாளர்கள் அவருக்கு எதிராக கருத்துக்களை முன்வைத்து வருகிறார்கள்.

நேற்றைய தினம் தொலைக்காட்சி ஒன்றுக்கு செவ்வியளித்த திருமதி. மகேஸ்வரன், தான் தனது அமைச்சுப் பதவியை தற்காலிகமாக துறக்க உள்ளதாக கூறியிருந்தார். ஆனாலும், எமது பத்திரிகை அச்சுக்கு போகும் வரை அவர் அதனை செய்ததாக தெரியவில்லை.

அவரை தொடர்புகொள்வதற்கு எடுத்த முயற்சிகளும் பயன் தரவில்லை.

விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான பேச்சு தமிழர் வட்டாரத்தில் விஜயகலாவுக்கு சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்துமாக இருந்தாலும், அவரது கட்சியினருக்கு சிங்கள மக்கள் மத்தியில் பெரும் எதிர்ப்பை அது உருவாக்கும் என்று அவரது கட்சியினர் கலவரமடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் நடந்த ஒரு அரச வைபவத்தில் விஜயகலா விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான, இந்த சர்ச்சைக்குரிய கருத்துக்களை பேசியிருந்தார்.

அதேவேளை நாடாளுமன்றத்திலும் விஜயகலா விவகாரம் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. அவரது கருத்து தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனையுடன் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று சபாநாயகர் கரு. ஜயசூரிய கூறியுள்ளார்.

## கவிதை

### நெஞ்சம் பொறுக்குதில்லையம்மா

சிட்டுக் குருவி போன்று நாங்கள்
சிறகடித்து பறந்தொன்றாய்
வட்டம் இட்டு வானிலே
பாடியாடி விளையாட
மட்டில்லா ஆனந்த மழையில்
மழலை நாங்கள் நனைந்திட
கட்டளைதான் இடுமம்மா – மாலைக்
கருக்கலின் முன் வந்திடுவேன்
ஆபத்துக்கள் அனேகமுண்டு
அங்கே போக வேண்டாம் கண்ணே!
கோபங் கொள்ள வேண்டாமிப்போ – சிறு
குழந்தையுமக்கு புரியாது
லாபம் தேடும் கயவர் கூட்டம்
யாருமில்லா இடத்தில் கண்டால்
பாவமென்றும் பாராது கடத்தி சென்று
பணத்துக்காக விற்றிடுவர்!

சிறுவர் உரிமை எமக்குண்டு
சென்று வரலாம் எங்கிலும்
பொறுமையாக கேளும்மா
பொலிசார் உண்டு வீதியெல்லாம்
சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுக்க
சில அமைப்புக்களும் இங்குண்டு
சிறுவரெமக்கு பாதுகாப்பு
சென்ற இடமெல்லாம் உண்டம்மா.

என்தான் சிறுவர் பாதுகாப்புகள்
இருந்தாலும் நம் நாட்டில்
இன்னும் பயிரை மேயும் வேலிகள்
இருக்கத்தான் செய்கின்றன
அன்னை சொல்தான் கேட்டு நீயும்
அங்கு செல்லாது வாழ்ந்திட்டால்
இன்னல்கள் வந்திடாமல் மகளே –
என்றும்
இன்பமாக வாழ்ந்திடலாம்.

நல்லது நல்லதம்மா இனிமேல்
நான் தனியாய் எங்கும் செல்ல மாட்டேன்
பொல்லாத மானிடர்கள் - இந்த
புவியில் உள்ளார்கள் என்பதனை –
நீங்கள்
சொல்லித்தான் அறிந்தேனம்மா – கேட்க
சோகமாக உள்ளதம்மா - இந்த
நிலை கெட்ட மாந்தரை நினைக்கையில்
நெஞ்சம் பொறுக்குதில்லையம்மா.

கவிஞர். க.ரெட்ணையா
மட் / கன்னன்குடா – 02

## அரங்கம் செய்திகள் நிறுவன வேலைவாய்ப்புகள்

வேகமாக வளர்ந்துவரும் அரங்கம் செய்திகள் நிறுவனத்தில் பின்வரும் பணிகளுக்கு ஆட்கள் தேவை.

- உதவி ஆசிரியர் (கொழும்பு மற்றும் மட்டக்களப்பு)
- விளம்பர பிரதிநிதிகள்
- அலுவலக உதவியாளர் (மட்டக்களப்பு மற்றும் கொழும்பு)
- வானொலி அறிவிப்பாளர்கள்
- வீடியோ படப்பிடிப்பாளர்கள்

முழு நேர / பகுதி நேர விண்ணப்பங்கள் ஏற்கப்படும்.

ஊதியம் தகுதிக்கேற்ப தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி :
முகாமையாளர், 227, பார் வீதி, மட்டக்களப்பு.
விண்ணப்ப இறுதித்திகதி ஆகஸ்ட் 05, 2018.



# தமிழரின் கலாசாரத் தலைநகரில் ஒரு மொட்டு கருகியது

## கண்ணிருந்தும் குருடர்களாய் நாம்!

இன்னும் ஒரு பாடசாலைச் சிறுமி தமிழர்களுடைய கலாசாரத் தலைப்பட்டினத்தில் பலியிடப்பட்டிக்கிறார். யாழ்ப்பாணம், சுழிபுரம் காட்டுப்புலம் என்ற கிராமத்தில் ஆறு வயதுடைய றெஜினா என்ற சிறுமி பாடசாலையிலிருந்து வீடு திரும்பும் வழியில் இனந்தெரியாதோரினால் கடத்திக் கொலை செய்யப்பட்டிருக்கிறார். சடலத்தை அயலவர்கள் தேடிக் கிணறு ஒன்றில் இருந்து மீட்டுள்ளனர்.

றெஜினாவின் குடும்பம் மிக வறியது. தந்தை கூலி உழைப்பாளி. றெஜினாவின் உடல் மருத்துப் பரிசோதனைகளுக்குட்படுத்தப்பட்டது. அவர் பாலியல் துஸ்பியோகங்களுக்குட்ட தடயங்கள் இல்லை என மருத்துவ அறிக்கை கூறுகிறது. இதைப்பற்றி யாழ்ப்பாணத்திலுள்ள பொறுப்புமிக்க வைத்திய அதிகாரி ஒருவருடன் நேரிலே பேசியபோது, இந்தக் கொலைக்குக் காரணம், போதைப்பொருளைப் பாவிப்பவர்களாகவே இருக்கும். அவர்களுடைய போதைப் பொருட் தேவைக்கான பணத்துக்காக றெஜினா கொல்லப்பட்டிருக்கலாம் என்றார் அவர். றெஜினாவின் காதில் இருந்த அந்தச் சின்னஞ்சிறிய தோடுகளுக்காக போதைப்பொருட் பாவனையாளர்கள் றெஜினாவைக் கொன்றிருக்கிறார்கள். உயிரும் கொலையும் இந்தளவுக்கு மலிந்து விட்டன.

கலாச்சாரத் தலைநகரின் பெருமிதங்கள் இந்தளவுக்குப் பெறுமதியாகியுள்ளது.

இதற்கான பொறுப்பை யாழ்ப்பாணச் சமூகமே முதலில் ஏற்க வேணும். இரண்டாவது பொறுப்பு மாகாணசபைக்கும் அரசாங்கத்துக்குமுரியது.

ஒரு பிரதேசத்தில் நடக்கின்ற ஏதோ ஒரு சில சம்பவங்களை வைத்துக் கொண்டு அந்தப் பிரதேசத்தின் நிலையைப் பற்றி மதிப்பிடலாமா? அந்தப் பிரதேசத்தைப் பற்றிய விமர்சனங்களை முன்வைக்கலாமா? அதுவும் யாழ்ப்பாணம் என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க, பாரம்பரியப் பெறுமானங்களை உடைய பிரதேசத்தின் மீது எழுந்தமானமாக இவ்வாறு கண்டனங்களையும் மதிப்பிறக்கம் செய்கிற மாதிரியான விமர்சனங்களை வைப்பது முறையில்லை என்று சிலர் சொல்லக் கூடும். அதே சிலரிடம் நாம் மிக எளிய கேள்விகளைப் பதிலாகக் கேட்கலாம்.

றெஜினாவின் கொலை ஒன்றும் அபூர்வமாக நடந்த விசயமல்ல.

அல்லது இதுதான் முதல் கொலையும் அல்ல. கடந்த ஆண்டு புங்குடுதீவில் இன்னொரு பாடசாலை மாணவியான வித்தியா கூட்டு வல்லுறவுக்குட்பட்டுக் கொல்லப்பட்டார். றெஜினா கொல்லப்பட்ட இரண்டு நாட்களுக்குள் அதே சுழிபுரம் பகுதியில் முதிய பெண்ணொருவர் (59 வயது) யாரோ இரண்டு பேரினால் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டிருக்கிறார். இதற்கு முன்னும் இவ்வாறு பல சம்பவங்கள் யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களிலும் நடந்திருக்கின்றன. வாள் வெட்டு, அடிதடி, கொள்ளை, களவு, வன்புணர்ச்சி, கொலை என கட்டற்று நீண்டு செல்கின்றன குற்றச்செயல்கள். இதைக் கட்டுப்படுத்தும் விதமாகப் பொலிஸ், நீதிமன்றம் போன்ற அரச நிறுவனங்கள் நடவடிக்கைகளை எடுத்துள்ளன. பொலிஸ் மேற்கொண்ட கட்டுப்பாட்டு நடவடிக்கையின்போது இரண்டு பல்கலைக்கழக மாணவர்கள் பலியானதும் நிகழ்ந்திருக்கிறது. பல நூற்றுக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். பலர் நீதிமன்றத்தின் மூலமாகத் தண்டனைக்குள்ளாகியிருக்கிறார்கள்.

ஆனாலும் குற்றச்செயல்கள் குறையவில்லை. கொலைகளும் பலியும் நிற்கவில்லை. பதிலாகக் கஞ்சா, மது உள்ளிட்ட



போதைப்பாவனை பெருகியிருக்கிறது. இதனால் பாதிக்கப்படுவோரின் தொகையும் கூடியிருக்கிறது. வாராவாரம் கஞ்சாவும் போதைப்பொருட்களும் பொலிசாரினால் கைப்பற்றப்படுவதாகப் பொலிஸ் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. செய்திகளும் இதை நிரூபிக்கின்றன.

அப்படியென்றால் கைப்பற்றப்படாத பெருமளவு கஞ்சா வேறு எங்கோ பயன்பாட்டிற்குச் சென்று விடுகிறது.

> **கூட்டுக் கவலையும் கூட்டு அக்கறையுமே செயற்பாட்டுப் பலத்தைப் பெறும். அந்த வகையில் எந்த நற்காரியங்களும் நிகழவில்லை**




தற்போது கிடைக்கின்ற தகவல்கள், பாடசாலை மாணவர்களும் இந்தப் போதைப் பொருட்பாவனைக்குட்பட்டுள்ளனர் என்று சொல்கின்றன. இதெல்லாம் நல்ல சகுனங்களோ மகிழ்ச்சியான சேதியோ அல்ல.

இதற்குக் காரணம் படைத்தரப்பே என்று தமிழ் அரசியற் தரப்பினரும் ஊடகத்துறையினரும் குற்றம்சாட்டி வருகின்றனர்.

ஆனால் இதைக்குறித்து முறையாக பாராளுமன்றத்திலோ அரச தலைவர் மட்டத்திலே யாரும் பேசியதாக இல்லை. குறைந்தபட்சமாக இதைப்பற்றி மாகாணசபை கூடப் பெரிதாகக் கண்டு கொள்ளவில்லை.

முதலமைச்சர் இந்த நிலைமையைக் குறித்து பொலிஸ் மற்றும் சட்டத்துக்குப் பொறுப்பான பிற தரப்புகள், சமூக அமைப்புகள், மருத்துவத்துறை போன்றவற்றோடு கலந்தாலோசித்திருக்க வேணும்.

அதுவும் நடக்கவில்லை. சமூக மட்டத்தில் கூட யாரும் இதைக்குறித்து அக்கறைப்பட்டதாகவும் கவலைப்பட்டதாகவும் இல்லை. தனிப்பட்ட கவலைகள் இருக்கக் கூடும். அதற்குச் சமூகப் பெறுமானமும் நடவடிக்கைப் பெறுமானமும் இல்லை. கூட்டுக் கவலையும் கூட்டு அக்கறையுமே செயற்பாட்டுப் பலத்தைப் பெறும். அந்த வகையில் எந்த நற்காரியங்களும் நிகழவில்லை.

ஆகவே சமூகம் பாதுகாப்பற்ற நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இந்த நிலையைச் சமாளிப்பதற்காக (கட்டுப்படுத்துவதற்காக அல்ல) வடக்கின் கல்வி அமைச்சர் ஒரு நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறார்.

இதன்படி இனிமேல் பாடசாலைகளில் இருந்து ஆரம்ப வகுப்புப் பிள்ளைகளை அவர்களுடைய பெற்றோரும் பாதுகாவலர்களுமே வந்து அழைத்துச் செல்ல வேணும் என்றிருக்கிறார் கல்வி அமைச்சர் கந்தையா சர்வேஸ்வரன்.

மேலோட்டமாகப் பார்த்தால் இந்த அறிவிப்பு ஏதோ பாதுகாப்பானதாகத் தோன்றலாம். ஆனால், இது சமூகப்பாதுகாப்பற்ற நிலையையும் அதைச் சீர் செய்ய முடியாததையுமே உணர்த்துகின்றது.

அப்படியென்றால் வித்தியா போன்ற வயது வந்த பிள்ளைகளுடைய பாதுகாப்புக்குப் பதில் என்ன? இதற்கு சர்வேஸ்வரன் என்ன சொல்வார்?

முன்னர் இந்த மாதிரியான கொலைகளுக்குக் காரணமாகப் படைத்தரப்புக் குற்றம் சாட்டப்பட்டது. கிரிஷாந்தி, ரஜனி போன்றவர்கள் அவ்வாறு படையினரால் சிதைக்கப்பட்டுக் கொல்லப்பட்டிருந்ததும் உண்மை. இன்று நடப்பவை அப்படியல்ல.

பண்பாட்டிலும் நாகரீகத்திலும் அறிவிலும் வளர்ச்சியடையும் சமூகத்தில், பிரதேசத்தில், வரலாற்றுச் சிறப்புடைய நகரத்தில் எப்படி இவ்வாறு கீழ்மையான விசயங்கள் நடந்தேறும்? இதைக்குறித்து ஏன் பொறுப்பானவர்கள் சிந்திக்கவில்லை. பொறுப்பான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை? என்ற கேள்விகள் எழுகின்றன.

இதைக்குறித்து எழுத்தாளரும் சமூகச் செயற்பாட்டாளருமான ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் பின்வருமாறு குறிப்பிட்டதை இங்கே குறிப்பிடுவது அவசியமாகும். "ஒரு நாடு எப்படியிருக்கிறது என்பது அந்நாட்டில் பெண்கள் எப்படி நடத்தப்படுகிறார்கள் என்பதிலிருந்து கண்டு கொள்ளலாம்.

இன்று பாடசாலை செல்லும் இளம்குழந்தைகள், பல்கலைக்கழகம்

**கருணாகரன்**

செல்லும் இளம் பெண்கள், வேலை செய்யுமிடங்களில் பல பெண்கள் என்று பலர் பாலியல் கொடுமைகளுக்கு ஆளாகிறார்கள். வேலிகளே பயிர்களை மேய்கின்றன. தட்டிக் கேட்க ஆளில்லாத சமுதாயமாகத் தமிழ்ச்சமுதாயம் தடுமாறித் தவிக்கிறது.

தலைவர்களோ படாடோபமான பாதுகாப்புடன் செல்வம் கொழிக்க வலம் வருகிறார்கள். மக்களுக்கும் அவர்களுக்கும் ஆக்க பூர்வமான எந்தத் தொடர்பும் இருக்கிறதா என்று தெரியவில்லை.

கண்ணிருந்தும் குருடர்களாக, காதிருந்தும் செவிடர்களாக, அறிவிருந்தும் மூடர்களாக வலம் வரும் இந்த அரசியல்வாதிகளுக்கு. அண்மையில் சுழிபுரத்தில் நடந்த ஆறு வயதுக்குழந்தை றெஜினாவின் கொடிய கொலை மனத்தை உருக்காவிட்டால்,பொது மக்களின் பாதுகாப்பு, போன்ற அத்தியாவசிய விடயங்களை முன்னெடுத்து அவர்களைத் தெரிவு செய்த மக்களின் வாழ்வுக்கு நன்மை செய்யாவிட்டால் இவர்கள் மனிதர்கள் என்ற பெயரில் வாழும் ஈனப் பிறவிகளாகும்".

ஆகவே இனியும் இந்த நிலை நீடிக்காது, இந்தக் கொலைகள் நீளாது தடுப்பதற்கு வழியேற்படுத்த வேணும். அது வேறு யாருடைய கடமையும் அல்ல. நமது பொறுப்பாகும். நாம் பொருத்தமானவர்களை அதிகாரத்தில், ஆட்சியில் அமர்த்தாதவரையில், இந்த அவலங்கள் தொடரும்.

# அம்பாறை மாவட்டத் தமிழர்கள் : (ஓர் அரசியல் வெட்டுமுகம்) பகுதி 09

1977ம் ஆண்டு பொதுத்தேர்தலில் ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் ஆட்சியைக் கைப்பற்றிய ஐ.தே.கட்சி பிரதமர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையில் ஆட்சியமைத்தது. 1978ல் நிறைவேற்றப்பட்ட புதிய அரசியலமைப்பு மூலம் தன்னை நிறைவேற்று ஜனாதிபதியாக ஆக்கிக்கொண்ட ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அவர்கள் 1978ம் ஆண்டின் அரசியலமைப்பின் மூலம் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையிலான ஆட்சியை அறிமுகம் செய்தது மட்டுமல்ல புதிய விகிதாசார தேர்தல் முறைமையையும் அறிமுகம் செய்ததுடன், தேர்தல் சட்ட விதிகளில் மாற்றங்களையும் ஏற்படுத்தினார்.

முன்பு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் காலமானால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்கு அவர் பிரதிநிதித்துவப்படுத்திய தேர்தல் தொகுதிக்கு இடைத்தேர்தல் நடாத்தப்பெற்றுப் புதிய உறுப்பினரைத் தெரிவு செய்யும் நடைமுறையே அமுலிலிருந்தது. ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அவர்கள் 1978ம் ஆண்டின் அரசியலமைப்பில் இந்த நடைமுறையை மாற்றியமைத்து பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் காலமானால் அவ்வெற்றிடத்திற்குக் காலமான பாராளுமன்ற உறுப்பினர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவரோ, அந்தக் கட்சி புதிய உறுப்பினர் ஒருவரை நியமிக்கும் வகையில் அல்லது இடைத்தேர்தல் இல்லாமல் - புதிய நடைமுறையை உட்புகுத்தினார். அதன்படியே எம்.கனகரட்ணம் காலமாகியதால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு ஐ.தே.கட்சி அவரது தங்கை திருமதி.ரங்கநாயகி பத்மநாதனை நியமித்தது. இதனை எதிர்த்தே தமிழர் விடுதலைக் கூட்டணி நீதி மன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்தது. ஆனால் வழக்கில் தமிழர் விடுதலைக் கூட்டணி தோற்றது. இந்த வழக்கில் தமிழர் விடுதலைக் கூட்டணி வெற்றி பெற்றிருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதையும் பதிவு செய்தல் அவசியமாகிறது.

1977ல் பதவிக்கு வந்த பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தை 1983இல் பொதுத் தேர்தலை நடத்தாமல் 1983 இலிருந்து 1989 வரை மேலும் ஆறுவருடம் நீடிப்பதற்கான மக்களின்ஆணையைப் பெற்றுக் கொள்வதற்காக 1982இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அரசு சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடாத்தியது. தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற நீடிப்புக்கு எதிராக வாக்களிக்கும்படி தமிழ் மக்களை கேட்டுக்கொண்டதுடன் தங்களைத் தமிழ் மக்கள் தெரிவு செய்தது 1983 வரை பதவி வகிக்கவே தவிர மேற்கொண்டு பதவியில் நீடிப்பதற்காக அல்ல, எனவே மக்கள் ஆணையை மீறமுடியாது என்று கூறி, 1983 ஜூன் மாதம் மன்னாரில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேசிய மாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றம் செல்வதில்லை எனத் தீர்மானித்தது. அதன்படி 1983 இலிருந்து அடுத்த பாராளுமன்ற பொதுத் தேர்தல் நடைபெற்ற 1989 வரை தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதிநிதித்துவப்படுத்திய வடகிழக்கு மாகாணங்களிலுள்ள தேர்தல் தொகுதிகள் யாவும் வெற்றிடமாகவே விடப்பெற்றன.


திருமதி ரங்கநாயகி பத்மநாதனின் நியமனத்தை எதிர்த்துத் தமிழர் விடுதலை தாக்கல் செய்த வழக்கில் வெற்றி பெற்றிருந்தால் ரங்கநாயகி பத்மநாதனின் நியமனம் ரத்துச் செய்யப்பெற்று அவ்விடத்திற்குத் தமிழர் விடுதலைக்கூட்டணி தங்கள் கட்சியைச்; சேர்ந்த ஒருவரை நியமித்திருக்கும். அவர் கட்சித் தீர்மானத்தின் படி 1983 இலிருந்து பாராளுமன்றம் செல்லாது விட்டிருப்பார். பொத்துவில் தொகுதி மக்கள் 1983 இலிருந்து 1989 வரை பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் அற்ற நிலையில் இருந்திருப்பார்கள். "பழைய குருடி கதவைத் திறடி" என்பது போல 1983-1989 காலப்பகுதியில் அம்பாறை மாவட்டத் தமிழர்கள் மீண்டும் அரசியல் அனாதைகளாக்கப்பட்டிருப்பார்கள். நல்லவேளை வழக்கில் தமிழர் விடுதலைக் கூட்டணி தோற்றதால் அம்பாறை மாவட்டத் தமிழர்கள் காப்பாற்றப்பட்டார்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணி ஒரு போதும் அறிவு பூர்வமான யதார்த்த அரசியலை முன்னெடுக்கவில்லை என்பதற்கு திருமதி.ரங்கநாயகி பத்மநாதன் நியமனத்தை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தமை ஓர் நல்ல உதாரணம் ஆகும். தானும் செய்வதில்லை, செய்கிறவனையும் விடுவதில்லை. வைக்கோல் பட்டறை நாய் போல. அத்துடன் 1977 இல் தமிழீழம் அமைப்பதற்கு தமிழீழத் தேசிய மன்றத்தை நிறுவி தமிழீழத்திற்கான அரசியலமைப்பை உருவாக்குவதற்குத் தமிழ் மக்கள் அளித்த ஆணையைத் தங்கள் வசதிக்காக மறந்துவிட்டு பாராளுமன்றப் பதவிக் காலத்தை மேலும் ஆறுவருடம் நீடிப்பதற்குத் தமிழ் மக்கள் தமக்கு ஆணை தரவில்லை எனக்கூறி அந்த விடையத்தைப் பெரிதாகத் தூக்கிப் பிடித்தமை தமிழ் மக்களை ஏமாற்றும் அதன் அரசியல் ஆசாடபூதித்தனத்திற்கும் ஓர் நல்ல உதாரணமாகும்.

பொதுவாக ஒட்டுமொத்தத் தமிழ் மக்களையும் குறிப்பாகக் கிழக்கு மாகாணத் தமிழர்களையும் அதிலும் குறிப்பாக அம்பாறை மாவட்டத் தமிழர்களையும் கடந்த ஏழு வருட காலமாகத் தொடர்ந்து ஏமாற்றி வருகின்ற வினைத்திறனற்ற தமிழர்களின் அரசியல் தலைமையிலான தமிழ் தேசிய கூட்டமைப்பின் - அழுங்குப் பிடியிலிருந்து அம்பாறை மாவட்டத் தமிழர்கள் தங்களை விடுவித்துக் கொள்ளாதவரை, அம்பாறை மாவட்டத் தமிழர்களின் எதிர்காலச் சமூக பொருளாதார அரசியல் இருப்பு கேள்விக்குறியே. முஸ்லிம் பெரும்பான்மைத் தேர்தல் தொகுதிகளின் கீழும், முஸ்லிம் பெரும்பான்மை நிர்வாக அலகுகளின் கீழும், முஸ்லிம் பெரும்பான்மை உள்ளூராட்சி அலகுகளின் கீழும் இருந்த காரணத்தால் அம்பாறை மாவட்டத்தில் தமிழர் வாழ் பிரதேசங்கள் முஸ்லிம் குடியேற்றங்களினால் எவ்வாறு காவு கொள்ளப்பட்டன என்பதற்கு "ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் உதாரணமாகும்.

கல்முனை

மட்டக்களப்புக் கச்சேரியிலுள்ள பதிவேடுகளின் படி கல்முனைப் பட்டினமானது நூறு வீதம் தமிழர்களையே கொண்டிருந்தது. கல்முனை வேறு, கல்முனைக்குடி வேறு. இரண்டும் வெவ்வேறு தனித்தனியான கிராமங்கள். கல்முனைப் பட்டினமானது வடக்கே தமிழ் கிராமமான பாண்டிருப்பையும், தெற்கே முஸ்லிம் கிராமமான கல்முனைக்குடியையும் கிழக்கே வங்காள விரிகுடாக் கடலையும் மேற்கே கிட்டங்கி வாவியையும் கரவாகு மேற்கு (சேனைக்குடியிருப்பு) கிராம சபையையும் எல்லையாகக் கொண்டு விளங்கிற்று. கல்முனைப் பட்டினத்தின் வடக்கு எல்லை தாளவெட்டுவான் வீதியும் தெற்கு எல்லை தரவைப் பிள்ளையார் கோயில் வீதியும் ஆகும். கல்முனைப் பட்டினம் மூன்று கிராமத்தவர் பிரிவுகளாகப் பிரிக்கப்பெற்றிருந்தது. கல்முனையையும் கல்முனைக் குடியையும் பிரிக்கும் எல்லையாகச் சுமார் 400 வருடங்கள் பழைமை வாய்ந்த தரைவைப் பிள்ளையார் கோயிலின் முன்பாக எதிர்ப்புறமாகக் கிழக்கே கடற்கரையை நோக்கிச் செல்லும் "தரவைப் பிள்ளையார் கோயில் வீதி"யே விளங்கிற்று.




தம்பியப்பா கோபாலகிருஸ்ணண்

உண்மையில் கோப்பை உடைத்தான் சந்தி உன முன்னர் அழைக்கப்பெற்றதும் தற்போது "செயிலான் வீதி" என அழைக்கப்பெற்றதுமான இடத்திலிருந்துதான் கல்முனைத் தமிழரின் பாரம்பரிய வாழிவிடப் பிரதேசம் வடக்கு நோக்கி இருந்தது. ஆனால் காலவரையில் முஸ்லிம்கள் அப்பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டதாலேயே தமிழர்களின் பிரதேசம் தரவைப் பிள்ளையார் கோயில் வரை தள்ளப்பட்டது.

இதே போன்றுதான் கல்முனைக்கு வடக்கே தற்போது "சீப்பலஸ்" கடைக்கு முன்பாக உள்ள பெரிய நீலாவணை – மருதமுனை எல்லை வீதி என முன்னர் அழைக்கப்பெற்ற (இப்போது அக்பர் வீதி என அழைக்கப்பெறுகிறது) வீதியிலிருந்துதான் பெரியநீலாவணைத் தமிழ்க் கிராமம் ஆரம்பமானது. ஆனால் காலவரையில் இப்பகுதியையும் முஸ்லிம்கள் ஆக்கிரமித்துக் கொண்டதால் இப்போது பெரிய நீலாவணைக் கிராமத்தின் தெற்கு எல்லை தற்போதைய "குப்தா" வீதி வரை சுருங்கிவிட்டது.

பொதுமராமத்து இலாகாவினால் (Public Works Department) நிர்மாணிக்கப்பெற்ற "கல்முனை" பெயர்ப் பலகை முன்பு கல்முனைத் தரவைப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் இருந்தது. இப்பேயர்ப் பலகை அப்போதைய கல்முனைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினரின் அனுசரணையுடன் திட்டமிட்ட முறையிலே கல்முனைக் குடி ஸாகிரா கல்லூரி வளவுக்கு முன்பாக நகர்த்தப்பட்டது. முஸ்லிம் கிராமமான கல்முனைக் குடியைத் தமிழ் கிராமமான கல்முனையுடன் இணைத்து எதிர்காலத்தில் கல்முனைக் குடியையும் கல்முனையின் பகுதியாகச் சித்தரித்துக் கல்முனையில் தமிழர்களைச் சிறுபாண்மையாக்கும் திட்டத்தின் முதல் அங்கமே மேற்கூறப்பெற்ற பெயர்ப்பலகை நகர்த்தப்பெற்ற நிகழ்வாகும்.

ஆரம்பத்தில் மூன்று கிராமத் தலைவர் பிரிவுகளாகப் பிரிக்கப்பெற்றிருந்த கல்முனைப் பட்டினம் 1892 ஆம் ஆண்டின் 18ம் இலக்க கட்டளைச் சட்டத்தினால் நிறுவப்பெற்ற சபையொன்றினால் நிருவகிக்கப்பெற்றது. 1947ம் ஆண்டுவரை கல்முனையின் மூன்று கிராமசேவையாளர் பிரிவுகளும் (குறிச்சிகளும்) நூறு வீதம் தமிழர்களையே கொண்டிருந்தன. பின்பு 1946ம் ஆண்டின் 3ம் இலக்கப் பட்டின சபை கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் கல்முனை உள்ளூர் சபையானது. (Sanitory Board) பட்டினசபையாக உருவாக்கப்பெற்ற போது கல்முனைக்குத் தெற்கே நான்கு பிரிவுகளைக் கொண்டிருந்த கல்முனைக் குடி முஸ்லிம் கிராமமும் கல்முனையுடன் இணைக்கப்பெற்று ஏற்கனவே இருந்த கல்முனையின் மூன்று பிரிவுகளுடன் சேர்த்துத் தொடர் இலக்கமாக வருமாறு கல்முனைக்குடியின் 4ம், 5ம், 6ம், 7ம் வட்டாரங்களாக்கப்பெற்றன. அதேவேளை கல்முனைக்கு வடக்கே கல்முனைக்கு மிக அண்மித்ததாக அமைந்திருந்த பாண்டிருப்பு, சேனைக் குடியிருப்பு, நற்பிட்டிமுனை ஆகிய தமிழ்க் கிராமங்கள் கல்முனைப் பட்டின சபையின் கீழ் கொண்டுவரப்படவில்லை. கல்முனைப் பட்டின சபையில் தமிழர்களைச் சிறுபான்மையாக்கும் மறைமுகத்திட்டத்தின் மற்றொரு அங்கமே இது.

கல்முனைப் பட்டின சபைக்குரிய (Town Council) வட்டாரங்கள் வகுப்பின் போதும் தமிழர்கள் பாதிப்புற்றார்கள். வட்டாரங்கள் வகுக்கப்பெற்ற போது தமிழர் பிரதிநிதித்துவத்தைக் குறைப்பதற்காகக் கல்முனை 3ம் குறிச்சியை "மாரியார் வீதி" எனப்படும் வீதியை எல்லையாகக் கொண்டு இரண்டாகப் பிரித்து வடக்கே உள்ளவர்களை கல்முனை 2ம் குறிச்சியுடன் சேர்த்து 2ம் வட்டாரம் எனவும், தெற்கே உள்ள நபர்கள் கல்முனை குடியின் முதலாம் குறிச்சியின் ஒரு பகுதியுடன் சேர்த்து 3ம் வட்டாரம் எனவும் அமைத்தனர். இதனால் கல்முனை 3ம் குறிச்சித் தமிழர்கள் இரண்டு வட்டாரங்களில் பிரிக்கப் பெற்றார்கள். உண்மையில் கல்முனை 3 குறிச்சிகளும் கல்முனை குடியில் 4 குறிச்சிகளும் இணைக்கப்பெற்று உருவான கல்முனை பட்டினசபையானது அதன் 1ம், 2ம், 3ம் வட்டாரங்கள் தமிழ் வட்டாரங்களாகவும் 4ம், 5ம், 6ம், 7ம் வட்டாரங்கள் முஸ்லிம் வட்டாரங்களாகவும் வருமாறு உருவாக்கப் பெற்றிருக்க வேண்டும். அப்படி உருவாகி இருந்தால், கல்முனை பட்டின சபையின் 7 வட்டாரங்களில் 3 வட்டாரங்கள் தமிழர்களுக்குரியதாகவும் 4 வட்டாரங்கள் முஸ்லிம்களுக்கு உரியதாகவும் அமைந்திருக்கும். ஆனால் மேற்குறிப்பிட்டவாறு கல்முனையின் 2ம் குறிச்சி தமிழர்கள் இரண்டு வட்டாரங்களில் பங்குபோடப்பெற்றமையால் கல்முனை பட்டினசபையின் 7 வட்டாரங்களில் 5 வட்டாரங்கள் முஸ்லிம் பெரும்பான்மையாகவும் 2 வட்டாரங்கள் மட்டுமே தமிழ் பெரும்பான்மையாகவும் வருமாறு திட்டமிட்டு உருவாக்கப்பெற்றது. கல்முனை பட்டின சபையின் தமிழ் உறுப்பினர்களைக் குறைக்கும் திட்டமே இது.

--- தொடரும் ---



# நடந்தாய் வாழி களனி கங்கை ...... அங்கம் 08

## களனி பாலத்திற்கும் ஆமர்வீதிக்கும் நடுவே தோன்றிய பெரிய நிறுவனங்களின் சுவடுகள்

இந்தியாவில் பெரும்பாலான நதிகளுக்கு பெண்களின் பெயர்தான் சூட்டப்பட்டுள்ளன. அங்கு மத்திய - மாநில அரசுகளிடம் நதிநீர் இணைப்புத்திட்டங்களும் உருவாகி, விவாதங்களும் போராட்டங்களும் தொடருகின்றன.

பெண்களின் பெயர்களை நதிகளுக்கு சூட்டினால் எப்படித்தான் " இணைப்பு" வரும்...? என்று அண்மையில் ஒரு முகநூல் குறிப்பு வேடிக்கையாக சொல்லியிருந்தது.

இலங்கை, இந்தியாவை விட பலமடங்கு சிறிய நாடு. இன்னும் சொல்லப்போனால், சிறிய தீவு. இந்தத்தீவுக்குள் பல நதிகள் இருந்தபோதிலும் அவை வற்றாத ஜீவநதிகளாக விளங்கியமையால், நதி நீர் இணைப்பு என்ற பேச்சுக்கே இடமிருக்கவில்லை.

மகாவலி கங்கையை வடக்கே திருப்பும் திட்டம் இலங்கை அரசியலில் ஒரு தனிக்கதை. இது இவ்விதமிருக்க, களனி கங்கை தீரத்தில் தோன்றிய தொழிற்சாலைகள் பல ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கியிருக்கின்றன. வெளிநாட்டு ஏற்றுமதி வர்த்தகத்திற்கும் இலங்கை பொருளாதாரத்திற்கும் வளம் சேர்த்துள்ளன.

அரசின் நிருவாகத்தின் கீழும் தனியார் துறையினரிடத்திலும் பல தொழிற்சாலைகள் இந்தப் பிரதேசத்தில் நீண்டகாலம் இயங்கின. சில 1983 வன்செயல்களுக்குப் பின்னர் மறைந்தன.





களனி பல்கலைக்கழகத்திற்கு சமீபமாகத்தான் டயர் உற்பத்தி கூட்டுத்தாபனம் இயங்குகிறது. இலங்கை ஏற்றுமதி வர்த்தகத்தில் ரப்பரும் முக்கிய இடத்தை வகிக்கிறது. களனி கங்கை ஓடும் திசைக்கு அருகாமையில் வெல்லம்பிட்டிய முதல் அவிசாவளை, தெஹியோவிட்ட, தெரணியகல, இரத்தினபுரி, பெல்மதுளை, இறக்வானை, காவத்தை முதலான பிரதேசங்களில் ஏராளமான ரப்பர் தோட்டங்களை பார்த்துவருகிறீர்கள்.

இலங்கையில் தேயிலை பயிர்ச்செய்கைக்கு அடுத்ததாக திகழ்ந்தவை, ரப்பரும் கொக்கோவும். இலங்கையில் விளையும் இந்தத் தாவரங்களுக்கு உலக சந்தையில் பெருமதிப்பு ஒருகாலத்தில் இருந்தது.

இவற்றின் மதிப்பிறக்கத்திற்கும் மாறி மாறி பதவிக்கு வந்த ஆட்சியாளர்களும் அவர்கள் செய்துகொண்ட ஒப்பந்தங்களும்தான் காரணம். ஆயிரக்கணக்கான இந்திய வம்சாவளி தோட்டத்தொழிலாளர்கள் நாடுகடத்தப்பட்டு "ஒப்பாரிக்கோச்சி" களில் தலைமன்னார் ஊடாக இராமேஸ்வரம் சென்று தமிழகத்தை வந்தடைந்தனர்.

தேயிலையும் ரப்பரும் கொக்கோவும் ஏற்றுமதியானது போன்று அவற்றை உற்பத்தி செய்வதற்காக, காடுகளையும் மலைகளையும் செப்பனிட்டு, அட்டைக்கடிகளுக்கும் மண்சரிவுகளுக்கும் மத்தியில் ஒரு அறை லயன் குடியிருப்புகளில் வாழ்ந்த அந்த ஏழை மக்களை, தேசத்திற்கு அறுபது சதவீதமான அந்நிய செலவாணியை ஈட்டித்தந்த அந்த அப்பாவி மக்களை நாடற்றவர்களாக்கி துரத்தியடித்த ஆட்சியாளர்கள் தேசத்தின் பொருளாதாரத்தையும் நலிவடையச் செய்தார்கள்.

களனியில் டயர் உற்பத்தித் தொழிற்சாலை இருந்த அதே சமயம் ரப்பர் பாலில் பதனிடப்பட்ட ரப்பர் படங்குகளை மக்கள் பாவனைக்கான பல்வேறு உற்பத்திகளுக்கும் விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களும் கொழும்பு வடக்கு, மத்தி முதலான பிரதேசங்களில் பெருகியிருப்பதையும் அவதானித்திருப்பீர்கள். முக்கியமாக கிராண்ட்பாஸ் வீதி, புதிய - பழைய சோனகத்தெருக்களில் ரப்பர் படங்கு விற்பனை நிலையங்களை காணமுடியும்.

ரப்பர், கார் மற்றும் கனரக வாகனங்களுக்கு டயர் தயாரிப்பதற்கு மூலப்பொருளாக இருப்பதுபோன்று, மக்களின் பாதணிக்கும் தேவையாக இருக்கிறது. நிலத்தில் பயிராக உற்பத்தியாகி, பாலைத்தந்து, அந்தப்பாலே உலரவைக்கப்பட்ட படங்குகளாகி, வாகனங்கள் ஓடுவதற்கு டயர்களாக உருமாறியும், மக்களின் கால்களுக்கு பாதணிகளாகவும் மாறி மீண்டும் நிலத்திலேயே தேய்ந்து அழிந்துவிடும் தியாகிதான் இந்த ரப்பர்.

குழந்தைக்கு பாலூட்டும் தாய்க்கு சமமானவள்தான் ரப்பர் மரம். தாயின் இரத்தம் தாய்ப்பாலாகி குழந்தைகளை காத்து மனிதர்களாக்குவது போன்று ரப்பர் மரத்தின் இரத்தமே பாலாகி மக்களின் தேவைகளுக்கும் பாவனைகளுக்கும் உதவிவருகின்றது.

ரப்பரில் செய்யப்பட்ட டயர்கள் பொருத்தப்பட்ட வாகனங்களில் பயணம் செய்யும்போதும், ரப்பரில் தயாரிக்கப்பட்ட பாதணிகளுடன் ஒய்யாரமாக நடக்கும்போதும் நாம், இந்த ரப்பரின் தாயை ஒருகணம் நினைத்துப் பார்க்கின்றோமா...???!!!


இலங்கையில் பிரசித்தமான ஆர்.்.பிக்கோ தயாரிப்புகளுக்கும் மூலப்பொருள் ரப்பர்தான். களனி கங்கை பாலத்தை கடந்து தலைநகருக்குள் பிரவேசிக்கும் போது எதிர்படும் ஆமர்வீதிக்கும் களனி கங்கைக்கும் நடுவிலிருக்கும் விஸ்தாரமான பிரதேசத்திற்குள்தான் எத்தனை வகையான தொழிற்சாலைகள். பல ஆயிரம் மக்களின் வாழ்வாதாரமாக விளங்கியிருக்கும் அவற்றின் வரலாறுகளே தனித்தனி கதைகள்தான்.

வாசகர்களே, உங்களுக்கு நினைவிருக்கிறதா..? ஸ்டார் பிராண்ட் இனிப்புவகைகள். ்.பிராங்கோ சொக்கலேட். இவற்றை உற்பத்தி செய்த நிறுவனம் மொடர்ண் கொன.்.பக்ஷனரி ஸ்தாபனம், இங்குதான் 1983 இனக்கலவரத்திற்கு

ரஸஞானி

முன்னர் ஸெயின்ஸ்தான் தியேட்டருக்கு பக்கத்தில் இயங்கியது.

அந்தக்கட்டிடத்தின் சுவடுகள் படிப்படியாக மறைந்துவருகின்றன. ஸெயின்ஸ்தான் தியேட்டரின் சுவடுகளும் மறைந்துவிட்டன. இலங்கையெங்கும்




ஸ்டார் இனிப்புவகைகளை விநியோகித்த அந்தப்பெரிய நிறுவனத்தில்தான் ஈழத்தின் மூத்த எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப்



தெளிவத்தை ஜோசப்

கணக்காளராக நீண்டகாலம் பணியாற்றினார்.

1983 வன்செயல்களுடன் அந்த ஸ்டார் நிறுவனமும் மரணித்தது. தெளிவத்தை ஜோசப்பும் மற்றும் பல ஊழியர்களும் வேலையை இழந்தனர். எவ்வாறு அந்த நிறுவனம் வன்செயலின்போது தாக்கி அழிக்கப்பட்டது, சூறையாடப்பட்டது முதலான விபரங்களை நேரில் கண்ட சாட்சியாக அவர் எழுதியிருக்கும் நாவல்தான் "நாங்கள் பாவியாக இருக்கிறோம் அல்லது 1983" என்ற நூல்.

அந்தச்சம்பவத்தில் அவர் தெய்வாதீனமாக உயிர் தப்பியிருக்கிறார். அருகிலிருந்த செயின்ஸ்தான் தியேட்டரில் இரண்டு நாட்கள் மறைந்திருந்து ஊண் உறக்கமின்றி அவதிப்பட்டுள்ளார்.

களனி கங்கை பாலத்தைக் கடந்து தலைநகரத்திற்குள் பிரவேசிக்கும் பாதையிலும் அதற்கு சமாந்தரமாகச் செல்லும் பாதையிலும் பல தொழிற்சாலைகள் தமிழ், முஸ்லிம் வர்த்தகர்களுக்குச் சொந்தமானவை. வெளிநாட்டு நிறுவனங்கள் சிலவும் இவற்றில் மூலதனம் இட்டிருக்கலாம்.

பவர் அன்ட் கம்பனியின் வளாகம் முன்புறம் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா வீதியிலிருந்து ( இதற்கு முன்பிருந்த பெயர் பிறிண்ஸ் ஒ.்.ப் வேல்ஸ் அவனியூ) பின்புறம் கிராண்ட் பாஸ் வீதிவரையில் நீடிக்கிறது. பின்புறத்தின் முகப்பிற்கு முன்பாகத்தான் பிரசித்தி பெற்ற சுலைமான் நர்ஸிங் ஹோம் என்ற மருத்துவமனை வருகிறது.

இதனை கடந்து சென்றால் ஈஸ்வரன் பிரதர்ஸின் நிறுவனத்தின் வளாகமும் அதனுள்ளே, மொரிஸீயஸ் நாட்டுக்கான இலங்கை பிரதித்தூதுவராக இருந்த தெய்வநாயகம் ஈஸ்வரன் அவர்களின் அலுவலகமும் அமைந்துள்ளது. அவர் அண்மையில் மறைந்துவிட்டார்.
அவரது அந்த நிறுவனத்தையும் கடந்து கிராண்ட் பாஸ் வீதியில் சென்றால் 80 ஆண்டுகாலத்திற்கும் மேற்பட்ட பழமையான வீரகேசரி பத்திரிகை நிறுவனம் 185 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ளது.

அதனையடுத்து ஜபர்ஜி பிரதர்ஸ், லிவர் பிரதர்ஸ் முதலான பெரிய நிறுவனங்களை காணமுடியும். அவற்றுக்கு மத்தியில் பிரபல எண்ணெய் ஏற்றுமதி நிறுவனமான கிருஷ்ணா கோப்பரேஷன் அமைந்துள்ளது. இதன்

தொடர்ச்சி... (பக்கம் -23 )



# பாடும் மீன்மகள் வாழும் வாவிக்கு அச்சுறுத்தல்

“மீன் மகள் பாடுகிறாள் வாவி மகள் ஆடுகிறாள் மட்டுநகர் அழகான மேடையம்மா“... இது மட்டக்களப்பின் அழகினைப் பாடும் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் வரிகள். உண்மையில் மட்டக்களப்பிற்கு அழகு சேர்க்கும் வளமாக இம்மாவட்டத்தில் நீண்டும் நெளிந்தும் காணப்படும் வாவி விளங்கி வருகின்றது. ஈழத்தின் கரையோரச் சமவெளியின் சிறப்பு அம்சங்களுள் குறிப்பிடத்தக்க ஒன்றாக வாவியுடன் சேர்ந்த இச் சதுப்பு நிலப்பகுதி அடையாளப்படுத்தப்பட்டுள்ளமை நாம் அறிந்ததே.

கிழக்கில் குறிப்பாக மட்டு அம்பாறை மாவட்ட மக்களின் சமூக பொருளாதார பண்பாட்டு அம்சங்களைக் கட்டமைப்பதில் மட்டக்களப்பின் வாவி பெரும்பங்கு வகித்து வந்துள்ளமையினை நாங்கள் மட்டக்களப்பின் கடந்த கால வரலாற்றினைக் கற்பதனூடாகத் தெளிவாக விளங்கிக் கொள்ள முடிகின்றது.

காலனித்துவக் காலத்திற்கு முற்பட்ட

## குறுக்கு அணைகளால், பாலங்களால் ஆழம் இழந்துபோம பெரியதுறை

மட்டக்களப்பின் போக்குவரத்து மார்க்கமாக வாவியே விளங்கி வந்துள்ளது. மட்டக்களப்பின் பழந்தமிழ்க் கிராமங்கள் பலவும் வாவிக்கரையினை அண்டியே அமைந்துள்ளன.

ஈழத்தின் வடமுகத்திலிருந்தும், இந்தியாவின் கரையோரங்களிலிருந்தும் காலத்திற்குக் காலம் மட்டக்களப்பு நோக்கிப் பல்வேறு குடிப்பெயர்வுகள் நடைபெறுவதற்கு இந்த வாவி காரணமாக இருந்துள்ளதை அறிய முடிகின்றது. வங்காள விரிகுடாவின் பெருங்கடலிலிருந்து முகத்துவாரமூடாக மட்டக்களப்பின் உட்பகுதிக்குள் இலகுவாக நுழைவதற்கேற்ற கடல் நீரேரியாக மட்டக்களப்பு வாவி காணப்படுவதுடன், மனிதர்கள் வாழ்வதற்கான வாழ்வாதாரங்களை இலகுவாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய

வளங்கள் பல நிறைந்த பகுதியாகவும் விளங்கியதனால் காலத்திற்குக் காலம் பல குடிப்பரம்பல்கள் இங்கு இலகுவாகவும் ஆர்வத்துடனும் இடம்பெற்றுள்ளமையினைப் பற்றி அறிந்து கொள்ள முடிகின்றது.

வெவ்வேறு கால கட்டங்களில் ஏற்பட்ட குடிப்பரம்பல்களை மட்டக்களப்புச்

**து.கௌரீஸ்வரன்**

சமூகங்கள் எனும் அறாத் தொடர்ச்சியுள்ள ஒற்றுமைக்குள் உட்படுத்துவதிலும் இந்த நீண்ட வாவி காரணமாக இருந்துள்ளது. பல்வேறு சமூகங்கள் தமக்குள் எடுத்தும் கொடுத்தும் பயணிப்பதற்கான பண்பாட்டு ஒருமைப்பாட்டிற்கான பாதையினை இந்த வாவி உருவாக்கிக் கொடுத்துள்ளது.

ஈழத்தின் மத்திய மலை நாட்டிலிருந்து வரும் மேலதிக வெள்ள நீரை கடலுடன் சங்கமிக்கச் செய்வதற்கு மட்டக்களப்பு வாவி பெரும் பங்களிப்பை வழங்கி வந்துள்ளது. ஈழத்தின் பெருமளவான ஆறுகள் இயற்கையாகவே மட்டக்களப்பு வாவியுடன் தொடர்பினைக் கொண்டு காணப்பட்டிருந்தன. இந்த ஆறுகளின் தொடர்பு காரணமாக மட்டக்களப்பின் நீர்ப்பாசணம் சிறந்தோங்கியதுடன் நெல் உற்பத்தி அதிக அளவில் நடைபெற்றுள்ளது. இதனாலேயே போத்துக்கீசர் மட்டக்களப்பைப் பார்த்து நெற்களஞ்சியம் என வியந்து கூறினார்கள். சுதந்திரத்தின் பின்னரான ஆறுகளைத் திசை திருப்பும் திட்டத்தினையடுத்து ஈழத்தின் ஆறுகளுக்கும் மட்டக்களப்பு வாவிக்கும் இடையிலான இணைப்புக்கள் பெருமளவில்



துண்டிக்கப்பட்டு விட்டன. இது தனித்த கதை.

ஆனாலும் மட்டக்களப்பு வாவி மட்டக்களப்பின் சமூகங்களை யாரிடமும் கையேந்தும் அடிமைகளாக ஆக்கி விடவில்லை. கடலுடன் தெடர்புபட்ட

உவர்த்தன்மையுடன் கூடிய சதுர்ப்பு நிலத்தையும் கண்டல் காடுகளையும் உயிர்ப்புடன் பேணிய மட்டக்களப்பு வாவி, பெறுமதிமிக்க இறால் வகைகளையும், நண்டு இனங்களையும் பல்வேறு பருவகால மீனினங்களையும் பெருகச் செய்து மட்டக்களப்பின் மனிதர்களைச் சுயசார்பாக வாழ வழிவகுத்துத் தந்தது.

உலகில் தசாப்தகால உள்நாட்டுப் போர்கள் நடைபெற்ற நாடுகளில் உடல்வலுக் குன்றிய போசாக்கற்ற மனித அவலம் உருவாகிய அனுபவங்களுடன் ஒப்பிடுகையில் மூன்று தசாப்த போர்க் காலத்தில் மூழ்கிய மட்டக்களப்பில் அத்தகைய போசாக்கற்ற மனிதர்கள் உருவாக முடியாமல் தடுத்ததில் இந்த வாவி பெரும் பங்காற்றியுள்ளது. வாவி தந்த உணவு வகைகள் போர்க்காலத்திலும் பொருளாதாரத் தடைக் காலத்திலும்

## மூன்று தசாப்த போராலும் மட்டுநகர் மக்களை ஒடுக்க முடியாமல் தடுத்த ஜீவ வாவி

மக்களின் உடலை உறுதியாக்கி நின்றது.

மூர்க்கமாக நிலத்தை நோக்கி வந்த ஆழிப்பேரலைகள் மனிதக் குடியிருப்புக்களில் முழுமையாகத் தாக்காமல் அவற்றை வாவி வழியாக உள்வரச் செய்து பேரலைகளின் வேகத்தைக் குறைத்து தணிப்புச் செய்ததில் வாவிகள் பங்களிப்பதாக சூழலியலாளர்கள் கூறுகின்றார்கள். இந்த விதமாக மட்டக்களப்பின் வாவியை அண்டிய பல பழைய கிராமங்கள் ஆழிப்பேரலையின் கோரத்தாண்டவத்திலிருந்து தப்பிப் பிழைக்க இந்த வாவிகள் காரணமாக இருந்ததை நாம் கண்டோம்

இவ்வாறு மட்டக்களப்பின் சமூக பொருளாதார பண்பாட்டு வரலாற்றில் முக்கிய பங்களிப்பை வழங்கி வரும் வாவிகள் தற்போதைய கால கட்டத்தில் அவசர அபிவிருத்தி எனும் செயற்பாடுகளினால் பெரும் அச்சுறுத்தலுக்குள்ளாகி வருவதனைக் காண முடிகின்றது.

அதாவது வாவியின் உயிர்ப்பிற்குரிய பாதுகாப்பு கவசமாக விளங்கும் சதுர்ப்பு நிலக் கண்டல் காடுகள் அழிக்கப்படுவது வேகமாக நடைபெறுகின்றது. இது தொடர்ந்தால் எதிர் காலத்தில் வாவியின் பரப்பினைக் குறுக்கமடையச் செய்வதுடன்

மட்டக்களப்பின் உயிர்ப்பல்வகைமையில் பெருந்தாக்கத்தையும் செலுத்தி விடும்.

அடுத்து முக்கியமாக வாவிகளை ஊடறுத்து அமைக்கப்படும் பாதைகள் பாலங்கள் வாவியின் இயல்பான நீரோட்டத்தினைப் பாதிக்கும் வகையிலேயே பெரும்பாலும் அமைக்கப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக நீண்ட கால அடிப்படையில் வாவிகள் மெல்ல மெல்ல வற்றி வருவதனைக் காண முடிகின்றது.

16 ஆம் 17 ஆம் நூற்றாண்டுகளில் மட்டக்களப்பின் முக்கிய இறங்கு துறையாக விளங்கிய சூரியத்துறை என அழைக்கப்பட்ட பெருந்துறை (திருப்பெருந்துறை) யினை அண்டியுள்ள வாவியின் நீரோட்டம் இயல்பாக இடம்பெற முடியாத நிலையில் பல தசாப்தங்களாக இருந்து வருவதால் அதன் அளவு குறுகி வருவதனைக் காண முடிகின்றது. இது இப்படியே போனால் ஒரு நூற்றாண்டில் இந்த வாவி இல்லாமலேயே ஆகி விடுவதனைத் தவிர்க்க முடியாது போய்விடும்.

எனவே! வாவிகளுக்கு குறுக்கே அமைக்கப்படும் பாதைகள் பாலங்கள் தொடர்பான அபிவிருத்திச் செயற்றிட்டத்தில் வாவிகளின் இயல்பான நீரோட்டத்தைப் பாதுகாக்கும் ஆர்வமும் அக்கறையும் உருவாக வேண்டியது அவசியமாகவும் அவசரமாகவும் உணரப்படுகின்றது.

மட்டக்களப்பின் அழகினையும், பெருமைகளையும் பாடுவதற்கும் பேசுவதற்கும் அடிப்படையாக வாவியினைப் பாதுகாக்க வேண்டியது மட்டக்களப்பை நேசிக்கும் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

## கவிதை

### மதுவைக் குடித்து மயங்காதே!

சாராயம் தன்னைக் குடிக்காதே –
வீணாய்
சாலையில் வீழ்ந்து கிடக்காதே
வேரோடு அழிக்கும் உந்தனை – நோயில்
வீழ்ந்த பின்தான் விளங்கிடும்
பேரோடு புகழும் போயிடும் - நீ
பெற்ற பிள்ளைகள் பசியில் வாடிடும்
யாருமேயுன்னை மதித்திடார் - நீ
யாருக்கும் உதவா தெருநாயாவாய்.

கள்ளு கஞ்சா போதைப் பொருளெல்லாம்
காசைக் கரைத்து நோய் தரும்
குள்ளக் குணம் படைத்தவை - இவற்றை
குப்பையில் போட்டு எரித்திடு!
உள்ளிளுத்து எரிக்கும் சீக்ரெட் ஒன்றின்
புகை
ஒரு நிமிட ஆயுளைக் குறைக்குதென்று
சொல்லியுள்ளனர் ஆய்வாளர்கள் - இதை
சொன்னால் உனக்கு புரியுமா?

இறைவன் தந்த கைகளிற்கு
இயன்றவரை உழைத்து வாழ்ந்திடு
பறக்கும் பறவைகள் முதல்
விலங்குக்கெல்லாம்
பகுத்தறிவு கிடையாது - இருந்தும்
மறந்தும் கூட மதுவைக் குடித்து
மயங்கிப் போதையிலே வீழ்வதில்லை!
ஆறறிவு படைத்த மனிதன் மட்டுமேனோ
– மதுவுக்கு
அடிமையாகி வாழ்வில் தவிக்கின்றான்.

கவிஞர். க.ரெட்ணையா
மட் / கன்னன்குடா – 02



# மீன்பாடும் தேனாட்டில் பயணியின் பார்வையில்...

## ’ மட்டக்களப்புத் தமிழகம் ’ தந்த பண்டிதர் வி.சீ. கந்தையா



வி.சி கந்தையா

ஒவ்வொரு ஊருக்கும் வீதிக்கும் காரணப்பெயர் இருக்கின்றது. இலங்கையில் கிழக்குமாகாணத்தில் மீன்பாடும் தேன்னாடு என வர்ணிக்கப்படும் மட்டக்களப்புக்கும் இனிமையான தேனுக்கும் நெருங்கிய தொடர்பிருப்பதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

“மட்டு“ என்ற சொல்லுக்கு “ தேன்“ என்றும் அர்த்தம் இருக்கிறதாம்! மட்டக்களப்பை தழுவிச்செல்லும் இந்து சமுத்திரத்தாயிடத்தில் தாழமுக்கம் அடிக்கடி தோன்றி, பேரலைகள் எழுச்சிபெறுவதுண்டு. சமுத்திரத்தாயின் நிலமட்டத்தில் அதிர்வுகள் வரும்போது, அங்கிருந்து சீறிப்பாயும் கடல் நீர் கரைக்கு வெளியே சமதரைகளை வந்தடைந்து தங்கிவிடுகிறது. அவ்வாறு தோன்றும் நீர்நிலைகள், களப்புகளாகிவிடுகின்றன. இந்த நீர்மட்டம் வங்கக்கடலின் நீர்மட்டத்திற்கு சமமாகவே இருப்பதனால், “மட்டம் களப்பு “ என காரணப்பெயராகி, காலப்போக்கில் மட்டக்களப்பு என மருவிவிட்டதாகவும் சொல்லப்படுகிறது.

சிங்கள மக்கள் “ மடக்களப்புவ“ என அழைக்கின்றனர். “மட “ என்றால் சதுப்பு என அர்த்தப்படுகிறது. இந்தப்பிரதேசம் நீர் வளம் நில வளம் நிரம்பிய விவசாய பூமி. அதனால் இந்தச் சதுப்பு நிலப்பிரதேசத்திற்கு அவர்கள் வைத்தபெயர் “ மடக்களப்புவ“.

ஆங்கிலேயர் எமது தேசத்தை ஆக்கிரமித்தவேளையில் பொன்விளையும் பூமியாகத்திகழ்ந்த மட்டக்களப்பு தானியக் களஞ்சியமாகவும் விளங்கியிருக்கிறது. அதனால் BATTICALOA என பெயர் சூட்டினர் எனவும் சொல்லப்படுகிறது.

வங்காளக் கடலோரத்தில் வெருகல், கதிரவெளி, வாழைச்சேனை, கல்குடா, சித்தாண்டி, வந்தாறுமூலை, ஏறாவூர், சத்துருக்கொண்டான், தாண்டவன்வெளி, மட்டக்களப்பு, கல்லடி உப்போடை, காத்தான்குடி, மண்முனை, செட்டிபாளையம், களுவாஞ்சிக்குடி, பட்டிருப்பு, குறுமண்வெளி, மகிழுர், கல்லாறு, பாண்டிருப்பு, கல்முனை, காரைதீவு, சம்மாந்துறை, மல்வத்தை, செங்கற்பட்டி, அக்கரைப்பற்று, கோளாவில், தம்பிலுவில், திருக்கோயில், கோமாரி, பொத்துவில், பாணம, சன்னாசிமலை, உகந்தமலை, குமுணை என தமிழ்ப்பேசும் மக்களின் ஊர்களை நாம் தரிசிக்கலாம்.


மட்டக்களப்பின் வரைபடத்தின் பிரகாரம், வங்காளக்கடலின் கரையைக்கடந்து பிரதேசத்திற்குள் பிரவேசித்தால் மேலும் பல தமிழ்க்கிராமங்கள் வருகின்றன. புளியந்தீவு, ஆரைப்பற்றை, பழுகாமம், போரதீவு, மண்டூர், நீலாவணை, சொறிக்கல்முனை, வீரமுனை.

இங்கு குறிப்பிடப்படும் ஊர்களிலிருந்தெல்லாம் பல தமிழ் அறிஞர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கல்விமான்கள், சமயப்பெரியார்கள், கவிஞர்கள் தோன்றியிருக்கிறார்கள்.

அவர்களில் சிலர், தாங்கள் பிறந்த ஊருக்கும் பெருமைதேடித்தரும் வகையில் ஊரின்பெயரையும் இணைத்து கலை, இலக்கிய உலகில் தமது இருப்பை தக்க வைத்திருக்கிறார்கள்.

நீலாவணன், மருதூர்க்கொத்தன், மருதூர்கனி, மருதூர்வாணன், கல்முனை பூபால், பாலமுனை ஃபாரூக், வாகரைவாணன், கல்லோடைக்கரன், “பாடும் மீன்“ ஸ்ரீகந்தராசா, மண்டூர் அசோக்கா, அக்கரையூர் ஆதாம், ஓட்டமாவடி அறபாத், ஒலுவில் அமுதன், களுவாஞ்சிக்குடி யோகன், ஆரையூர் அருள், ஆரையூர் அமரன், மருதூர் பாரி, தாழையூர் செல்வநாயகம், கிண்ணையடி எஸ்.பாண்டியன், வெல்லவூர்க்கோபால், மண்டூர் தேசிகன், பாண்டியூரான், அமிர்தகழியான், திமிலைத்துமிலன், திமிலை மகாலிங்கம், திமிலைக் கண்ணன், கோவிலூர் செல்வராஜன், அக்கரைப்பாக்கியன், அக்கரைச் சக்தி, தம்பிலுவில் யோகா, தேனூரான், கல்லாறு சதீஸ், ஆரையூர் இளவல், துறையூர் செல்லத்துரை இவ்வாறு பலர்.

இவர்களின் எழுத்துப்பணிகள் தொடங்குவதற்கு முன்பே, மண்டூரில் 1920 ஆம் ஆண்டில் ஒரு குழந்தை பிறந்திருக்கிறது. அது பின்னர் தமிழ் அறிஞராக வளர்ந்திருக்கிறது. சுவாமி




விபுலாநந்தரிடமும் புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளையிடமும் கற்றிருக்கிறது.

அவர்தான் பண்டிதர் வி. சீ. கந்தையா. இவரது தந்தையார் புலவர் வினாசித்தம்பி. தாயார் சின்னாத்தை அம்மையார்.

கந்தையா அவர்கள், யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச்சங்கம், மதுரைத் தமிழ்ச்சங்கம், ஆகியனவற்றில் படித்து, பண்டிதர் பட்டம் பெற்றவர். இலங்கைப் பல்கலைக்கழகத்திலும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் கற்றவர்.




சுவாமி விபுலாநந்தர் தொடக்கிய சிவானந்தாவில் ஆசிரியராக பணியாற்றியவர். மட்டக்களப்பு தமிழ்க்கலை மன்றத்தின் செயலாளராக இவர் பணியாற்றிய காலத்தில் 1952 இல் தமிழ் பெருவிழா நடத்தி, அதனை ஒரு மைல்கல்லாக பதியவைத்தவர். மட்டக்களப்பின் புகழ்பூத்த நாட்டுப்பாடல்கள், கூத்துகள் தொடர்பாகவும் ஆய்வுகளில் ஈடுபட்டிருக்கும் பண்டிதர் வி. சீ. கந்தையா தனது கடும் உழைப்பினால்

**முருகபூபதி – அவுஸ்திரேலியா**

எழுதி வெளியிட்ட நூல்தான் “மட்டக்களப்பு தமிழகம்”.

இதன் முதல் பதிப்பு வடபுலத்தின் குரும்பசிட்டி பெரியார் ஈழகேசரி பொன்னையா அவர்களின் நினைவு வெளியீடாக 1964 ஆம்




ஆண்டில் வெளியானது.

பின்னிணைப்பு குறிப்புகள் மற்றும் ஆவணமாகத்திகழும் படங்களும் கொண்டிருக்கும் மட்டக்களப்பு தமிழகம் 500 பக்கங்களுக்கும் மேற்பட்டது.

இது வெளிவந்த காலத்தில், வழக்கமாகவே எழுத்திலும் பேச்சிலும் அங்கதமாகவும் கேலியாகவும் பேசும் ஈழத்தின் மூத்த எழுத்தாளரும் மட்டக்களப்பில் ஆசிரியராக பணியாற்றியவரும், இந்தப்பிரதேசத்திலேயே பெண் எடுத்தவருமான “எஸ்.பொ.“ என அழைக்கப்படும் எஸ்.பொன்னுத்துரை, இந்த நூலின் உள்ளடக்கத்தை மதிப்பீடு செய்யாமல் அதன் பருமனை மாத்திரம் கவனத்தில் கொண்டு, “மட்டக்களப்பிலிருந்து இரவு புறப்படும் தபால் ரயிலில் பயணிக்கும்போது தலைக்கு வைத்துக்கொண்டு உறங்கலாம்.“ என்று சொல்லியிருக்கிறார். பொறுப்புணர்ச்சியுடன் பேசவேண்டிய அவர் பல ஆண்டுகள் கடந்து அவுஸ்திரேலியாவுக்கு புலம் பெயர்ந்து, தமிழகத்திற்கும் சிட்னிக்கும் இடையில் பயணித்துக் கொண்டிருந்தபோது தனது வாழ்க்கை சுயசரிதையை “வரலாற்றில் வாழ்தல்“ என்ற தலைப்பில் இரண்டு பாகங்களாக இரண்டாயிரம் பக்கங்களில் எழுதி வெளியிட்டார்.

அவரை நான் எப்பொழுதும் “ மாஸ்டர்“ என்றுதான் அழைப்பது வழக்கம்.

ஒரு தடவை அவர் நான் வசிக்கும் அவுஸ்திரேலியாவில் மெல்பர்ன் நகரத்திற்கு வந்திருந்த சமயத்தில், “ என்ன மாஸ்டர் ஒரு காலத்தில் பண்டிதர் வி. சீ. கந்தையா எழுதிய 500 பக்க மட்டக்களப்பு தமிழகம் நூலை தலையணையாக ஏளனப்படுத்தினீர்களே..? தற்பொழுது நீங்கள் உங்கள் சுயசரிதையை 2000 பக்கங்களில் வெளியிட்டுள்ளீர்களே..?“ எனக்கேட்டேன்.

தன்னைத்தானே கிண்டல் செய்துகொள்ளும் இயல்பிலும் திளைத்திருக்கும் எஸ். பொ., “ பண்டிதர் கந்தையா, தலைக்கு வைத்து உறங்குவதற்குத்தான் எழுதினார். நான், தலைக்கும் காலுக்கும் வைத்து உறங்குவதற்கும் ஏற்றவாறு பருமனான புத்தகம் தந்திருக்கின்றேன்“ என்றார்.

இவ்வாறெல்லாம் எமது ஈழத்து இலக்கிய உலகில் நடந்திருக்கும் சுவாரஸ்யங்களுக்கு இன்றும்தான் குறைவில்லை.
குறிப்பிட்ட மட்டக்களப்பு தமிழகம் நூலின் தேவையை கருதி அதனை அழகாக மீள்பதிப்புச் செய்திருக்கிறார்கள்,
பிரான்ஸில் இயங்கும் எக்ஸில் என்னும் இலக்கிய அமைப்பினர். எக்ஸில் எனும் பெயரில் கலை, இலக்கிய அரசியல் விமர்சன இதழும் வெளியிட்டுவந்துள்ள இந்த அமைப்பின் சார்பில் எம். ஆர். ஸ்ராலின், ஏன் இந்த இரண்டாம் பதிப்பின் தேவை வந்திருக்கிறது என்பதையும் விரிவாகச்சொல்லியிருக்கிறார்.

“வரலாறுகள் திட்டமிட்டு உருவாக்கப்படுவதும் அதிகாரத்தின் எல்லைக்குள் ஒத்தோடக்கூடிய வரலாறுகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, மற்றயவை புறந்தள்ளப்படுவதும் மனித சமூகங்களின் வாழ்வியலை துரத்திக்கொண்ருக்கிறது.

ஆதிக்கத்தின் நலங்களுடன் முரண்படாத அல்லது நலன்களுக்கு வசதியான மேட்டுக்குடிகளின் கலையிலக்கிய வடிவங்கள், மொழியியல் பண்பாட்டு அம்சங்கள் முன்னிறுத்தப்படுவது மட்டுமின்றி அவை எல்லோருக்குமானதாக திணிக்கப்படுகின்றன. இதனோடு ஒத்தோட மறுக்கின்ற அடித்தள

தொடர்ச்சி... (பக்கம் -23 )



# மூதாதையரின் காலடிகள்

## நீலாப்பழை

மூதூரிலிருந்து கிளிவெட்டி செல்லும் வழியில் மேன்காமப் பாதை வழியாக திரும்பி, மேன்காமம் கங்கு வேலிக்கு அண்மையில் நீலாப்பழை அமைந்துள்ளது. அல்லைக் கந்தளாய் வழியாக வரும் போது, சோமபுரத்தை அண்டியுள்ள அழகிய ஊர் குளமும் வயல்களும் நீரும் நெல்லும் சூழ, நம்மை வரவேற்கும் மாவலியின் தாலாட்டில் வளர்ந்த ஊர்.



கொட்டியாரத்தின் பழைய தமிழ் கிராமங்களில் இலங்கையின் வரலாற்றொடு மிக நெருங்கிய தொடர்புடைய கிராமம். சிலரது கூற்றுப் படி நீலன் பழையே நீலாப்பழையானது என்ற கருத்து இங்கு கவனத்துக்கு உரியதாயினும் நீலாப் பழை என்ற பெயரே இரண்டாயிரம் வருச பழமையை பல வரலாற்று தகவல்கள் சான்று பகர்கின்றன.

பத்தினி வழிபாடு பற்றிய ஒரு ஆய்வுகட்டுரையில்

கலாநிதி அனுசூயா சேனாதிராஜா பின் வருமாறு குறிப்பிடுவார்;

“சேரன் செங்குட்டுவன் கி.பி. 123 – 135 ஆண்டளவில் மண்ணகத்திலிருந்து விண்ணக மாந்தர்க்கு விருந்தாகச் சோதியுட் கலந்த பத்தினி அம்மனிற்கு திருச்செங்கோட்டையில் கோட்டம் அமைத்துப் பிரதிஸ்டை செய்யும்போது இலங்கை வேந்தன் கஜபாகுவிற்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. செங்குட்டுவன் பத்தினிக் கடவுளுக்கு நித்திய பூசை செய்யும்படி கட்டளையிட்டான். கோயிலை மும்முறை வலம் வந்து வணங்கி நின்றான். அப்போது அங்கு வந்த கஜவாகு மன்னன் அப்பத்தினியை நோக்கி இச்செங்குட்டுவனைப் போல் எங்கள் நாட்டில் நாங்கள் செய்யும் பூசையில் நீ எழுந்தருளி அருள் செய்ய வேண்டும் என்று பிரார்த்தித்தான். அப்போது நீ விரும்பியபடியே வரம் தந்தேன் என்று ஓர் அசரீரி ஒலி உண்டாயிற்று. கஜவாகு மன்னன் வேண்டிக் கொண்டதற்கு இணங்க சந்தண மரத்தால் செய்த கண்ணகி உருவமும் ஒரு சிலம்பும் சந்தண மரப்பலகையால் செய்து பேளையில் வைத்து கஜவாகு மன்னனிற்குச் செங்குட்டுவன் கொடுத்தான். அதைப் பாண்டிய அரசன் வெற்றிவேற் செழியன் யானைமேல் சந்தண மரப்பலகையால் செய்த பெட்டியையும் அரசனையும் ஏற்றி வந்து வேதாரணியத்தில் விட்டான். அங்கிருந்து கப்பலில் ஏறி, காரைநகரிற்கும் கீரிமலைக்கும் இடையிலுள்ள திருவடி நிலையில் இறங்கினார்கள். யானைப் பவனிக்கென்று அலங்கரிக்கப்பட்ட யானைகள் அங்கிருந்தன. திருவடி நிலையிலிருந்து ஊர்வலம் ஆரம்பமாகி மாகியப்பிட்டி வழியாய் அங்கணாமைக் கடவைக்கு வந்து ஆராதனை நடத்தப்பட்டு வேலம்பறை என்னுமிடத்திற்கு வைகாசிப் பூரணையன்று வந்து சேர்ந்தது. அங்கிருந்து கரம்பகம், கோவிற்குளம், நாகர்கோவில், வன்னிப்புட்டுக்குளம், விழாங்குளம், முள்ளியவளை, வற்றாப்பளை, சாம்பல்தீவு, திருகோணமலை, தம்பலகாமம், பாலம்போட்டாறு, நீலாப்பளை வரையும் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து தாவளமாட்டின் மூலமாக (மாட்டுவண்டி) கோராவெளி, கொக்கட்டிமூலை, தாண்டவன்வெளி, வந்தாறுமூலை, ஈச்சந்தீவு, கொக்கட்டிச்சோலை, முதலைக்குடா, மகிழடித்தீவு, மண்முனை, புகுக்குடியிருப்பு, செட்டிபாளையும், எருவில், மகிழூர், கல்லாறு, கல்முனை, ஊர்முனை, காரைதீவு, பட்டிமேடு, தம்பிலுவில், பாணமை, கதிர்காமம், கண்டிவரை கொண்டு செல்லப்பட்டது.



கண்டியில் ஓர் கோவில் கட்டி சந்தனப் பலகையால் செய்த பெட்டியும் அம்மனும்

பால.சுகுமார் சேனையூர்
மேனாள் முதன்மையர்
கலை கலாசாரப் புலம்
கிழக்குப் பல்கலைக் கழகம்

சேமிக்கப்பட்டது. கண்டி தலதா மாளிகையில் உள்ள பத்தினிக் கோவிலில் சந்தன மரத்தால் செய்யப்பட்ட அம்மனும் சந்தனப் பெட்டியும் வைக்கப்பட்டுள்ளன“.

கலாநிதி அனுசியாவின் இந்த ஆராச்சிக் குறிப்பு நீலாப் பழையை இரண்டாயிரம் வருச வரலாற்றொடு இணைத்து நிற்கிறது.

கிழக்கு மாகாணக் கண்ணகி கோயில்களில் பாடப்படும் கண்ணகி ஊர் சுற்றுக் காவியம் பல நூறு ஆண்டுகளுக்கு முன் பாடப்பட்டிருக்க வேண்டும். அந்த காவிய வரிகளில் நீலாப் பழை பின் வருமாறு குறிப்பிடப்படுகிறது.

““ஏர் மேவுதன் கிரி எறிந்து மதுரா புரி

இந்து குல மன்னனை எரித்த நாயகியே

கார் மேவு சோலை சூழ் நீலாப் பாழை வாழ்கின்ற

கண்ணகை என்ன வினை காதம் ஓடிடுமே“

பழை என முடியும் பெயர்களில் பல ஊர்கள் ஈழத்தில் பல ஊர்களுக்கு உள்ளன பழை, வற்றாப்பளை, தெல்லிப்பழை, பட்டிப்பழை, அல்லிப்பழை, வரத்துப்பழை. பழை என்பதற்கு நாம் இரண்டு விதமாக பொருள் கொள்ள முடியும். பழை என்பது சிறிய நீர்த் தேக்கத்தை, குளத்தை குறிப்பதாக கொள்ளும் போது நீலாப் பழை ஒரு



நீர்த் தேக்கத்தை அண்டி இருப்பது நம் கவனத்துக்கு உரியது. பழனம் என்ற பழம் தமிழ் சொல் வளம் மிக்க வயல் நிலத்தை குறித்து நிற்கிறது. அந்த வகையிலும் நீலாப்பழை வயலும் நீரும் சூழ்ந்த தமிழர்களின் தொன்மை நிலம். ஆனால் இன்றுள்ள நிலமை என்னவெனில் 1954 ஆம் ஆண்டு ஏர்படுத்தப்பட்ட குடியேற்ற திட்டம் இங்கு சிங்கள மக்களின் ஆதிக்கத்தை நிலை நிறுத்தி உள்ளது. இன்று நீலாப்பழை நீலாப் பொலவாக மாறியது. அப்படி மாற்றப்பட்டமை வரலாற்றுச் சோகம்.

பழமையான நீலாப்பழை பத்தினி அம்மன் கோயில் இன்னமும் தமிழர்களின் வழிபாட்டு இடமாகவும் வருடந்தோறும் கண்ணகிக்கு விழாக் கொண்டாடும் களமாகவும் நிலைத்து நிற்கிறது. கோயிலில் இன்றும் சாட்சியாய் நிற்கும் தூண்களும் கற்களும் சிலைகளும் தமிழர்களின் இருப்பை சொல்லி நிற்கின்றன. ஈழத் தமிழர்களின் வரலாறு புதைக்கப்பட்ட இடமாக இன்று சுற்றிவர ரஜாமகா விகாரைகளால் சூழப்பட்டு நம் தொன்மைகள் சூறையாடப்பட்டதின் சாட்சியாய் நீலாப்பழை.





# பட்டிமேட்டு அம்மன்! பாழடைந்த நாடுகாடு!

நாடுகாடுப்பரவணிக் கல்வெட்டில் கிடைக்கின்ற சுவாரசியமான வரலாற்றுத் தகவல்களில் குறிப்பிடத்தக்கது, பட்டிமேட்டு கண்ணகி அம்மன் ஆலயம் பற்றிய குறிப்பு. கிழக்கிலங்கையில் கண்ணகி வழிபாட்டின் தோற்றம், வளர்ச்சி பற்றிய தகவல்களை ஆராய, இக்கல்வெட்டு முக்கியமான ஒரு ஆவணமாக விளங்குகின்றது. கண்ணகி வழிபாட்டைப் பொறுத்தவரை, கிழக்கிலங்கையில் தம்பிலுவில், பட்டிமேடு, காரைதீவு ஆகிய மூன்று இடங்களையும் முதன்மையான இடங்களாகக் குறிப்பிடுவது மரபு. இவை மூன்றிலும், நாடுகாடுப் பரவணியில் பட்டிமேடு, காரைதீவு என்பன குறிப்பிடப்பட்டிருக்கின்றன. தம்பிலுவில்லுக்குப் பதிலாக கோவில்மேடு என்றோர் இடம் சொல்லப்படுகின்றது.

மதுரைக்குப் போய் கண்ணகியை வணங்கி வந்த சின்னத்தம்பிப் போடியிடம் “நான் இங்கே இருக்க நீ அங்கே போகவேண்டாமென்று” என்று அம்மன் சொல்லி, கோவில்மேட்டில் கோவில் கொண்டாள். வோறாகொடைக் கல்லிலிருந்து (சடையந்தலாவையின் வீரகொட எல்ல?) பரிவார தெய்வங்களைக் கொணர்ந்து, வழிபாட்டுக்கென சிங்களக்கட்டாடியையும் பெண்சாதியையும் சிங்களப்பத்ததியோடு சின்னத்தம்பிப் போடி அழைத்து வருகிறார். கட்டாடியின் பெண்சாதிக்கு பிள்ளை பிறந்தபோது தாயும் சேயும் இறக்க, சின்னத்தம்பிப்போடியின் மகளான கந்தி அம்மையாரே அம்மனைப் பரிபாலித்து வருகிறார். கந்தி மனுதி மழுவெடுத்த செட்டி குலத்தைச் சேர்ந்த ஒருவனை மணம் புரிந்திருந்தார். அந்த “வங்கிஷம் காலற்றுப்” போனபோது, கோவில்மேட்டை விட்டு, அம்மனோடு பட்டிமேட்டுக்குப் போய்க் குடியிருக்கிறார்கள். அம்மனைத் தரிசிக்க வந்த ராஜபக்ஷ முதலியார் இதை அறிந்து கோபித்து அவர்களைத் ‘தேடப்படாதென்று’ காரைக்காட்டு வேளாளன் கருணாகரக் கட்டாடியிடம் மக்களை அனுப்பி, காரைதீவில் அம்மன் கோவில் அமைக்கிறார்.

கோவில்மேடு என்பது எங்கிருந்ததென்று தெரியவில்லை. ஆனால், சிங்களக்கட்டாடி பற்றிய தொன்மத்தையும், பட்டிமேட்டு நம்பிக்கையில் “அம்மாள் சீதாவாக்கையிலிருந்து பறந்து வந்தாள்” என்று சொல்லப்படுவதையும் ஓரளவு ஒப்பிட்டு நோக்கலாம். கந்தியை மணந்துகொள்பவன் “மழுவெடுத்த செட்டி” குலத்தைச் சேர்ந்த ஒருவன். பட்டிமேட்டு அம்மன் கோவிலை இன்று பரிபாலிப்பவர்கள், மழவராயர் குடியினர். கருணாகரக்கட்டாடி பற்றி வருகின்ற வரிகளில் சில எழுத்துக்கள் சிதைந்துவிட்டன. அவை சொல்கின்ற விடயம் என்னவென்று அனுமானிக்க முடியவில்லை. காரைதீவில் இன்று வழங்கும் “தேவந்தி அம்மையார்” தொடர்பான தொன்மமும், “கந்தி அம்மையாருடன்” இணைத்து ஆராயத்தக்கது.



பரவணிக் கல்வெட்டையும் பிற்கால கண்ணகி இலக்கியமான பொற்புறா வந்த காவியத்தையும் இந்த இடத்தில் ஒப்பிடுவது வேறு சில செய்திகளை நமக்குத் தரலாம். பொற்புறா வந்த காவியத்தின் படி புறாவாகப் பறந்துவந்த கண்ணகை அம்மனுக்கு, தம்பிலுவில், இறக்காமம், காரைதீவு, பட்டிமேடு, ஆகிய நான்கு இடங்களில் கண்ணகிக்கு ஆலயம் அமைக்கப்பட்டது சொல்லப்படுகின்றது. இறக்காமத்தில் இன்று கண்ணகி ஆலயமெதுவும் இல்லை. அப்படி இருக்க, பொற்புறா வந்த காவியத்தில் இறக்காமம் குறிப்பிடப்படக் காரணம் என்ன என்ற கேள்வியை எழுப்பினால், அது பரவணிக்கல்வெட்டின் இராஜபக்ஷ முதலியாரிலேயே வந்து நிற்பதைக் காணமுடியும். கோவில்மேடும் இராஜபக்ஷ முதலியார் வாழ்ந்த இறக்காமத்துக்கு மிக அருகிலேயே இருந்திருக்கிறது என்று நாம் ஊகிக்கலாம். சில ஆண்டுகளுக்கு முன்வரை, இறக்காமக் குளத்துக்கு அருகே, சிதைந்த கோவிலொன்றின் அல்லது பழங்காலக் கட்டிடமொன்றின் இடிபாடுகள் (கோவில்மேடு?) காணப்பட்டதாகச் சொல்லப்படுவதும், இங்கு ஊன்றி நோக்கத்தக்கது.

பரவணிக் கல்வெட்டிலுள்ள ஏனைய வரலாற்றுத் தகவல்களுக்குள்ள பெறுமானமும் மிகப்பெரியது. பட்டம் கட்டின முதலியார், பட்டம் கட்டாத முதலியார், தலைமைக்காறப்போடி, இறைகாறப்போடி, நிலைமையிறாளை முதலான பதவிப்பெயர்களும், நாம் போனகிழமை பார்த்த கண்டி மன்னனின் கீழைக்கரை விஜயம், பௌத்த இஸ்லாமிய வழிபாட்டிடங்களுக்கு அவன் அளித்த மானியங்கள், பட்டிமேட்டு அம்மன் தொன்மங்கள், இவையெல்லாம் நம்பகத்தன்மை கூடியவையாகவும், ஏனைய வரலாற்றுச் சான்றுகளோடு ஒப்பிட்டு உறுதிப்படுத்தத் தக்கவையாகவுமே விளங்குகின்றன. சங்கரவர், குண்ணறையர், ஒலியர் முதலான சாதிப்பெயர்களும் குண்ணறையரின் சமூகத்தொழில் பாய் இழைத்தல் என்பதும் இந்தப் பரவணிக் கல்வெட்டு வழங்குகின்ற முக்கியமான சமூகவியல் தகவல்கள்.

**ராஜபக்ஷவின் வாழ்வோடு வளர்ந்து மறைந்த நாடுகாடு**

நாடுகாடுப்பரவணிக்
கல்வெட்டிலிருந்து
மைங்கணான் மகிழறிவன்



கோப்பி குடியார் எனும் சமூகப்பிரிவினர் நாடுகாட்டுக்கு வந்தார்கள் என்பதும், நாடுகாட்டுக்கு சோனகர் வந்தமையும், காரைக்காட்டு வேளாளர், திருக்கோவில் பரிவட்டம் வெளுக்கிற வண்ணார் முதலான சமூகங்களின் தகவல்களும் அதே சமூகவியல் கண்ணோட்டத்தில் இன்றியமையாத இடங்களைப் பெற்றுக்கொள்கின்றன.

இராஜபக்ஷ முதலியார், அவர் உடன்பிறந்தார், உறவினர்கள், குடிமக்கள் ஆகியோரைச் சுற்றியே, இக்கல்வெட்டின் சம்பவங்கள் சொல்லப்படுகின்றன. இராஜபக்ஷ முதலியாரின் ஆயுட்காலம் முடிவதுடனேயே நாடுகாடும் பாழடைகின்றது. நாடுகாடுப்பற்றின் மறைவு பற்றிய பரவணிக்கல்வெட்டின் வரிகளும் சுவாரசியமானவை.

இராஜபக்ஷ முதலியார், அங்கு குடியேறியிருந்த இன்னொரு முதலியாரான பேராதனை அப்புவால் பேய்களை அனுப்பிக் கொல்லப்படுகிறார். அதையறிந்த ஏனைய முதலிமார், ஏழு வன்னியருடன் இணைந்து அவனைக் கொல்லத் திட்டமிடுகிறார்கள். அதைப் பேய்கள், பேராதனை அப்புவிடம் சொல்ல, அவன் அவர்களையும் கொல்லுமாறு ஏவிவிடுகிறான். நடப்பதை அறிந்த இராசகுல தெய்வம் யானையாக மாறி பேராதனை அப்புவைக் கொன்று வயல்களை அழித்து அழிச்சாட்டியம் பண்ண, அதை அடக்கச் செல்லும் எல்லா மக்களும் தங்களுக்குள் முரண்பட்டு செத்தொழிகிறார்கள். கண்டி அரசன் அதை அறிந்து நாடுகாட்டில் இனி யாரும் வதியக்கூடாது என்று சங்கு சக்கரம் பொறித்து மரத்தில் சாசனம் எழுதி வைக்கிறான். நாடுகாட்டில் வாழ்ந்த பரம்பரைகள் அதோடு மறைகின்றன.

நாடுகாடுப்பற்றின் முடிவை விளக்குகின்ற இறுதி வரிகள் மிகைப்படுத்தப்பட்டவை தான். ஆனால் கொஞ்சம் முயன்றால் அதிலிருந்து நம்மால் வரலாறை உருவ முடியும். நாடுகாடுப்பற்றில் பலம் வாய்ந்தவராக இராஜபக்ஷ முதலியாரின் பரம்பரை விளங்கியிருக்கிறது. ஏதோ காரணத்தால் முரண்பட்டு, பேராதனை அப்பு இராஜபக்ஷ முதலியை வஞ்சகமாகக் கொன்றிருக்கிறான். அதனால் ஏனைய முதலியார்கள் பேராதனை அப்புவுக்கு எதிராக சதித்திட்டம் தீட்டி அவனையும் கொன்றிருக்கிறார்கள். பலம் வாய்ந்த தலைமை மடிந்த பின்னர், அந்த வெற்றிடத்தை நிரப்புவது யாரென்ற போட்டி ஏனைய முதலியார்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது. விளைவு நாடுகாடுப்பற்று சுடுகாடாக மாறியிருக்கிறது.

இத்தனை தகவல்கள் கிடைத்தாலும், நாடுகாடுப் பரவணிக் கல்வெட்டை ஒரு முழுமையான வரலாற்று ஆவணமாகக் கொள்ளலாமா? ஒரு தலைமுறைக்காலத்தில் கல்வெட்டு விவரிக்கும் அனைத்து சம்பவங்களும் இடம்பெற்றிருக்குமா? என்ற வினாக்களுக்கு விடை இல்லை. விடை தேடுவதற்கான விரிவான ஆய்வுகள் எதுவும் மேற்கொள்ளப்படவுமில்லை. தமிழரின் வரலாற்றுணர்வு போலவே, நாடுகாடுப்பரவணிக் கல்வெட்டும் உதாசீனங்களுடன் மூலையில் கிடக்கிறது.

இறுதியாக, கவனிக்க சுவையான செய்தி ஒன்றுண்டு. பெற்றோருடன் சிறுவனாக இடம்பெயர்ந்து வரும் இராஜபக்ஷ முதலியாரின் வருகையோடு பிறக்கும் நாடுகாட்டுப்பற்று எனும் பிரிவு, அவர் இளமையைக் கடக்கும் போது, விவசாயம் தழைத்து, குடிகள் பெருகி, அந்தப் பற்றும் வளமடைந்து செழிக்க, இறுதியில் இராஜபக்ஷ முதலியாரின் மறைவோடு நாடுகாடும் பாழடைந்து போகின்றது. நாடுகாட்டுப்பரவணிக் கல்வெட்டின் இந்த அமைப்பு, குறியீடுகளும் படிமங்களும் நிறைந்த ஒரு அருமையான நவீன இலக்கியத்தை வாசித்த அனுபவத்தை அளிக்கிறது. நம் கையில் கிடைக்கும் இலங்கையின் வரலாற்று ஆவணங்களில் எதிலுமே இல்லாத சிறப்பம்சம் இது. வெறுமனே போலிப்பெருமிதங்களை, கட்டுக்கதைகளை, முன்முடிவுகளை மனதில் விதைக்கும் நம் வரலாற்று நூல்களின் மத்தியில், நாடுகாட்டுப் பரவணிக் கல்வெட்டை சிம்மாசனத்தில் தான் அமர்த்த வேண்டும். அதை எழுதியவருக்கும், மொழி பெயர்த்தவருக்கும், கட்டிக்காத்தவருக்கும், அதை நம் கையில் தந்த அறிஞர் பெருமக்களுக்கும் நாம் நிறையவே கடன்பட்டிருக்கிறோம்.

# மட்டக்களப்பில் இருந்து தினசரியாக ஒரு பத்திரிகை வெளிவரவேண்டும்!

## வாராந்தம் இலவசமாக வரும் அரங்கம் பத்திரிகை அதற்கு உதவுமா?





மட்டக்களப்பில் பிராந்திய பத்திரிகையொன்று தினசரியாக வெளிவராதா? வெளிவரவேண்டும் என்ற ஒலி கல்லடி இளைஞர்சேவை மன்ற கட்டிடத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒலித்தது.

தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியமும், அரங்கம் பத்திரிகை நிறுவனமும் இணைந்து நடாத்திய ஊடகவியலாளர்களுக்கான கருத்தரங்கின் போதே இக்கருத்து மேலோங்கியிருந்தது. யாழ்ப்பாணத்திற்கு தேசிய பத்திரிகைகள் செல்கின்ற நிலையிலும், பிராந்திய பத்திரிகைகளே அங்கு செல்வாக்கினைப் பெற்றுள்ளன. அதேவேளை அங்கு, ஒன்று அல்லாது, ஒன்றுக்கு மேற்பட்ட தினசரிப் பத்திரிகைகள் பிராந்தியப் பத்திரிகைகளாக வெளிவருகின்றன. இதைவிடவும், வாராந்தோறும், மாதம்தோறும் பத்திரிகைகள் வெளிவந்துகொண்டுதான் இருக்கின்றன. இப்பத்திரிகைகளை வாசிப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகம் என்பதற்கப்பால், காலையில் 5 மணிக்கே பத்திரிகைகளை படிக்கும் பழக்கமும் அங்கு புழக்கத்தில் உள்ளது.

### மட்டக்களப்பின் மூத்த ஊடகவியலாளர் இரா. பத்மநாதனின் நினைவாக நடத்தப்பட்ட நிகழ்வில், அரங்கம் செய்திகள் பத்திரிகையின் பங்களிப்பும் பெருமையாக நினைவு கூறப்பட்டது.



என்ற கருத்துக்களும் இளைஞர்சேவை மண்டபத்தில் ஒலித்திருந்தன.

இவ்வாறான கருத்துக்களை தமிழ் ஊடகவியாலளர் ஒன்றியத்தின் தலைவர் அனந் பாலகிட்ணன், செயற்குழு உறுப்பினர் பாரதி இராஜநாயகம் ஆகியோர் முன்வைத்திருந்தனர். இவர்கள் கூறியதுபோன்று, மட்டக்களப்பில் இருந்து தினசரி பிராந்தியப் பத்திரிகைகள் வெளிவரவேண்டுமென்ற ஆதங்கம், அவா பலரிடத்தில் இருக்கத்தான் செய்கின்றன. ஆனாலும் அவற்றினை யார் ஆரம்பிப்பது? இதற்கான நிதி? போன்ற பல்வேறுபட்ட வினாவினை தாங்கி தொக்கி நிற்கின்றதாகவே அச்செயற்பாடு அமைந்திருக்கின்றன.

'தேசிய பத்திரிகைகளில், மட்டக்களப்பு செய்திகள் அனைத்தும் வெளியிடப்படுவதில்லை. சில செய்திகள் மாத்திரமே வெளியீடு செய்யப்படுகின்றன. நாங்கள் செய்தி அனுப்பியும் அதனை பிரசுரிக்கின்றார்கள் இல்லை' என்ற கருத்தும் பிராந்திய ஊடகவியலாளர்களிடம் இருக்கத்தான் செய்கின்றது. அதேவேளை வாசகர்களிடத்திலும் மட்டக்களப்பினது செய்தி குறைவாகவே தேசிய பத்திரிகைகளில் இடம்பெறுகின்றன. எனவே செய்திகள் ஊடகவியலாளர்களினால் அனுப்பப்படுவதில்லையா? அல்லது பிரசுரிக்கப்படுவதில்லையா? என்ற வினாவும் வாசகர்களிடத்திலே இருந்து கொண்டுதான் இருக்கின்றன. இவ்வாதங்கங்களின் போதெல்லாம் நமது செய்திகளை வெளியீடு செய்ய பிராந்திய பத்திரிகை வெளிவராதா என்ற எண்ணம் பலருக்கு ஏற்படுவதுமுண்டு. இதற்கு மட்டக்களப்பில் இயங்கிய தினக்கதிர் பத்திரிகையும் எடுத்துக்காட்டானதொன்று.

மட்டக்களப்பு பகுதியெங்கும் தினக்கதிர் பத்திரிகை வியாபித்திருந்தது. காலையிலே பத்திரிகை வாசிக்கும் பழக்கத்தினையும் ஏற்படுத்தியிருந்தது. மூலைமுடுக்குகள் எங்கும் இடம்பெறும் சம்பவங்கள் அனைத்தும் செய்திகளாயின. மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்றிருந்த இப்பத்திரிகை எரியூட்டப்பட்டதைத் தொடர்ந்து மட்டக்களப்புக்கு தினசரிப்பத்திரிகை இல்லாமல் சென்றமை வேதனையே.

இவ்வாறான கருத்துக்கள் முன்வைக்கப்பட்ட போதுதான் சிரேஸ்ட ஊடகவியாலாளர் பூ.சீவகன் உதாரணங்களுடன் விளக்குவதற்கு முற்பட்டார். தேசிய ரீதியில் இயங்கும் பத்திரிகைகள் நாட்டில் இடம்பெறும் அனைத்து விடயங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அப்பத்திரிகைக்கு மட்டக்களப்பு செய்தி என்பதும் ஒரு பிரிவு மாத்திரமே. இதனால் எல்லா இடங்களுக்கும் கொடுக்கும் அதே அளவான இடத்தினைதான் மட்டக்களப்புக்கும் ஒதுக்க முடியும். எத்தனை செய்திகள் மட்டக்களப்பில் இருந்து அனுப்பப்பட்டாலும் பிரசுரிக்க கூடியதைமட்டும் தான் பிரசுரிப்பார்கள். மட்டக்களப்புக்கு முக்கியமான செய்தியும், தேசியத்திற்கு முக்கியமான செய்தியும் இருக்கின்ற போது, மட்டக்களப்பு செய்திக்கு முக்கியமளிக்காது, தேசியத் திற்கே முக்கியத்துவம் அளிப்பர். என்ற கருத்தினை உதாரணம் மூலம் வெளிக்காட்டியிருந்தார்.

இந்த விடயத்தில் தமது அரங்கம் செய்திகள் பத்திரிகை உரிய முயற்சிகளை எடுக்க முனையும் என்றும், அதற்கு பல தரப்பினரதும் உதவிகள் தேவைப்படும் என்றும் அவர் கூறினார்.

அதேவேளை மக்கள் மத்தியில் வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கில் அரங்கம் செய்திகள் பத்திரிகை, தமது இதழ்களை இலவசமாக விநியோகிப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

பெரும்பாலான பத்திரிகைகள் வராத படுவான்கரை பகுதியிலும் அரங்கம் பத்திரிகை இலவசமாக விநியோகிக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மாகாணத்தில் வாழ்ந்த பலர் ஊடக ஜாம்பான்களாக திகழ்ந்துண்டு. செய்திகள், பத்திரிகையில் எப்பக்கத்தினைப் பிடிக்க வைப்பதென்பது செய்தி எழுதுபவரின் அமைப்பிலே தங்கியுள்ளது. அவ்வாறு கோயில் செய்தியை முன்பக்க செய்தியாக மாற்றிய திறமையான ஊடக ஜாம்பவான்கள் மட்டக்களப்பு மண்ணிலே இருந்தனர். அவர்களைக் குருவாகக் கொண்டு வளர்ந்தவர்கள் பலர். அதில் நானும் ஒருத்தன் என்ற கருத்தினை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத் தலைவர் அனந் பாலகிட்ணன் முன்வைத்திருந்தார்.

இத்தோடு நிறுத்திவிடாது, நிகழ்வின் ஆரம்பத்தின் போது, ஊடகத்துறையில் சிறந்து விளங்கிய மண்ணின் மைந்தன் மறைந்த இரா. பத்மநாதன் அவர்களின் உருவப்படத்தினை முன்னிறுத்தி நினைவுச்சுடர் ஏற்றி அவருக்கான மரியாதையை நிகழ்வில் கலந்து கொண்டிருந்தவர்கள் செலுத்தியிருந்தனர்.

அதேவேளை சுவாமி விபுலானந்தர் தொடக்கம் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் வரை சுட்டிக்காட்டி அவர்களது ஊடக பணியினைக் குறிப்பிட்டு கிழக்கு மண்ணையும், மட்டக்களப்பு மண்ணையும் பெருமைப்படுத்தினார். மக்கள் சேவையைத் தொடர்ந்த ஊடகவியலாளர்களை மக்கள் மறந்தாலும் ஊடகப்பரப்பில் உள்ளவர்கள் மறக்காமல் நினைவூட்டுவதென்பது இன்றும் இடம்பெறுவது போற்றிதற்குரியதே.

பிராந்தியப் பத்திரிகைகளே அதிகம்பேரை வளர்த்துவிட்டவை. வளருவதற்கான சந்தர்ப்பத்தினை பிராந்தியப் பத்திரிகைகளே ஏற்படுத்தும். அதன்மூலமாகவே நாமும் வளர்ந்தோம் என்ற கருத்தினை அனந் பாலகிட்ணன், பாரதி இராஜநாயகம், பூ.சீவகன், இரா.துரைரெட்ணம் போன்ற

**படுவான் பாலகன்**


தற்போதைய சிரேஸ்ட ஊடகவியலாளர்கள் முன்வைத்ததோடு, மட்டக்களப்பிலிருந்து தினசரிப் பத்திரிகையொன்று வெளிவரவேண்டும். என்ற கருத்தினை மீண்டும் மீண்டும் வலியுறுத்தினர்.

இதேவேளை, அரங்கம் பத்திரிகை இவ்வருடம் ஆரம்பிக்கப்பட்டு, வெள்ளிதோறும் வெளிவந்துகொண்டிருப்பதோடு, மாவட்டத்தின் பலவிடயங்கள் இதனூடாக பேசப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இப்பத்திரிகை தினசரி இடைவெளியை நிரப்பும் என்ற நம்பிக்கையையும் கலந்து கொண்டிருந்த ஊடகவியலாளர்கள் வெளிக்காட்டியிருந்தனர்.

பிராந்திய பத்திரிகைகள் வெளிவர வேண்டும் என்று பேசுகின்ற தற்போதைய சூழலில், பத்திரிகையின் வாசகர்கள் அதிகரிக்க வேண்டுமென்பதும் மிகவும் முக்கியமானவிடயமே. வாசகர்களின் வரவேற்பே, பத்திரிகைத்துறையை சிறப்படையச்செய்யும். நாளாந்தம் காலைவேளையிலே பத்திரிகைகளை கையிலெடுத்து வாசிக்கின்ற சமூகத்தினை உருவாக்க வேண்டும். அப்போதுதான் புதிய விடயங்களை அறியும் சமூகமாக ஒரு சமூகம் மாற்றப்படும்.

அரங்கத்தின் இலவச விநியோகமும் அதற்கு ஒரு வழியில் உதவலாம்.






# உருவாகும் ஒரு கிரகம்



ஒரு நட்சத்திரத்தை சுற்றி வாயு மற்றும் தூசுகளால் உருவாகிவரும் புதிய கிரகத்தை வானியலாளர்கள் படமெடுத்துள்ளனர்.

இதுபோன்ற உருவாக்க நிலையிலுள்ள கிரகத்தை ஆராய்ச்சியாளர்கள் பல ஆண்டுகளாக தேடி வரும் நிலையில், முதல் முறையாக இது கண்டெடுக்கப்பட்டுள்ளது.

பிடிஎஸ் 70 என்று பெயரிடப்பட்டுள்ள இந்த குள்ள நட்சத்திரத்திற்கு 10 மில்லியனுக்கும் குறைவான வயதே இருக்குமென்றும், மேலும் இதன் துணைக்கோளின் வயது 5 முதல் 6 மில்லியன் வயதுகள் இருக்குமென்றும் தெரியவந்துள்ளது.

பிடிஎஸ் 70பி என்று பெயரிடப்பட்டுள்ள இது வியாழனைவிட பல மடங்கு பெரியதாக இருக்குமென்றும், மேலும் அது மேகமூட்டமாக வளிமண்டலத்தை கொண்டிருக்கலாம் என்றும் தெரிகிறது.

யுரேனஸ் சூரியனை சுற்றிவரும் தூரத்தை போன்று இந்த கோளும் அதன் நட்சத்திரத்தை சுற்றிவருமென்று ஜெர்மனியிலுள்ள மாக்ஸ் பிளாங்க் இன்ஸ்டியூட் பார் அஸ்ட்ரானமியின் ஆராய்ச்சியாளர்கள் குழு கண்டறிந்துள்ளது.

இது, குள்ள நட்சத்திரத்தை ஒவ்வொரு முறை சுற்றி வருவதற்கும் 118 வருடங்களாகிறது.

# லண்டனில் அரங்கம்







லண்டனில் அண்மையில் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி மற்றும் மெதடிஸ்த மத்திய கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர்களுக்கு இடையில் கிரிக்கெட் போட்டி ஒன்று நடைபெற்றது. அங்கு கலந்துகொண்ட சில பழைய மாணவர்கள் அரங்கம் பத்திரிகையை படிப்பதை இங்கு காணலாம்.

# மலைகளைப் பேசவிடுங்கள்

# மலையகத் தமிழர்கள் என்போர் யார்?

இலங்கை பிரித்தானியர் ஆட்சிக்கு கீழ் கொண்டுவரப்பட்டதன்பின்னர் அவர்கள் கோப்பி பயிர்ச் செய்கையை கண்டி மாவட்டத்தில் ஆரம்பித்து இருந்தனர். இதற்காக அவர்கள் தமிழ் நாட்டில் இருந்து தொழிலாளர்களை அழைத்து வந்து

பருவகாலம் முடிய திரும்பவும் அனுப்பியிருக்கிறார்கள். இதன்போது அந்தத் தொழிலாளர் மக்கள் பாடிய நாட்டார்

பாடல் ஒன்று இவ்வாறு அமைகிறது,

கோண கோண மலையேறி
கோப்பிப் பழம் பறிக்கையில
ஒரு பழம் தப்பிச்சினா
ஒதைச்சானாம் சின்ன தொர

இந்தப் பாடல் தரும் விளக்கங்கள் பலவாறானவை.
மலைப்பாங்கான பிரதேசத்தில் கோப்பிப்பழங்களை

பறிப்பதற்கு அழைத்து வரப்பட்ட மக்கள், தங்கள் தொழில் சார்ந்து துன்புறுத்தப்பட்டு இருக்கிறார்கள் என்பது தெளிவு.

இதேபோல இறப்பர் தோட்டத் தொழிலாளர்களின் பாடல்

ஒன்று இவ்வாறு அமைகிறது,

இறப்பர் மரமானேன்
நாலுபக்க வாதுமானேன்
இங்கிலீசு காரன்
ஏறிப்போக காருமானேன்

இங்லீசுகாரர்களின் சுகபோக வாழ்க்கைக்கு எவ்வாறு இந்த

மக்களின் உழைப்பு பயன்படுத்தப் பட்டிருக்கிறது என்பது எடுத்துக் காட்டப்படிருக்கிறது. இதை எழுதியவர்கள் யாரென்று தெரியாது. இவர்கள் சொல்ல வரும் செய்திகள் கவிப்பேரரசுகள், கவிச்சக்கரவர்த்திகளை விஞ்சி நிற்கின்றன.

இந்தக் கோப்பிக்காலத்து துரைமார் வாழ்க்கையை பதிவு

செய்யும் கிறிஸ்டினா வில்சன் எனும் ஆங்கில எழுத்தாளர் எழுதிய bitter berry எனும் நாவலை மலையக எழுத்தாளர் இரா.சடகோபன் ‘கசந்த கோப்பி “ எனும் தலைப்பில் மொழிபெயர்ப்பு செய்துள்ளார். கோப்பி ( coffee) யின் கசப்புக்கு காரணமானது அந்தக் கோப்பி ஒரு வகை நோய் பாதிப்புக்குள்ளானதால் கோப்பிச் செய்கையை விட்டுச் சென்றதுடன் பெரும் நஷ்டங்களையும் அடைந்துள்ளனர். எனினும், அவர்களது விடாமுயற்சியினால் கோப்பிக்குப் பதில் “தேயிலையை” பணப்பயிராக அறிமுகம் செய்துள்ளனர். இன்றைக்கு 150 ஆண்டுகளுக்கு முன்பதாக ஜேம்ஸ் டெயிலர் என்பவர் கண்டி - நுவரெலியா மாவட்டங்களின் எல்லையான “லூல்கந்துர” தோட்டத்தில் ஆரம்பித்து உள்ளார்.

இந்த மக்களின் ஆரம்பகால வருகை



வாழ்க்கை பற்றியதாக பத்திரிகையாளரான டொனவன்மோல்ரிச் Donovan Moldrich எனும் பர்கர் (பறங்கி) இன இலங்கையர் எழுதியிருக்கும் விஞ்ஞானபூர்வமான ஆய்வு நூலான bitter berry bondage ஐ தழுவி “கண்டிச் சீமையிலே” எனும் படைப்பையும் இரா.சடகோபன் தமிழில் தந்துள்ளார்.

இத்தகைய வரலாற்று நூல்களை மொழிபெயர்த்த அனுபவங்களைப் பெற்ற இரா. சடகோபனிடமிருந்து மலையகத் தமிழர் ஒரு சுருக்க வரலாறு என்னும் கட்டுரையை தமிழகன் தனது தொகுப்பு நூலான “மலையகமும் மறுவாழ்வும்” நூலில் சேர்த்துள்ளார்.

மலையகத் தமிழரின் வருகை வரலாறு பல இன்னல்கள் நிறைந்தது. தென்னிந்தியாவில் பண்ணை அடிமைகளாக வாழ்ந்த மக்களே இவ்வாறு இலங்கை கோப்பி, தேயிலை, இறப்பர் தோட்டங்களுக்கும் இரயில் பாதைகள் அமைப்பதற்கும் பிரித்தானியர்களால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இவர்கள் இந்தியாவில் இருந்து இலங்கை நோக்கிச் செல்ல இரண்டு வகைக் காரணங்கள் இருந்துள்ளன.

தள்ளும் காரணிகள்
இழுக்கும் காரணிகள்

பண்ணை அடிமைகளாக நிலச்சுவாந்தர்களால் நடாத்தப்பட்ட மக்கள் சமூக ரீதியாகவும் (சாதி) பொருளாதார ரீதியாகவும் ஒடுக்கத்திற்கு உள்ளாக, அவை அந்த மக்களை அங்கிருந்து தள்ளும் காரணிகளாக இருந்துள்ளன. அதே நேரம் இலங்கைக்குப் போனால் செல்வச்செழிப்போடு வாழலாம் என்ற தரகு கங்காணிகளின் பசப்பு வார்த்தைகளால் இழுக்கப்பட்டனர்.

அதுவே இழுக்கும் காரணியானது. எனவே தள்ளும் காரணியாகவும் இழுக்கும் காரணியாகவும் வாழ்வதாரமான பொருளாதாரமே அமைந்துள்ளது. கூடவே

சமூக ஒடுக்கு முறையின் அழுத்தமும்

“பரதேசி” திரைப்படம் முயற்சித்து இருந்தது.

இடைவேளையைக் கடற்பயணமாகக் கொண்டால் அதுவே அந்த மக்கள் இலங்கை சென்ற வரலாறாகும். எனினும்

தள்ளிய காரணிகளில் ஒன்றான சாதிய அழுத்தத்தையோ அல்லது பொருளாதார அழுத்தத்தையோ துல்லியமாகப் பதியாது இழுக்கும் காரணிகளை விபரித்துக் காட்ட விளைந்ததான ஒரு விமர்சனப் பார்வையையே “பரதேசி” திரைப்படத்தின் மீது வைக்க முடியும். அதன் மூலமான ‘எச்.பி. டேனியலின்‘ எரியும் பனிக்காடு’ நாவலின் நேர்மையை பரதேசியில் தரிசிக்க முடியாது போனமை மனவருத்தமே. எனினும் இந்தத் தேயிலை வாழ்வின் புலப்பெயர்வை காட்சிப்படுத்தல் படிமமாக்கியதில் பரதேசியின் பங்களிப்பு மறுக்க முடியாதது.

ஆரம்பத்தில், கோப்பிக் காலத்தில்




பருவகாலத்தில் வருவதும் போவதுமாக இருந்த மக்கள் தேயிலைப் பயிர்ச் செய்கை தொடங்கியதன் பின்னர், நிரந்தரமாக இலங்கையில் நிற்க நேரிட்டது. அவ்வாறு வந்தவர்கள் 1815 முதல் 1920கள் வரை

சுமார் 100 ஆண்டுகள் வெள்ளையர்களின் தேயிலைத் தோட்டங்களில் அடிமைகளாகவே

அதில் இருந்து விடுபட்டு விடலாம் எனும் மன உந்துதலும் கடல் கடந்து உறவுகளைப் பிரிந்து நாடு விட்டு நாடு நடந்து செல்ல அவர்களுக்கு சூழற் காரணிகள் ஆகியிருக்கின்றன.

இதனைக் காட்சிப்படிமமாக்க உள்ளூர் இடப்பெயர்வான தமிழகத்தின் தென்னக மாவட்டங்களில் இருந்து மலைப்பகுதி நோக்கிச் சென்ற மக்கள் பற்றிய சித்திரமான

வாழ்ந்து உள்ளார்கள். தமிழ்நாட்டில் இருந்து அவர்களைத் தள்ளிய காரணியோ அல்லது இழுத்த காரணியோ இலங்கையில் அவர்களுக்கு வாழ்வளிக்கவில்லை. எனினும், மேலதிகமாக உறவுகளைப் பிரிந்த இன்னுமொரு துயரமும் அவர்களை ஆட்கொண்டது. குடும்பத்தில் ஒரு பகுதியை ஒரு நாட்டில்விட்டுவிட்டு இன்னொரு நாட்டிற்கு நிரந்தரமாக பிரிந்து செல்வது என்பது

கற்பனைக்கு அப்பாற்பட்டது. இந்த சூழ்நிலையை இரண்டு தடவைகள் சந்தித்த சமூகம் மலையகத் தமிழர் சமூகம். 1815 முதல் - 1915 வரையான காலப்பகுதியில் பிரித்தானிய ஆதிக்கத்தின் கீழ் இந்திய, இலங்கை நாடுகள் இருந்த காலத்தில் குடும்பங்களில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டு இலங்கைக்கு அழைத்துவரப்பட்டனர். அதே, குடும்பங்கள் இலங்கை சுதந்திரமடைந்த பின்னர்1964 ஆம் ஆண்டு இலங்கை - இந்திய அரசாங்கங்கள் செய்து கொண்ட ஸ்ரீமா - சாஷ்திரி ஒப்பந்தம் காரணமாக இரண்டு நாடுகளுக்கு இடையே பண்டங்களாக பரிமாற்றம் செய்துகொள்ளப்பட்டனர்.

இந்த இன்னல் நிறைந்த இருநூறு வருட வரலாற்றுக்குள் முதல் நூறு வருடம் முழுவதும் அடிமை வாழ்வாக அமைய, அடுத்த நூற்றுக்குள் மலையக

மல்லியப்புசந்தி திலகர்

தமிழ்ச்சமூகம் கண்ட அரசியல் எழுச்சி மகத்தானது. 1917ம் ஆண்டு இடம்பெற்ற ஒக்டோபர் புரட்சி உண்மையில் இந்த தொழிலாளர் வர்க்கத்திற்கு வெளிச்சத்தைக் கொண்டுவந்தது. அந்த ஒளியைக் கொண்டு வந்த முதல் தீபம் கோ.நடேசய்யர்.

இந்திய சுதந்திர போராட்டத்திற்கு நிதி சேர்க்கவென இலங்கை வாழ் இந்திய வம்சாவளியினரிடம் வந்த பத்திரிகையாளரான நடேசய்யரின் பார்வை இந்த மக்கள் கூட்டத்தினர் மீது விழவே, முதலாவது தொழிற்சங்கத்தை அவர்களுக்காக அவர் உருவாக்கினார். இதற்காக அவரும் அவரது துணைவியார் மீனாட்சியம்மையும் புடவை வியாபாரிகளாக மாறுவேடமிட்டு தோட்டங்களுக்குள் நுழைந்த வரலாறு தனியாக பதிவு செய்யப்பட வேண்டியது.

இலங்கை இந்தியத் தோட்டத் தொழிலாளர்கள் சங்கம்

1920 களின் பிற்கூறுகளில் அவர்கள் உருவாக்கிய அந்த தொழிற்சங்கமே அவர்களின் அரசியல் அமைப்பாகவும் மாறியது. 1931 ஆம் ஆண்டு சர்வஜன வாக்குரிமையை வழங்குவதற்கு பிரித்தானிய அரசு முன்வந்தபோது நடேசய்யர்

தொடர்ச்சி... (பக்கம் -23 )



# பட்டறிவு

## சிங்கள பௌத்த பாசிசத்தின் “ட்ரோஜன் குதிரை”

அரசியல் தந்திரோபாய செயற்பாட்டில் “ஊடுருவல்” (Infiltrate) என்பது பல வடிவங்களில் இயங்குவதை நாம் அறிந்திருக்கிறோம். எதிரிகளை கண்காணிக்க, தகவல் திரட்ட, அதனை இரகசியமாக பேணிப் பாதுகாக்க, உரிய இடங்களுக்கு அதனை சேர்ப்பிப்பது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்பவர்களை நாம் உளவாளிகளாக அடையாளப்படுத்துவோம்.


அரசாங்க, இராணுவ, அரசியல் விவகாரங்களை இரகசியமாக நீண்டகால ரீதியல் வேவு பார்ப்பவர்களை “espionage" அல்லது உறங்குநிலை முகவர் ("sleeper agent) என்றும் அழைப்பார்கள். இவர்கள் அவர்களுடன் இரண்டறக் கலந்திருப்பார்கள். அமைதியாகவும், பொறுமையாகவும் தமது இலக்கை நிறைவேற்றிக் கொண்டிருப்பார்கள்.

இந்த வடிவங்களில் ஒரு வகையாக ஒற்றர்களை நடுவது (Planting) என்கிற

வெளிவரவுமிருக்கின்றன.

இலங்கையின் பேரினவாத வரலாற்றில் காலத்துக்கு காலம் பல சக்திகள் தோன்றி, வளர்ந்து, இயங்கி பின்னர் சிதைந்து மறுபடியும் இன்னொன்று அந்த இடத்தை நிரப்பும் தொடர் நிகழ்வை நாம் கண்டிருக்கிறோம். அப்படி அமைப்புகள் சிதைக்கப்பட்ட நிகழ்வுகளில் பின்னணியில் இப்படி plant செய்யப்பட்டவர்களின் கையோங்கியிருந்திருக்கிறது என்று இனவாதத் தரப்பில் குற்றம் சாட்டி வந்திருக்கிறார்கள். அதாவது தமிழர்களுக்கு சாதகமானவர்களோ அல்லது தமக்கு எதிரானவர்களோ அல்லது றோ, சி,ஐ.ஏ, மேற்குலகு, டயஸ்போரா போன்ற அந்நிய சக்திகளோ கூட இயங்கியிருக்கின்றன என்பது போன்ற குற்றச்சாட்டுகளை அவர்கள் இயல்பாக சுமத்தி வந்திருக்கிறார்கள். அல்லது ஐயப்பட்டிருக்கிறார்கள்.

அந்த வரிசையில் தற்போது அவர்கள்



ஒரு வடிவத்தையும் கொள்ளலாம். உலக அளவில் கொம்யூனிச நாடுகளையும், சோஷலிச அரசுகளை நிறுவ முயற்சிக்கும் சக்திகளை அழிப்பதற்கு சீ.ஐ.ஏ நிறுவனம் ஆங்காங்கு போலி கொம்யூனிஸ்டுகளை உருவாக்கி ஆங்காங்கு இரண்டறக் கலக்கச் செய்து உரிய நேரத்தில் அந்த அமைப்பை சிறிது சிறிதாகவோ அல்லது சடுதியாகவோ சிதைப்பதை மேற்கொண்டிருக்கிறார்கள். இது அரசியல், இராணுவ தந்திரோபாயத்தில் மட்டுமல்ல இன்றைய வர்த்தக பொருளாதாரத் துறைகளிலும், சிவில் அமைப்புகளிலும் கூட இருக்கும்.

இந்த “Planting" வகையைப் பற்றிய கதைகள் ஈழப்போராட்டத்தில் நிறைய உதாரணங்களும், ஐயங்களும் உள்ளன. ஆங்காங்கு அந்த உண்மைகள் வெளிவந்திருக்கின்றன.

பேசிக்கொண்டிருப்பது, ஜாதிக ஹெல உறுமயவின் வழிமாற்றத்துக்குப் பின்னால் உள்ள சதிகளும், சக்திகளும் பற்றிய உரையாடல்.

“யுத்துகம சங்வாதய”

---

“யுத்துகம - சங்வாத கவய” (கடமை – உரையாடல் வட்டம் ) என்கிற ஒரு அமைப்பு இயங்கி வருகிறது. இது சமகாலத்தில் சிங்கள பௌத்த பேரினவாதத்துக்கு சித்தாந்த பலத்தைக் கொடுக்கும் ஒரு பின்புல அமைப்பு. இதில் பல சிங்கள பௌத்த பேரினவாத புலமையாளர்கள் சம்பந்தப்படிருக்கிறார்கள். தலைமை கொடுப்பவர் கெவிந்து குமாரதுங்க

என்பவர் (இவர் சிங்களப் புலவரான குமாரதுங்க முனிதாசவின் பேரன்). இவர்கள் ஆர்ப்பாட்டங்களில், போராட்டங்களில் அக்கறை காட்டுவதில்லை. தேர்தல் அரசியலிலும் கலந்துகொள்வதில்லை. ஆனால் அப்படிப்பட்டவர்களுக்கு சித்தாந்த வழிகாட்டலை செய்துவருபவர்கள். அவர்களின் செயற்பாடுகளை ஆரம்பத்திலிருந்து அவதானித்து வருகிறேன்.

அவர்களின் இணையத்தளத்தில் சிங்கள பௌத்தத்துக்கு வலுவூட்டும் ஆழமான கட்டுரைகளையும், பிரசுரங்களையும் காணலாம். பெரும்பாலான கட்டுரைகளுக்கு தனிப்பட்ட எவரும் உரிமை கோருவதில்லை. அந்த வட்டத்தின் பேரில் தான் வெளியிடுவார்கள். பல சிங்கள ஊடகங்கள் இவர்களுக்கு தாராளமான இடத்தை வழங்கி வருகின்றன. விவாதங்களில் இவர்கள் மிகுந்த தயாரிப்புடன் வந்து சிங்கள ஜனநாயக சக்திகளுடன் வாதம் புரிவார்கள். ஒரு காலத்தில் இவர்கள் சிங்கள வீர விதான - ஜாதிக ஹெல உறுமயவுடன் சம்பந்தப்பட்டவர்கள். பின்னர் அவை தமது சித்தாந்தப் பணியை குறைத்து கட்சி அரசியலுக்குள் நுழைந்ததும் அந்த இடத்தை நிரப்பவென “யுத்துகம” போன்ற அமைப்புகள் தோன்றின.

இப்போது இவர்கள் ஜாதிக ஹெல உறுமயவை விமர்சித்து வருகிறார்கள். அவர்கள் கடந்த வாரம் வெளியிட்டிருக்கிற கட்டுரையின் தலைப்பு “இலங்கை அரசியலில் மறைந்திருக்கும் ட்ரோஜன் குதிரை ஹெல உறுமயவா?”.

என்.சரவணன்

அதாவது அரசுக்குள் ஊடுருவி பின்னர் அதைக் கைப்பற்றி சிங்கள – பௌத்த ராஜ்ஜியத்தை அமைக்கும் திட்டத்துடன் உள்நுழைந்த “ஹெல உறுமய” மீது தாம் எமாற்றமடைந்துவிட்டதாகவும், தாங்கள் நம்பிய “ட்ரோஜன் குதிரை” ஹெல உறுமய இல்லை என்பதை பல தரவுகளுடன் விபரித்துச் செல்கிறது அக்கட்டுரை. இன்னொரு வகையில் சொன்னால் அதற்கான மாற்றீடு அவசியம் என்கிறது.

“ட்ரோஜன் குதிரை”யின் இதிகாசம்:

ஹோமர் என்ற கிரேக்க கவிஞர் எழுதிய இலியட் என்னும் காவியத்தில் இந்த கதை உள்ளது. கிரேக்க தேசத்தின் அழகியான ஹெலனையும் அந்நாட்டின் செல்வங்களையும் ப்ரயம் மன்னனின் மகனான பாரீஸ் என்னும் இளவரசன் தன் ட்ரோஜன் நகருக்குக் கடத்திச் சென்றுவிட்டான். இதனால் கிரேக்கர்களுக்கும் ட்ரோஜனியர்களுக்கும் இடையே கடும் யுத்தம் வந்தது. 12 வருடங்கள் நீடித்த இப்போரை வெல்வதற்கு கிரேக்கர்கள் ஓர் தந்திரத்தைக் கையாண்டனர். கோட்டைக்கு வெளியே போர் நடக்கும். கோட்டைக்குள் நாட்டு மக்கள் பாதுகாக்கப்படுவார்கள், மாலையில் போர் நிறுத்தம் இருக்கையில் கோட்டை கதவுகள் மூடப்படும்.

ஒருநாள் கிரேக்கர்கள் போரிடும் போது ஒரு பெரிய மரத்தாலான பிரமாண்டமான குதிரையை விட்டுச் சென்றனர். அந்த மரக் குதிரையின் வயிற்றுக்குள் போர்வீரர்களை இரகசியமாக நிறைத்து வைத்திருந்தனர். போர் நடந்து கொண்டிருந்தபோது மரக்குதிரையைக் போர்களத்திலேயே விட்டு விட்டு கிரேக்கர்கள் தோற்றுப் போனவர்கள் போல் ஓடிவிட்டார்கள் என்று நம்பிய ட்ரோஜன் வீரர்கள் குதிரையை தமது பாதுகாக்கப்பட்ட கோட்டைக்குள் இழுத்துச் சென்று தமது வெற்றியை ஆரவாரத்துடன் கொண்டாடினார்கள்.

ஒரேயொரு குருட்டு மதகுரு மட்டும் அதன் உள்ளே ஆபத்து ஒளிந்திருக்கிறது என்று கத்தினார். எவரும் அவரைப் பொருட்படுத்தவில்லை. குடியும் கூத்துமாக இரவு முழுவதுமாக கொண்டாடிய அவர்கள் போதையில் வீழ்ந்து உறங்குகையில், கிரேக்க வீரர்கள் குதிரையின் வயிற்றை விட்டு வெளியே வந்து ட்ரோஜன் வீரர்கள் அனைவரையும் கொன்று அந்நகரைத் தீவைத்து எரித்தனராம். ஹெலன் மீட்கப்பட்டு கணவனிடம் சேர்க்கப்பட்டதாக அந்த கதை முடிகிறது.

இது புனைகதை அல்ல. History Channel இல் கூட இந்த சம்பவத்தைப் பற்றிய ஒரு சிறந்த வரலாற்று ஆவணத்தை ஆய்வுபூர்வமாக வெளியிட்டிருந்தது. இந்த கதையை மையமாக வைத்து 2004 ஆம் ஆண்டு “TROY” என்கிற பெயரில் மிகப் பிரபல்யமான ஒரு திரைப்படம் கூட வெளிவந்தது. இந்தக் குதிரைக் காட்சி அத்திரைப்படத்தின் கிளைமாக்ஸ் காட்சியாக வைக்கப்பட்டிருக்கும்.

கொம்பியூட்டர்களை இப்படி ஊடுருவித் தாக்கி சிதைக்கும் ஒரு வைரசுக்கு கூட “ட்ரோஜன்” என்று பெயர் வைத்திருப்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

அரசியல் உரையாடல்களிலும், ஆய்வுகளிலும் “ட்ரோஜன் குதிரை” என்கிற பதமானது துரோகத்தைக் குறிக்கவும், ஊடுருவுதல், வேவு பார்த்தல், ‘ஒற்றர்களை நட்டு’ சிதைத்தல் என்பவற்றை குறிக்கவும் பயன்படுத்தப்படுகின்றன. இனி நமது அரசியலிலும் ட்ரோஜன்களை இனங்காணுங்கள்.

யுத்தம் முடிவடைந்த பின்னரும் பேரினவாத சக்திகள் தம்மைப் பலப்படுத்த அரசாங்கத்திலும், அரச அதிகார கட்டமைப்புகளிலும், சிவில் அமைப்புகளிலும், ஊடகங்களிலும் ட்ரோஜன்களை உருவாக்கி கவனமாக காய் நகர்த்தும் போது, அடக்குமுறைக்கு எதிராக போராடும் ஒரு இனம் தம்மைத் தற்காத்துக் கொள்ளவும், உரிமைகளை வென்றெடுக்கவும் தமக்கான ட்ரோஜன்களை உருவாக்கிக் கொண்டுள்ளதா என்பதை சரிபார்த்துக் கொள்ளுங்கள் தோழர்களே.

# மறைந்தும் மறையாமல் வாழும் மாமனிதர் கலைமணி மாணிக்கன் சிதம்பரப்பிள்ளை புலவர்

மறந்து வளர்ந்து சிறந்து விளங்கும் மொழிகளிலே சிறந்து பிறந்த மொழிதான் தமிழ் மொழி என்பதில் ஐயமில்லை. அப்படிப்பட்ட செம்மொழியுள் தன்னை உட்புகுத்தி விளம்பரமில்லாத தமிழ் விரும்பியாக தமிழை நேசித்து தமிழை வளர்த்த பல பெயர் வழிகளில் கன்னன்குடாவைச் சேர்ந்த கலைமணி மாணிக்கன் சிதம்பரப்பிள்ளை புலவரும் ஒருவராவார்.

அன்னார் பேராசிரியர் செ.யோகராசா அவர்கள் குறிப்பிடும் “ஈழத்து முச்சந்தி இலக்கியம்“ என்ற வகையினுள் அதிகளவான இலக்கியங்களையும் தமிழின் பழமை பொதிந்த வடமோடி, தென்மோடி கூத்துக்களையும் எழுதி நெறிப்படுத்தியுள்ளமை இன்று பெரும் வியப்பைத் தருகின்றன.

1927.09.10 இல் பிறந்த புலவர் இளமையிலே சைவத்தின் பால் ஈர்க்கப்பட்டு ஆலயங்களில் தன்னை அர்ப்பணித்து சரீரத் தொண்டுகளை மேற்கொண்டு அதன் பயனாகத் தோன்றிய எண்ணங்களை எழுத்துருவாக்கம் செய்ய எத்தனித்தார். அதன் அடிப்படையில் தான் இன்று பல்வேறு வகையான கவிநயம் பொருந்திய காவியப்பாடல்கள், தோத்திரப்பாடல்கள், அம்மானைப்பாடல்கள், கும்மிப்பாடல்கள், நாடகங்கள், வடமோடி, தென்மோடி கூத்துக்கள் போன்றவற்றை நாம் அனுபவிக்கக் கூடியதாக காணப்படுகின்றன.

இவ்வகை இலக்கியங்களை வரிசையாக்கி நோக்க வேண்டியது நம் அனைவரது கடமையாகும் அந்த வகையில் புலவரின் காவியப்பாடல்களில்;

- புயல் காவியம்
- புளியடிமடு படபத்திரகாளி அம்மன் காவியம்(1986)
- கன்னன்குடா கண்ணகி அம்மாள் ஆலயத்தில் கள்வர் பிடிபட்ட காவியம் (1981)
- பண்டாரியாவெளி பன்னகன் காவியம் போன்றவையும்

தோத்திரப்பாடல்களில்;

- கொக்கட்டிச்சோலை தான்தோன்றீசுரர் தோத்திரம்
- கன்னன்குடா கண்ணகி அம்மன் தோத்திரம்
- அமிர்தகழி மாமாங்கப்பிள்ளையார் தோத்திரம்
- சனிபகவான் தோத்திரம் போன்றவையும்

அம்மானைப் பாடல்களில்;

- மட்டக்களப்பு வரலாற்று அம்மானை
- திருக்கேதிச்சர அம்மானை
- தாந்தாமலை முருகன் அம்மானை போன்றவையும்

கும்மிப் பாடல்களில்;

- அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் கும்பி
- தியாகதீபம் அன்னை பூபதியின் புகழாரக்கும்மி போன்றவையும்,

நாடகக் கூத்துப்படைப்புக்களில் வடமோடி, தென்மோடி எனப்பிரித்து நோக்குவது சாலச்சிறந்ததாகும். அந்த அமைப்பில் வடமோடியை நோக்குகையில்;

- சத்தியசீலன் நாடகம்
- கடோற்கசன் நாடகம்
- நல்லதங்காள் நாடகம்
- கலிகால நாடகம்

பணிக்கப்போடி பவளநாதன்,
கன்னன்குடா

- கெங்கை அம்மன் நாடகம்
- அருச்சுனன் காண்டாவனம் ஆகியனவும்

தென்மோடியில்;

- லீலாவதி நாடகம்
- தளுக்குச் சுந்தரி நாடகம்
- ஜயாதிராசன் நாடகம்
- புவனேந்திரன் நாடகம்
- சித்திரபுத்திரர் நாடகம்

ஆகியனவும் புலவரது படைப்புக்களை அலங்கரிக்கின்றன. மற்றும் எனது தேடலில் சிக்காமலும் சில படைப்புக்கள் காணப்படுகின்றன. ஏனெனில் இங்கு நான் குறிப்பிடும் புளியடிமடு படபத்திரகாளி அம்மன் காவியம் 1986ல் வெளிடப்பட்டுள்ளது. அதில் குறிப்பிட்டுள்ள குறிப்பில் “இது என்னால் இயற்றி அச்சிடப்பட்ட பதினேளாவது(17) பாடல் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு “மட்டக்களப்பு வரலாற்று அம்மானை“ என்ற படைப்பு 1979ல் வெளியிடப்பட்டுள்ளது.
எனவே இக்கால வட்டத்தை நோக்குகையில் கிடைக்காத அச்சுவடிவங்கள் அதிகம் என்பது உண்மையாகும். எது எவ்வாறாயினும் புவலர் அவர்கள் படைத்துள்ள “மட்டக்களப்பு வரலாற்று அம்மானை“ என்ற படைப்புக்கு மதிப்புரை வழங்கியுள்ள அந்நாள் மட்டக்களப்பு மாவட்ட சனசமூக அதிகாரியாகிய ம.சற்குணம் அவர்கள் கீழ்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள குறிப்பானது புலவரின் படைப்பை மேலும் சிறப்பித்துள்ளது. அக்குறிப்பானது “மட்டக்களப்பு வரலாறு பற்றி அறிந்து கொள்ள ஒரு சில நூல்களே கிடைக்கும் இந்நாளில் மட்டக்களப்பு வரலாற்று அம்மானையை இலகுதமிழிற் பாடி வெளியிட்டு வைக்கும் சிதம்பரப்பிள்ளை



புலவரை மட்டக்களப்பு வரலாறு எழுதுவோர் மிகவும் எளிதில் மறந்து விட மாட்டார்கள் என்று நம்புகின்றேன்“ என்ற வகையில் அமையப்பெற்றுள்ளது.

அதுமட்டுமன்றி 2013 ஒக்டோபரில் பேராசிரியர் செ.யோகராசா அவர்களின் படைப்பான “ஈழத்து முச்சந்தி இலக்கியம்“ என்ற இலக்கிய வடிவத்தில் புலவருடைய மட்டக்களப்பு வரலாற்று அம்மானையின் ஒரு பிரிவை இங்கு நோக்க வேண்டியது கட்டாயமாகும்.

“போற்றிய அம்மானை புகழுகிறேன் கேளுமினி

நாற்றிசையும் பேர் விளங்கும் நல்லவர் கடையில்

வேற்றரசர் தாழ்பணிய வேந்தன் கலிங்கனுமே

ஏற்ற புகழ் பெருக எல்லை எங்கும் ஆண்டிருந்தார்“

இவ்வாறு சிறப்புப்பெற்று விளங்கும் புலவர் சிதம்பரப்பிள்ளை அவர்கள் 1985இல் இந்து கலாசாரப் பேரவையினால் “கலைமணி“ பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். அத்தோடு கன்னன்குடா கண்ணகி ஆலய வீதியில் மூன்று பொன்னாடைக் கௌரவங்களையும் நாட்டுக்கூத்துப் படைப்பினூடாக வானொலி நிகழ்ச்சிப் புகழையும் பெற்றுள்ளார். அத்தோடு மட்டக்களப்பு மாவட்ட கலாசாரப் பேரவை 1989 “கலைஞர் கௌரவம் என்ற பாங்கினுள் புலவரைப் பாராட்டிக் கௌரவித்துள்ளனர்.

எழுத்தாற்றல் மூலமாக படைப்பாற்றலை தன்னகத்தே கொண்ட புலவர் சமூகசேவை, ஆலயத்தொண்டு என்ற மகத்தான பக்கத்தையும் விட்டுவைக்க வில்லை குறிப்பாக கன்னன்குடா கண்ணகி அம்மாள் ஆலய வீதியில் “அன்னதானம்“ வழங்கும் கருதரிய தொண்டினை அன்னார் தனது முயற்சியில் ஆரம்பித்து அவ்விடத்திலேயே 1972ல் அன்னதான மடம் ஒன்றினையும் அமைத்து தனது தடம் பதித்தவர். இதனது பிரதிபலிப்பே இன்றும் அன்னாரது பெயர் நினைவில் அன்னதான சபையும் இயங்கி வருகின்றது என்பது பெரும் பாக்கியமாகும்.

புலவரின் படைப்புக்களில் காவியப் படைப்பாக வெளிவந்த “கன்னன்குடா கண்ணகி அம்பாள் ஆலயத்தில் கள்வர் பிடிபட்ட காவியம்“ என்பது சிறப்பு மிக்க உண்மை நிகழ்வொன்றின் வெளிப்பாடாகும். இதனை பெறுவது அரிதாக இருந்த காரணத்தினால் கன்னன்குடா கண்ணகி முத்தமிழ் மன்றம் 2006ஆம் ஆண்டில் மீள் பதிப்புருவாக்கம் செய்தமை மற்றுமோர் படைப்பின் புகழாரமாகும். இப்படைப்பானது புலவரின் பதினான்காவது படைப்பாக 1981ல் வெளிவந்தது. என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு புலவர் பயணித்த பாதை மிக பெறுமதி மிகுந்த பாதை என்பது கண்கூடு ஆயினும் இன்றைய இலக்கிய ஆர்வலர்கள், தமிழ்மொழியின் பற்றாளர்கள் இவ்வாறானவர்களை காலத்தின் கண் கண்டுகொள்வது கட்டாயமாகும். இந்த அடிப்படையின் பால் 1990.06.14 அன்று இறைபதம் அடைந்த கலைமணி மாணிக்கன் சிதம்பரப்பிள்ளை புலவர் அவர்களையும் கண்டு கொள்வதிலும் மகிழ்வு ஏற்படும்.


## மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலய தேர் நிதி கோரல்



மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்துக்கான தேர் ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகளில் ஆலய நிர்வாகத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

39 அடி உயரத்தில் இந்த திராவிட முகபத்திர சிறப்புத் தேர் உருவாகிவருவதாக ஆலய நிர்வாகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த தேரின் உருவாக்கத்தில் பங்குகொள்ள விரும்பும் அடியார்கள், அதற்கு நிதியுதவிகளை வழங்க முடியும் என்று அவர்கள் தமது அறிக்கை ஒன்றில் அறிவித்துள்ளனர்.

இந்த தேர் உருவாக்கத்துக்கு நிதி உதவி வழங்கவிரும்புபவர்கள் மட்டக்களப்பு இலங்கை வங்கியின் 77132027, 2700575 கணக்கு இலங்கங்களுக்கு அதனை செலுத்த முடியும் என்று ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது.

இந்தத் தேரின் வெள்ளோட்டம் 27/07/2018 இல் நடக்கவிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆலய வண்ணக்குமார் சபை
TP: 077 180 35 75 , 071 58 63 699






# கட்டிளமைப் பருவ உளநலம் பல்கலைக்கழக மாணவர்கள்.



டாக்டர். பி. யூடி ரமேஸ் ஜெயக்குமார்
உளநல மருத்துவர்
வாழைச்சேனை மருத்துவமனை

உயர்தரப் போட்டி பரீட்சைக்கு பின்னர் மாணவர்கள் தாங்கள் கற்ற துறையினூடாக இலங்கையிலுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களிற்கும், அவற்றின் துணை வளாகங்களிற்கும் தெரிவு செய்யப்படுகின்றனர். போட்டிப்பரீட்சைகளில் களைத்துப்போன கட்டிளமைப் பருவத்தினருக்கு தமது பிந்திய காலப் பருவத்தை பல்வேறு அனுபவங்களோடு, ஓரளவிற்கு குடும்பச்சூழலில் இருந்து விடுபட்டு தமது சகபாடிகளுடன் பல்கலைக்கழக விடுதிகள், தனியார் வீடுகள், வாடகை வீடுகளிலும் தனியாகவும், குழுக்களாகவும் இருந்து கல்வி கற்பதற்கான ஒரு சூழ்நிலை உருவாகின்றது. அத்துடன் ஒருசில மாணவர்கள் தமது இலக்கிலிருந்து தவறி பாழும்கிணற்றினுள் விழுகின்ற நிலமைகளும் இக்காலப்பகுதியிலேயே ஏற்படுகின்றது.



இளைஞர், யுவதிகளின் மனங்களில் உயர்கல்வியை கற்று பொருத்தமான தொழில் ஒன்றை பெற்றுக்கொள்வதே இறுதிக்கனவாக காணப்படுகின்றது. அறிவு, திறமை, பல்திறனுள்ள ஆற்றல்கள், தலைமைத்துவம், பொறுப்புக்கூறல் சேவை மனப்பான்மை, மனிதாபிமானம் போன்ற பல உயரிய பண்புகளை பல்கலைக்கழகங்கள் மாணவர்களுக்கு பெற்றுக்கொடுக்கின்றன. பல்கலைக்கழக திருத்தச் சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, பல்கலைக்கழகங்களுக்கும் உயர் கல்வி நிலையங்களுக்கும் மாணவர்களை தெரிவு செய்வதற்கும், பகிர்ந்தளிப்பதற்கும் பொறுப்பான அமைப்பாக இருக்கின்றது.

பல்கலைக்கழக அனுமதி
---------------------------------------------------------------

1978ம் ஆண்டின் 16ம் இலக்க திருத்தப்பட்ட பல்கலைக்கழகங்கள், அரச பல்கலைக்கழக முறைமை 216 கற்கை நெறிகளை மாணவர்களுக்கு வழங்குகின்றது. உயர் கல்வியில் அரச கொள்கைக்கு இணங்க, அனைத்து கற்கை நெறிகளும் இலவசமாக வழங்கப்படுவது மிகப்பெரிய பாக்கியமாகும். மேலதிகமாக மாணவர்களிற்கு மகாப்பொல அரசாங்க ஊக்குவிப்புத் தொகை அத்துடன் உள்ளூர், வெளியூர், தனியார், தொண்டு அமைப்புக்களால் மாணவர்களுக்கு தமது கல்வி முயற்சியை இடையூறின்றி நிறைவு செய்வதற்கு உதவி செய்கின்றன. புள்ளி விபரங்களின்படி 70 – 80 வீத மாணவர்கள் இவ்வாறான உதவிகளை பெற்றே தமது கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்கின்றனர். மிகவும் குறைந்த வீதத்தில் விடுதி வசதிகளும், நகரை விடுத்து அமையப்பெற்ற பல்கலைக்கழகங்களில் பல்கலைக்கழக காலம் முழுவதும் விடுதி வசதிகள் வழங்கப்படுகின்றன. கலைப்பட்டக் கற்கை நெறிகளுக்கான தெரிவு முறைமை மாவட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதால் அரச பல்கலைக்ழகங்களுக்கான அனுமதி மிகவும் போட்டிக்குரியதாகும். 2016இன் க.போ.த (உ/த) பரீட்சையின் அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பித்த 71,106 மாணவர்களில் கல்வியாண்டு 2016 / 2017 க்கு 29,333 மாணவர்கள் மட்டுமே பல்கலைக்கழகங்களிற்கு தெரிவுசெய்யப்பட்டனர். அதாவது 50வீதத்துக்கும் குறைவான மாணவர்களுக்கே இலவசமாக இலங்கையில் உள்ள ஏதாவதொரு பல்கலைக்கழகத்தில் கல்வி கற்பதற்கான சந்தர்பம் கிடைக்கின்றது. இவ்வகையில் பல அனர்த்தங்களிற்கும், மனித அவலங்களுக்கும், காரணமான உள்நாட்டு யுத்தத்திற்கு தரப்படுத்தல், பல்கலைக்கழக தேர்வுகளில் ஏற்பட்ட குழப்பங்கள் காரணமென தமிழர்கள் இன்றும் குறிப்பிடுகின்றனர்.

வாழ்கைத்திறன்கள்
---------------------------------------------------------------

பல்கலைக்கழக மாணவர்களின் ஆளுமை வளர்ச்சிக்கு வாழ்க்கைத்திறன்கள் உட்பட பல அத்தியாவசியமான விடயங்கள் தேவைப்படுகின்றன. பல்கலைக்கழக மாணவர்களின் வாழ்க்கைத் திறன்களையும், ஏனைய கல்விசாரா நடவடிக்கைகளையும் விருத்தி செய்வதற்கு பல்கலைக்கழகங்களில் தேவையான வசதி வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. அத்துடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இளமானி பட்டதாரிகளின் ஆங்கில மற்றும் தகவல் தொழில்நுட்ப அறிவினை விருத்தி செய்வதற்கு விசேட அக்கறை கொண்டுள்ளது. 2012ஆம் ஆண்டில் புதிய ஆங்கில மொழி கற்பித்தல் துறைகள் (ELTD) பல்கலைக்கழகங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. UTEL என அமைக்கப்படும் குறித்த வித்தியாசமான மட்டங்களிலான (Band Levels) சீரான பரீட்சை எல்லா பல்கலைக்கழக மாணவர்களுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. UTEL சான்றிதழ்கள் தொழில் வாய்ப்பின் போது ஆங்கில தகைமையை அது பறைசாற்றுவதாக அமைகின்றது.

கல்விப்பொது தராதர உயர் பரீட்சை, அது எத்துறை சார்ந்தது எனினும் மிகவும் போட்டித் தன்மையானது. இக்காலப்பகுதியில் மாணவர்கள் கல்வி தவிர்ந்த ஏனைய எந்த செயற்பாடுகளிலும் ஈடுபடுவதற்கு போதிய நேர அவகாசம் இருக்காது. முதல்முறை பரீட்சை எடுக்கப்போகின்ற மாணவர்களின் கல்வி இலக்குகள், போதனை, பரீட்சைகள் நெருங்கும் புரட்டாதி மாதம்வரை நீண்டு செல்லும். இக்காலப்பகுதிகளில் மாணவர்கள் பாடசாலைச்செயற்பாடு, தனியார் கல்வி நிறுவனம், சுயகற்றல் சார்ந்த செயற்பாடுகளிலேயே அதிக நேரத்தை செலவிடுகின்றனர். ஒருசில மாணவர்கள் மட்டும் கல்வியுடன் ஏனைய செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வெற்றி பெறுகின்றனர். பல்கலைக்கழக நுழைவு “ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவதுபோல்“ ஆனால் பல்கலைக்கழகம் புகுந்த அனைவரும் அவர்களாக பின்வாங்கி ஓடாதவிடத்து அவர்கள் பட்டதாரிகளாக வெளியேறுவதை யாரும் தடுக்க முடியாது. பல்கலைக்கழக மாணவன், பல்கலைக்கழகத்தில் உள்ள எல்லா துறைகளிலும் தன்னை ஈடுபடுத்தி தனது உடற்தகுதி, உளவிருத்தி, தலைமத்துவப்பண்புகள், குழுவாக செயற்படுதல், நல்ல தீர்மானங்களை எடுத்தல், பிரச்சினைகளை சாதகமாக தீர்த்தல், ஆக்கபூர்வமான சிந்தனைகள் போன்ற திறன்களை பல்வேறு விளையாட்டுக்கள், கலாச்சார நிகழ்ச்சிகள், மாணவர் அமைப்புக்கள், சுற்றுலாக்கள், போட்டி நிகழ்ச்சிகள் என்பவற்றின் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும். இனஒற்றுமை, மொழியை கற்றுக்கொள்ளல், பல்வேறு கலாச்சார விழுமியங்களை அறிவதற்கான சிறந்த தளம் பல்கலைக்கழகம் ஆகும். இருந்தபோதும் இன்றும் பல்வேறு பல்கலைக்கழக பீடங்களின் மாணவர்கள் குழுக்களாக பிளவுபட்டு இனரீதியாக, மத ரீதியாக மோதுவதை காணக்கூடியதாக உள்ளது.

புகுமுக மாணவர் ஒன்றியம்
---------------------------------------------------------------

பல்கலைக்கழகங்களுக்கு புகுவதற்கு இடைப்பட்ட காலங்களில் பல்கலைக்கழக புகு மாணவர்கள் பல்வேறு சமூக பணிகளில் ஈடுபடுவது மிகப்பொருத்தமானது. தமது மாவட்டங்களை அல்லது பிரதேசங்களை மையப்படுத்தி பல்கலைக்கழக புதுமுக மாணவர் ஒன்றியங்களை அமைத்து அதன் ஊடாக பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் போதிய ஆசிரியர் வளம் இல்லாதபோது அங்கு கல்வி அறிவூட்டலை மேற்கொள்ள, மாலைநேர இலவச கல்விச்செயற்பாடுகளை செய்வதன் மூலம் மாணவர்களில் கல்வியின்பால் அதிக ஈடுபாட்டை செய்ய முடியும். எவ்வாறு கல்வி கற்பது, என்பது குறித்து, தங்களது சொந்த அனுபவங்களை மாணவர்களுடன் பகிரலாம். இதுபோன்ற கல்விசார்ந்த செயற்பாடுகளுடன் தற்போது எமது பகுதிகளில் அதிகரித்து காணப்படுகின்ற தற்கொலை மரணங்கள், தற்கொலை முயற்சிகள், அநாவசியமான கடன் பிரச்சினைகள், பாடசாலை இடைவிலகல், இளவயது திருமணம், திருமணமாகாது கர்பம் தரித்தல், மது, போதைப்பொருள் பாவனை, சூழலியல் நன்நிலை, இனங்களுக்கிடையில் நல்லுறவை கட்டி வளர்த்தல் போன்ற செயற்பாடுகளுக்கான விழிப்புணர்வு, செயற்பாடுகளான தெருநாடகங்கள், பட்டிமன்றங்கள், பிரச்சாரங்கள், பத்திரிகை கட்டுரைகள், பதாதைகள் போன்றவற்றை நன்கொடையாளாகளின் உதவியுடன் செய்வதன் ஊடாக பல்வேறு சமூக செயற்பாடுகளில் பயனுடைய வகையில் ஈடுபட முடியும். அத்துடன் சமூகத்தை நாடுதல்மூலம், சமூகத்தின் தேவைகள், மக்களின் மனநிலை, அவர்களின் நாளாந்த பிரச்சினைகள் போன்ற பல்வேறு சூழ்நிலைகளை விளங்கிக்கொண்டு, தமது கவ்விச் செயற்பாடுகளை பல்கலைக்கழகங்களில் ஆரம்பிக்கும்போது தமது கல்வியில் ஆராய்ச்சி, சம்பவ மகாநாடுகளை நடத்துதல் போன்றவற்றை நல்ல முறையில் செய்யக்கூடிய உற்சாகம் கிடைக்கப்பெறும். தொழில் ஒன்றில் ஈடுபடும் பிற்காலத்தில் இவ்வனுபங்கள் பொதுமக்களுடன் நல்லுறவை பேணுவதற்கு அவர்களது தேவைகளை சரியான முறையில் விரைவாக பூர்த்தி செய்யவும் உதவும்.

தொடர்ச்சி... (பக்கம் -23 )

எப்பபாத்தாலும் மட்டக்களப்பில யிருந்துதான் வன்னிக்கு டீம் வரவேணுமோ? இந்தமுறை மட்டக்களப்புக்கு போற படையணியோட இந்தப்பகுதி போராளியளும் கொஞ்சப்பேர் போக வேணுமெண்டு ஒரு நல்லெண்ணத்தில் கொஞ்சப்போராளியள தெரிவு செய்து எடுத்தினன்; கொஞ்சமா எடுத்ததில மட்டக்களப்பால முன்னம் வந்து இஞ்சயே நிண்டவை ஒரு பத்துப்பேர், மிச்சம் யாழ்ப்பாணம் மன்னார் வவுனியா முல்லைத்தீவுப்பகுதியளச் சேந்த பிள்ளையள்தான் ஒரு இருவது பேர்.

இந்த வழங்கல் முகாமுக்கு பொறுப்பா நிண்ட பிள்ளை தானும் அடிபட வேணும் எண்ட ஆசையில யாழ்ப்பாணம் போற பிஸ்டல் டீமில சேந்து பயிற்சிக்குப் போயிட்டுது. அதால அதுவரைக்கும் அங்க உதவியா நிண்ட மட்டக்களப்பு போராளி ஒருத்திய வழங்கல் முகாம் பொறுப்பில போட்டிருந்துது. ஆளைச் சுத்தி அளவெடுக்க ஒண்டரை மீட்டர் அளவுப்பட்டி பத்தாது. பின்ன பத்தாட்டி லாம்பெண்ணைய ஊத்திப த்தவையுங்க எண்டு சொல்லப்படாது. ஏனெண்டா இஞ்ச வாற. லாம்பெண்ணையிலும் பெருமளவு மட்டக்களப்பு பெடியளின்ர சொல்லக்கூடாதெண்டு பேசறயில்ல. ஆனா இந்த வழங்கல் பொறுப்பில நிக்கிறவள் பொல்லாத காந்தாரி. புள்ளையளுக்கு வாறதையே ஒழுங்காக் குடாள். ஆனா தனக்கு ஆனமான கறி, புளியில்லாட்டி தின்னாள். இஞ்சையும் இயக்க வழங்கல்தான்; ஆனா எப்பிடியோ சுத்தி மேலால கறியள் காச்சிப்போடுவாள். அதுமட்டுமில்ல, இது வழங்கல் முகாமெண்டதால தீடீர் தீடீரெண்டு போராளியள் வந்து ஒருநாள் ரெண்டுநாள் நிண்டுபோற இடமா இருந்துது. அப்பப்ப சமையல விட்டு விட்டு செய்யேலாதெண்டு ஒரு சமையல்காறிய போட்டிருக்கிறாள். அது ஒரு கிழவி எண்டா, ராமாயணத்தில கவலையாக்கிடந்தது.

ஒருக்கா மருத்துவமனையில உள்ள காயக்காறப்பிள்ளையளுக்கெண்டு வந்த மாமைட், கோர்லிக்ஸ், புரொட்டீனெக்ஸ், நெஸ்ட்டோமோல்ட் எண்டு கன சாமானுகளை பதுக்கி வச்சிருந்திட்டு கடைசியா கலாவதியாகக் கிட்ட பிடிபடக்கூடாதெண்டு, பக்கத்தில உள்ள முகாம்களுக்கு தூக்கி குடுத்தவள். பெரிய பொறுப்பாளர் வந்துதான் குடுத்தது. ஏனெண்டா நிதிப்பிரிவால வந்து கண்டாங்களோ குடுக்கிற வழங்கலையும் குறைச்சுப்போடுவாங்கள். அதைவிசாரிக்க அவா சொல்லுறா, சண்டை ஒண்டு வந்தா

# வடபுலத்து பெண்ணின் பார்வையில் மட்டக்களப்பார்...

அங்க சுத்தி இஞ்சசுத்தி எடுத்த பிள்ளையள நாங்கள் இருந்த முகாமிலதான் கொணந்து விட்டிருக்கு. மோட்டச்சயிக்கிலுகளுக்குத்தான் அடிச்சு விடுறாள். மூசுக்குப்போற தேவையளுக்கு இவாதான் தம்பி




இவைக்கு போகுமளவுக்கும் சாப்பாடு வழங்கல் முகாமிலதான், அதுவும் இதுவும் பக்கத்திலதான் எண்டாலும் முல்லைத்தீவு முள்ளியவளை வீதி இதை ரெண்டா பிரிச்சு போகுது.

தம்பியெண்டு வாறவைக்கெல்லாம் அடிச்சு அனுப்பிறதை நான் கண்ணால கண்டனான். அவங்களும் கதைக்கேக்க அப்படித்தான் வயுத்துப்பிள்ளை வழுக்கி விழுந்திடும்.

இனி நாமளும் ஊரைவிட்டு தூரமா வந்து நிக்கிற பிள்ளையள் கண்டதையும் குறை

## மட்டுநகர் மண்ணைத்தொட்டு 19

கூனிமாதிரித்தான். தன்ர வேலைக்கு பாதகமில்லாம விதவிதமா பொறுப்பாளருக்கு சமைச்சு பெசலா ஒழிச்சு வைக்கிறதும் இருக்கிற வழங்கல் சாமானுகள்ள பலகாரம் சுடுகிறதும் எண்டு அவளை வாய்க்கு ருசியா சமைச்சுப்போட்டே மருட்டி வச்சிட்டுது.

இப்பிடி இவள் பெரீசா பெடியளோட ஊடாடினாலும் மலைபோல இருக்கிற இவளின்ர தேகத்தை கண்டு இவளுக்கு வேறமாதிரி பிரச்சனையள் வராது எண்டதில எல்லாரும், எண்டா பொறுப்பாளர்கள் எல்லாரும் ஐமிச்சப்படயில்ல. அவளுக்கும் அப்பிடி ஒண்டுமில்ல ஆனா இவள் தனக்கணைஞ்ச பெடிளுக்கு சோடி சேத்து விடுறதில வலு கெட்டித்தனமா இருந்தாள். இது கனகாலமா ஒருவருக்கும் பிடிபடயில்லை. ஒரு கரும்புலிப் பெடியன்ர தங்கைக்காறிய இப்பிடி சேத்ததில அவள் துண்டு குடுத்திட்டு வீட்டுக்கு போயிட்டாள். பாவம் தாய் தேப்பனில்லாத பிள்ளை இயக்க மதிப்பில எடுத்துப்போட்டு பிறகு எங்கயும் கைவிட்டிட்டா என்ன செய்யிறதெண்டு காயக்காறருக்கு தேவைப்படுமெண்டு வச்சிருந்தாவாம். “இப்ப இவாதான் தளபதி“எண்டு மற்ற முகாம்;ளையள் நாக்கு வளைச்சதை; பாக்கயில்ல. இப்ப இவ்வளவு பீடிகை ஏன் போடுறனெண்டா இவா தன்ர பிரதேசத்து பெடியளப் பாத்ததுபோல பிள்ளையளப் பாக்கயில்ல. மட்டக்களப்புக்கு போக ஆயத்தமா நிண்ட பிள்ளையளுக்கு நடந்ததை பாப்பம்.

(தொடரும்)

## மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் நிதிக்கு உதவவில்லை என்கிறது சீன நிறுவனம்

தொடர்ச்சி...

தாம் செயற்பட்டதாகவும் அன் ஷின் தெரிவித்தார்.

தவறான கருத்துக்களின் அடிப்படையில் சோடிக்கப்பட்ட ஆதாரங்களை கொண்டு அந்த ஊடக அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## சேனையூரில் தேர்த்திருவிழா





கொட்டியாரப் பற்றில் மிக நீண்ட வரலாறு கொண்ட சேனையூர் வர்ணகுலப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த தேர்த் திருவிழா 29.06.18 வெள்ளிக்கிழமை பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் வடம் பற்றி தேர் இழுக்க, தேரடிச் சிந்தும் தேர் பற்றிய விளக்க உரைகளுமாக சிறப்பு பெற ஒரு பண்பாட்டு பெரு விழாவாக கொண்டாடப்பட்டது.

“சேனையூரின் சோலையேறிக் குலுங்கிவரும் தென்றல்!

சேற்றுவயல் வாசம்வீசி, ஆடிவரும் முன்றில்!

தேனும்மினிய பழமும்பாலும் தாமரைப்பூச் செண்டும்!

தோகைநிறை காவடியும் தீந்தமிழும் கொண்டு!
ஆனைமுகசாமி உந்தன் அடியினுக்கே வந்தோம்!

ஆடிவரும் தேரிலேறி ஓடிவாரும் ஐயா!

வானைமுட்டும் அரோகராவும் வாய்நிறையச் சாமி!

வந்தருள்வாய் வர்ணகுல வேழமுக சாமி!“ கொட்டிய ஆரன்

கொட்டியாரப் பற்றில் முதல் முதல் தேரோட்டம் கண்ட திருவூராக சேனையூர் விளங்குவது அதன் வரலாற்றுத் தொன்மையயையும் கலாசார நீட்சியையும் சொல்லி நிற்கிறது.ஷ

(சேனையூர் நிருபர்)

## ‘கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் பின்னால் அனைவரும் அணிதிரள வேண்டும்’ - செங்கதிரோன்.த.கோபாலகிருஸ்ணன்

தொடர்ச்சி...

மேலும், பிரதேச செயலாளர் பிரிவு மட்டக் கூட்டங்களில் கலந்து கொள்ளும் பொதுமக்களின் சந்தேகங்களுக்கும் கேள்விகளுக்கும் கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் ஸ்தாபகர்களான சிரேஸ்ட சட்டத்தரணி த.சிவநாதன் மற்றும் செங்கதிரோன் த.கோபாலகிருஸ்ணன் ஆகியோருடன் கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் உயர்மட்டக் குழு உறுப்பினர்களும் இணைந்து பதில்களை வழங்கி, கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் கொள்கை விளக்க உரைகளை ஆற்றிக் கிழக்குத் தமிழர் ஒன்றியம் பற்றிய தெளிவூட்டல்களை மக்களிடையே ஏற்படுத்தி வருகின்றனர்.

இது குறித்துக் கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் ஸ்தாபகர்களில் ஒருவரான செங்கதிரோன் தம்பியப்பா கோபாலகிருஸ்ணன் அவர்கள் ஊடகங்களுக்குக் கருத்துக் கூறுகையில்,

“மக்கள் ஒன்றுபடத் தயாராகவே உள்ளனர். ஆனால் தலைவர்களும் கட்சிகளும்தான் தங்கள் தனிநபர் மற்றும் கட்சி நலன்களுக்கு முன்னுரிமை கொடுப்பதால் பொதுச் சின்னத்தின் கீழ் ஒன்றுபடுவதற்குத் தயக்கம் காட்டுகின்றனர். தங்கள் தங்கள் கட்சிகளுக்குள் செல்வாக்குமிக்க கட்சி முக்கியஸ்தர்கள் பொதுச்சின்னத்தின் கீழ் ஒன்றிணைவதற்குத் தங்கள் கட்சிகளின் தலைமைப்பீடங்களுக்கு அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும். பொதுமக்களும் அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும். கிழக்கு மாகாணத்தைத் தமிழர்கள் தம்வசம் வைத்திருக்க வேண்டுமானால் எதிர்வரும் கிழக்கு மகாணசபைத் தேர்தலில் சகல தமிழ் அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து பொதுச் சின்னம் ஒன்றின் கீழ் போட்டியிட்டால் மட்டுமே அது சாத்தியம்.

சகல தமிழ் அரசியல் கட்சிகளையும் ஒரு பொதுச் சின்னத்தின் கீழ் ஒன்றிணைய வைப்பதற்குக் கிழக்கு மாகாணத் தமிழர்கள் அனைவரும் கட்சி அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் பின்னால் அணி திரளவேண்டும். அதற்குத் தமிழ் ஊடகங்களும் பாரிய பங்களிப்புச் செய்ய வேண்டும்“ என்று குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் விளக்கம் தருகையில், மக்களுக்காக கட்சிகளே தவிர கட்சிகளுக்காக மக்கள் அல்ல என்பதே கிழக்குத் தமிழர் ஒன்றியம் கடைப்பிடிக்கும் “அரசியல் அறம்“ என்பதைத் தெளிவுபடுத்தினார்.



## கதிர்காமம் காட்டுப்பாதை திறப்பு



கதிர்காமம் ஆடிவேல் விழாவை முன்னிட்டு பாதயாத்திரையில் செல்லும் யாத்திரீகர்களுக்கான காட்டுப்பாதை கடந்த (4) புதன்கிழமை காலை 6.45மணிக்கு பக்தர்களின் அரோஹரா கோசம் விண்ணைப்பிளக்க திறந்துவைக்கப்பட்டது.

முன்னதாக உகந்தமலை முருகனாலயத்தில் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ.க.கு.சீதாராம் குருக்களின் விசேட பூஜை அதிகாலை 5.25 மணியளவில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட பதில் அரசாங்க அதிபர் க.விமலநாதன், உதவி அரசாங்க அதிபர் கே.உதார லாகுகல, பிரதேச செயலாளர் சந்துருவன், உதவிப் பிரதேசசெயலர் கே.நவநீதன், காரைதீவு பிரதேசசபைத் தவிசாளர் கே.ஜெயசிறில் ஆகியோர் உட்பட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

ஆலயத்தலைவர் பொடிநிலமே திசாநாயக்க, பொருளாளர் வீ.பத்மநாதன், உறுப்பினர் தில்லை உருத்திரன் உள்ளிட்ட ஆலய நிருவாகசபையினரும் கிழக்கு மாகாண பிரதி சுகாதார சேவைப்பணிப்பாளர் டாக்டர் அழகையா லதாகரன் சிரேஸ்டட பொதுச்சுகாதாரப்பரிசோதகர் எஸ்.புனிதராஜா ஆகியோரும் அங்கு இருந்தனர். அங்கு 30நிமிடங்கள் விசேடபூஜை நடைபெற்று, முடிந்ததும் சீதாராம் குருக்களின் ஆசியுரை



இடம்பெற்றது.

அங்கு அதிகாரிகள் அனைவரும் வந்ததும் காலை 6.45 மணியளவில் காட்டுப்பாதைக்கான கதவு திறக்கப்பட்டது.

இப்படி எதிர்வரும் 22ஆம் திகதிவரை அடியார்கள் காட்டுக்குள்ளாள் கடக்க முடியும்.
(காரைதீவு நிருபர் சகா)

## கதிர்காம பாதயாத்திரீகர்களின் அனுபவப்பகிர்வுகள்!

தொடர்ச்சி...

நிரந்தர சமாதானமாக நிம்மதியாக வாழவேண்டும் என்பதே எனது வேண்டுகோள்.

கந்தசாமி மனோகரன்(வயது 65) உடுப்பிட்டி கூறுகையில்:

பிறந்த பலனை அடையவேண்டு மென்பதற்காக முதற்றடவையாக நான் பயணிக்கின்றேன். வசதியுடனுள்ளவர் காசி, ராமேஸ்வரம் என்று போவார்கள். நாங்கள் இவ்வாறு 98தலங்களை தரிசித்து கதிர்காமத்தை சென்றடைவது ஆனந்தமாக உள்ளது. இது வாழ்க்கையில் கிடைக்காது. என்றார்.

செல்லையா யோகம்மா(வயது 67) முகமாலை பளை கூறுகையில்:

இது 2வது தடவை. எனக்கு தனிப்பட்ட வேண்டுதல் இல்லை. எமது முகமாலைக் கிராமம் போரில் சின்னா பின்னமானது. அங்குள்ள மக்களும் நிறைவாக இல்லை. அவர்கள் வளமாக வாழவேண்டும் என்பதே எனது வேண்டுதல். என்றார்.

நாகப்பன் இராசையா(வயது 61) காரைதீவு கூறுகையில்:

இது எனது முதலாவது பயணம். வேல்சாமியுடன் பயணிப்பது ஆனந்தமாகவுள்ளது.

சிங்கராஜா ஜெயராஜா(வயது 35) காரைநகர் கூறுகையில்:

இது 3வது தடவையாகும். எனது அண்ணனின் மகன் கஜானன் 3வயதில் நடக்கமுடியாமல் இருந்தான். அது சரிவரவேண்டும் என்று கோரி பாதயாத்திரையில் ஈடுபட்டேன். இப்போ நடக்கிறான். அற்புதம்.

கந்தன் சின்னராசா (வயது72) சண்டிலிப்பாய் கூறுகையில்;

இது எனது 8வது தடவையாகும். முருகனின் அருள்வேண்டி பயணிக்கின்றேன்.

பொன்னையா மல்லிகாதேவி(வயது69) பனிப்புலம் கூறுகையில்:

4வது தடவையாகும். எனது மகளின் பிள்ளைக்கு காது கேட்காது. ஆதலால் முருகனிடம் வேண்டி பாதயாத்திரையில் ஈடுபட்டேன். இப்போ கேட்கிறது. அதற்காக மரணிக்கும்வரை பயணிப்பேன்.

பிள்ளையான் பேரின்பராசா (வயது 30) சித்தாண்டி கூறுகில்:
எனக்கு பயங்கர மூச்சு இழுத்தது. புழுதி சிறிதென்றாலும் ஆஸ்த்மா பயங்கரம். காலும் நடக்க முடியாது. முருகனிடம் நேர்த்தி வைத்து பாதயாத்திரையிலீடுபட்டேன். இப்போ ஒரு பிரச்சினையுமில்லை..

கதிரேசு யோகநாதன்(வயது 58) மாமூலை முல்லைத்தீவு கூறுகையில்:
குடும்பச்சுமை பொருளாதாரச் சுமைகளை களையவேண்டி பாதயாத்திரையில் ஈடுபடுகின்றேன். இன்று ஓரளவு திருப்தியாகவுள்ளது.

வே.வினாசித்தம்பி(வயது 76) மிருசுவில் கூறுகையில்:

நான் ஏலவே தனியாக 8தடவைகள் பயணித்துள்ளேன். வேல்சாமியுடன் 4வது தடவையாக பயணிக்கின்றேன். எனக்கு நடந்த அற்புதத்தை கூறவிரும்பவில்லை. என்றார்.

கோபால் விக்னேஸ்வரன்(வயது65) கிளிநொச்சி கூறுகையில்:

வேல்சாமியுடன் 4வது தடவையாகப் பயணிக்கின்றேன். ஒரு வேண்டுதலுமில்லை. பயணிப்பதில் திருப்தி சந்தோசம் அவ்வளவுதான் என்றார்.


## அரங்கத்தில் அரங்கம்: அரங்கத்தில் மூழ்கிய கல்வி அதிகாரிகள்!




தமிழ் மொழித்தினப்போட்டியில் சாதனை படைத்த மாணவிகளைப் பாராட்டும் அரங்கத்தில் ‘‘அரங்கம்’’ வாராந்த பத்திரிகை முக்கிய இடம்பிடித்தது. அரங்கத்தில் இருந்த கல்வி அதிகாரிகள் நிகழ்ச்சிகளைவிட “அரங்கத்தில் “கவனம் செலுத்தி வாசித்ததை அவதானிக்கக் கூடிதாயிருந்தது. அரங்கத்தில் வெளிவந்த போட்டியா? விழாவா? என்ற கட்டுரை அதிகாரிகளைக் கவர்ந்ததில் வியப்பில்லைதான்.

அகில இலங்கைத் தமிழ் மொழித்தினப் போட்டியையொட்டி கிழக்குமாகாண கல்வித்திணைக்களம் நடாத்திய மாகாணமட்டப் போட்டியின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியில் சம்மாந்துறை வலயத்தைச் சேர்ந்த ஸ்ரீகோரக்கர் தமிழ் மகா வித்தியாலயம் இரண்டாமிடத்தைப் பெற்றுச்சாதனை படைத்தது. அதனைப்பாராட்டும் நிகழ்வு அதிபர் எஸ்.விஜயகுமாரன் தலைமையில் நடைபெற்றபோது சம்மாந்துறை வலயக் கல்விப்பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் கோட்டக் கல்விப்பணிப்பாளர் எ.சபூர்த்தம்பி உதவிக் கல்விப்பணிப்பாளர்களான வி.ரி. சகாதேவராஜா, எ.ம்.ரசீன் ஆகியோர் கலந்துகொண்டு பயிற்றுவித்த ஆசிரியை திருமதி சிவசாந்தினி கிருசாந்தன் மற்றும் மாணவிகளைப் பாராட்டினார்கள்.

## மட்டக்களப்பு மாவட்ட பௌர்ணமி கலை விழா



பிரதேச செயலாளர் கே.குணநாதன், மாநகர மேயர் ரி.சரவணபவன், ஆணையாளர் என். மணிவண்ணன், மண்முனை வடக்கு உதவிப் பிரதேச செயலாளர், மாநகர உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

ஏற்கனவே நடத்தப்பட்டு வந்த மாதாந்த பௌர்ணமி கலைவிழாவானது சில வருடங்கள் கைவிடப்பட்டிருந்து மீண்டும் இம் மாதத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருப்பது சிறப்பம்சமாகும்.

## கவிதை



### கச்சை

---

உடுப்புத் துவைக்கிறாயா
பிழிந்து கொடியில் உலரவைக்கிறாயா
துவைக்காமல் ஒரு கச்சை
உனக்குள் கிடக்கிறதே
நிறம் கெட்டு
கறுப்பாகி
அடுப்புக் கரிபோன்று

அதை ஏன் இன்னும் துவைக்கவில்லை
பிழிந்து உதறி
ஊத்தை நீக்கி
வெள்ளையாக்கி
ஏன் இன்னும் எடுக்கவில்லை

மழை பெய்தால் இந்தத் துணிகளை
உலர்த்துவது கடினம்
அள்ளிக் குவிக்கவேண்டும்
எங்கேனும்
பின் எடுத்தால்
ஈரம் பட்ட அதில்
ஒரு துர்நாற்றம் இழையோடும்

உள்ளிருக்கும் உன்னுடைய
கச்சையினைக் கழுகு

காயப் போட
வெயில் தேவையில்லை

நீ நினைத்தால் அதன் ஊத்தை
போகும்
உன் எண்ணங்களால் அதனை கழுகிக்
காயவைத்து
மடித்து மணம்போட்டு சுருக்கம் நிமிர்த்தி
அடுக்கிவிடலாம்

கச்சை சிறியதுதான்
ஆனால் அது உன்னை ஆட்டிப்
படைக்கின்ற
கச்சை
இந்தக் கச்சை அழுக்கானோர்
அழுக்காகி அதன் ஊத்தை
கழுகி உலர்த்தாதோர்
திரிவார்கள் இது ஊர் உலகம்
இங்கு கச்சை பிழிந்தவன்
பிழிந்து அதைக் கட்டுபவன்
இல்லாமலும் இல்லை

கச்சை சிறியதுதான்
அதை இங்கு கடல் என்றும் வர்ணிப்பர்
ஆழக் கடலைவிட இது பெரிது
உன் கச்சை எப்படி
அழுக்கா வெள்ளையா
பார்த்துக்கொள்
இடி முழக்கம் கண் பறிக்கும் மின்னல்
என்று
வருவதற்கு முன்பு வெளுத்துக்கொள்

--- சோலைக்கிளி ---

# மனதைக் கவரும் மட்டக்களப்பு நாட்டுப்பாடல்கள்

## செய்தியனுப்பல்



அறுவடைக் காலம். கணவன் அருவி வெட்டுக்காக வெளியூருக்குச் சென்றுவிட்டான். வேலை முடிந்தபின்தான் வீடு திரும்புவான். அதற்கு எத்தனை நாட்களாகும் என்று சொல்லமுடியாது. வீட்டிலே பெண்பிள்ளையொன்று வயதுக்கு வந்துவிட்டது. தாயானவள் தனது கணவனுக்கு அதுபற்றிச் செய்தியனுப்ப நினைக்கிறாள். அதே ஊருக்கு செல்லுகின்ற ஆதம்லெப்பை என்கின்ற, பழக்கமுள்ள முஸ்லிம் ஆள் ஒருவரிடம் பின்வருமாறு சொல்லியனுப்புகிறாள்.

ஆதம் காக்கா ஆதம் காக்கா
அவரக் கண்டாச் சொல்லிடுங்க
பூவரசங் கன்னியொன்று
பூமலர்ந்து போச்சுதெண்டு

என்னதான் பழக்கம் இருந்தாலும் ஆதம் லெப்பை ஓர் அன்னிய மனிதர். அவரிடம் பெண் பெரியவளான செய்தியை நேரடியாகச சொல்வதற்குப் பண்பாடு தடுக்கிறது. ஆனால் கணவனுக்குச் சொல்லியனுப்ப அவரையும் விட்டால் வேறு யாரும் இல்லை. பூவரசங் கன்னியொன்று, பூமலர்ந்து விட்டது என்று சொல்லும்போது அது ஆதம் காக்காவுக்கு விளங்கிவிட்டால் அவர் விடயத்தை நேரடியாகவே கணவனிடம் சொல்லிவிடுவார். விளங்காவிட்டால் சொன்னதை அப்படியே போய்ச் சொல்வார். தன் கணவனுக்கு அது விளங்கிவிடும். ஆக, எப்படியோ செய்தி சேரவேண்டிய ஆளிடம் போய்ச் சேர்ந்துவிடும்.

செய்திகளைச் சொல்லியனுப்புவது போலமைந்த மேலும் சில பாடல்கள் :

ஆடு துடையிலே
அன்பான மேனியிலே
கட்டு வருத்தமொன்று- என்ர,
கண்மணிக்குச் சொல்லிடுங்க
ஏத்தால வெள்ளாமை
இளங்குடலை பூங்கதிரு
மாட்டா லழியுதென்று- எங்கட,
மன்னருக்குச் சொல்லிடுங்கோ
ஏத்தால வேள்ளாமை
இளங்குடலை பூஞ்சோலை
மாட்டா லழியுதென்று- எங்கட,
மன்னருக்குச் சொல்லிடுங்கோ

வாழைப் பழம் தாறன் எங்க
வாப்பாட்டச் சொல்லிடுங்க
சீனி வெள்ளை நாகு
சீர்குலைந்து போகுதென்று
காசி வரக்காட்டவேண்டாம்
கனதூரம் நடக்கவேண்டாம்
தூதுவரக் காட்டவேண்டாம் - அந்த
துரையை வந்து போகச் சொல்லும்

வசைமொழிதல்

நாளாந்த வாழ்வின் பேச்சுவார்த்தைகளில் இடம்பெற்ற நாட்டுப்பாடல்கள் மக்களுக்கிடையே சண்டை சச்சரவுகள் எழுந்தபோது ஏசுவதற்கும், திட்டுவதற்கும்கூட பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. சாபமிடுகின்றபோதுகூட பாட்டினாலேயே சபிக்கும் அளவுக்குக் கவிநயம் அந்தக் கடலோரத்து மண்ணிலே களிநடம் புரிந்திருக்கிறது. வசைமொழிகளைக்கூட, இசைமொழியாக வெளிப்படுத்தியுள்ளார்கள் அந்தமக்கள்.

அத்தகைய பாடல்கள் சில கீழே தரப்படுகின்றன.

வெள்ளைக்காரத் துரையின் வீட்டில், வேலைக்கிருந்த உள்ளுர்க்காரன் ஒருத்தனின், நடவடிக்கையால் வெறுப்படைந்த பெண்ணொருத்தி வசைசொல்லி ஏசுகிறாள்.

பண்டி இறைச்சி தின்னி
பறங்கி வீட்ட சோறு தின்னி
பீங்கான் வழிச்சி நக்கி - உன்ர,
பெருமையாடா காட்டவந்தாய்
ஆமைதின்னி தூமைதின்னி
அடைக்கோழி முட்டைதின்னி
சங்கு வளலைதின்னி-இப்போ,
சருவாதடா என்னோட

திருமணமானவள் என்று தெரிந்தோ, தெரியாமலோ ஒரு பெண்ணின் மார்பகத்தை, மாதுளங்காய்க்கு ஒப்பிட்டு ஒருத்தன் வர்ணித்தபோது, தான் மணமானவள், ஒரு குழந்தைக்குத் தாயானவள் என்பதைப் பக்குவமாக எடுத்துரைக்கும் அதே வேளை, முறைகெட்ட அவனது செயலுக்காக அவனைச் சண்டாளன் என்று திட்டவும் செய்கிறாள் ஒருத்தி.

மாதாளங் காயுமல்ல
மருக்காலங் காயுமல்ல
பாலன் குடிக்குமென்ர
பால்முலைடா சண்டாளா

அதே போல வேறொரு சந்தர்ப்பத்தில் விதவைப் பெண்ணொருத்திமேல் விருப்பம்கொண்டு அவளைத் திருமணம் செய்யக்கேட்கும் ஒருவனிடம், தான் தனியானவளல்ல என்றும் தனக்குப் பிள்ளைகள் இருக்கிறார்கள் என்றும் அதனால் அவனது கோரிக்கையை ஏற்கமுடியாது என்றும் மறுக்கும் ஒருத்தியின் வார்த்தைகளாக வருகிறது இந்தப்பாடல்.

ஒற்றை மரமெண்டா
உடன்பிறகே நான்வருவேன்
கந்து விசிறும்
கனமரம்டா சண்டாளா

கிளிபோல மனைவி இருந்தாலும், குரங்குபோல என்றாலும் வைப்பாட்டியொருத்தியைக் களவாக வைத்திருப்பது அந்தக் காலத்தில் மட்டுமல்ல

எந்தக் காலத்திலும் சில பெரிய புள்ளிகளின் வழக்கம். அதே வேளை இரண்டு மனைவிகளோடும் பகிரங்கமாக வாழ்பவர்களும் உண்டு. திருமணமாகி மனைவியுடன் வாழும் ஒருத்தன்

**சட்டத்தரணி, பாடும் மீன்,**
**சு.ஸ்ரீகந்தராசா**

இரண்டாம்தாரமாக ஒரு பெண்ணை விரும்பியபோது அந்தப் பெண் அதற்கு மறுத்துக் கூறுகிறாள் இப்படி-

தங்கத்தை அள்ளித்
தாறனெண்டு சொன்னாலும்
பொண்டாட்டிக் காறனுக்குப்
போடுவனோ முந்தானை ?

தனது மகளை மணமுடிக்க விரும்புகின்ற ஒருவனை நேரடியாகவே தாயொருத்தி கடுமையான வார்த்தைகளால் திட்டுகிறாள். தன் குடும்பத்தின் நிலைமைக்கு அவன் கொஞ்சமும் தகுதியற்றவன் என்பதால் ஏசுகின்றபோதுகூட கூசாமல் வார்த்தைகளைக் கொட்டுகிறாள்.

சுட்டகட்டைபோல நீ
சுடுகாட்டுப் பேய்போல
அட்டை முகறா நீ
அடுப்படிக்கும் ஆகுமாடா ?

அந்தக் காலத்திலே மட்டக்களப்புத் தமிழகத்தின் கிராமங்களிலே ஒரு வழக்கம் இருந்தது. ஒரு ஆண் தான் விரும்பிய ஒரு பெண்ணின் வீட்டிற்கு நேரடியாகவே சென்று அங்கேயே தான் இனிமேல் இருக்கப்போவதாகச் சொல்லி வீட்டுத் திண்ணையிலே அமர்ந்துவிடுவான். உடனே பெண்வீட்டுககாரர் பதைபதைத்து, அவனின் வீட்டுக்குச் சொல்லியனுப்புவார்கள். விளைவு வீட்டுக்கு வீடு வெவ்வேறு விதமாக அமையும். இரு குடும்பத்தாரும் சம்மதித்து திருமணத்தைச் செய்து வைப்பதும் உண்டு. ஆனால் அது மிக அரிதாகவே நடக்கும். பெரும்பாலும் மாப்பிள்ளை வீட்டார் பொல்லுகள், தடிகளுடன் வந்து அவனுக்கு அடிபோட்டு இழுத்துச்சென்றுவிடுவார்கள். அல்லது அவனை மறந்துவிட்டோம் அவன் என்னவானாலும் செய்யட்டும், இனி எங்களுக்கும் அவனுக்கும் ஒரு தொடர்புமில்லை என்று சொல்லித் தலைமுழுகிவிடுவதும் உண்டு. பின்னர் அவனுக்கு ஒரு பிள்ளை பிறந்ததும் பெரும்பாலும் இருவீட்டாரும் மெல்லமெல்லக் கசப்புக்களை மறந்து இணைந்துகொள்வது வழக்கம்.

இதற்கு மறுதலையாக பெண்வீட்டுக்காரரே இவனை வீட்டை விட்டுத் துரத்தியும் விடலாம். ஆனால் அது மிகவும் அரிது. ஏனென்றால், பெண்ணின் சம்மதம் அல்லது அவளின் வீட்டாரின் சம்மதம் இல்லாமல் அவ்வாறு துணிந்து யாரும் ஒரு பெண்ணின் வீட்டில் போய் அமர்நதிருப்பதில்லை. அவனின் பெற்றோர் சம்மதிக்கமாட்டார்கள் என்று நிச்சயமாகத் தெரிந்தால் அவர்களுக்குத் தெரியாமல் பெண்ணின் பெற்றோர் இவ்வாறு அவனைத் தங்கள் வீட்டில் வந்து தங்கச்சொல்லி, மண மக்களுக்குக் கலத்தில் போட்டு அறைக்குள் விட்டுக் கதவை அடைத்துவிடுவதும் உண்டு. இவ்வாறு நடந்த பின்னர் அவனின் தாய் அந்த வீட்டுக்கு வந்து பெண்ணின் தாய்க்கு ஏசுகிறாள். இவ்வளவு வரலாறுகளையும் கூறி நிற்பதே இந்தப் பாடலின் சிறப்பு.

கோட்டானைக் கொம்பன்
கோடுதப்பி வந்ததென்று
சண்டாளப் பாதகத்தி சதி
நினைச்சுப் போட்டியாடி ?

காதலித்தவன் தனது இச்சையைத் தீர்த்துக்கொண்டபின் அவளை மறந்து வேறொருத்தியை மணமுடித்துவிட்டான். பின்னர் ஒரு நாள் அவனைக் காணும்போது அவன் தன்னோடு எவ்வாறு நடந்து கொண்டான் என்பதை தன் தோழியிடம் இப்படிக் கூறுகின்றாள்.

காற்றடிக்கத் தீப்பறக்க
கண்ணாம்பூச் சோலையிலே
சாத்திவைச்சிச் சதிசெய்த
சண்டாளன் போறானுகா

நடந்தது என்னவென்று வெளிப்படையாக உணரக்கூடியதாக இருந்தாலும், விரசமற்ற வார்த்தைகளால் அது வெளிப்படுத்தப்படுவது இந்தப் பாடலின்

சிறுநீரகம் தேவை

மட்டக்களப்பு நகரில் வசிக்கும், 42 வயதுடைய ஆண் சிறுநீரக பாதிப்பினை எதிர்கொண்டுள்ளார். அவருக்கு உடனடியாக சிறுநீரக மாற்று சிகிச்சை மேற்கொள்ள வேண்டுமென வைத்தியர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட நபருக்கு ஓ(O+) இரத்தவகையைச் சேர்ந்த சிறுநீரகமொன்றை வழங்கக்கூடிய நபரிடமிருந்து உதவி எதிர்பார்க்கப்படுகின்றது. தொடர்புகளுக்கு : 0771837646



# தமிழிசை தமிழிசை தமிழிசை என்றே தாளம் கொட்டிடுவோம் அனைத்து மக்களை அரவணைத்தோடும் அழகிய நதி இதுவாம்

வருடா வருடம் பட்டமளிப்பு விழாவினை அடுத்து நினைவுப்பேருரைகளை நிகழ்த்துவது யாழ் பல்கலைக்கழக வழமை. இம்முறை லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரையினை இம்மாதம் 11 ஆம் திகதி (11,6,2018) நிகழ்த்த யாழ் பல்கலைக்கழகம் என்னை அழைத்திருந்தது. தமிழர் மத்தியில் தமிழிசை கிளைவிட்ட முறைமை எனும் தலைப்பில் உரையாற்றுவதுடன் எனது ஆராய்வின் முடிவுகளை உள்ளடக்கிய ஒரு ஆற்றுகையாகவும் அதனைச் செய்யலாம் என நான் கூறியபோது"அதனை மரபு ஏற்குமா? அது நினைவுப் பேருரைதானே ?"என கூறிச் சிலர் தயக்கம் காட்டினர். நான் பேரா, புஸ்பரத்தினத்திடமும் உப வேந்தர் விக்கினேஸ்வரனிடமும், கலைப்பீடாதிபதி கலாநிதி சுதர்ஸனிடமும் ஆராய்ச்சியை எப்படி ஓர் ஆற்றுகையாகவும் வழங்கலாம் என விளக்கியபோது அவர்கள் அதனை வரவேற்றனர். நுண்கலைகளான ஓவியம் சிற்பம் ஆகியவற்றிலும் ஆற்றுகைக் கலைகளான, நடனம், இசை, நாடகம் ஆகிவற்றிலும் ஆழமாக ஆராய்ந்து கண்டுபிடிப்புகளை செய்யும் கலைஞர்கள், ஆய்வாளர்கள் எவ்வாறு தம் முடிவுகளை, ஆராய்வை வெளிப்படுத்தலாம்?ஆராய்ச்சி என்றால் எழுத்துருவையும் அதனைச் சமர்ப்பித்து வாசிப்பதையுமே பலர் எண்ணுகிறார்கள்.



இந்த வட்டத்துள் நின்று வெளிவர மரபு வேலி எம்மைத் தடுக்கிறது. வித்தியாசம் வித்தியாசமாக இவ் ஆய்வுரைகளை வழங்க முடியாதா? என்று சிந்தித்ததன் விளைவே ஆராய்ச்சி ஆற்றுகையாக என்று பெயரிடப்பட்ட உரையும் ஆற்றுகையும் கலந்த இந்த நினைவுப்பேருரை. ஏற்கனவே இதனை நான் சிறிய அளவில் செய்திருந்தேன். 'தொடர் தேடுதல்களினாலும் ஆய்வுகளினாலும் கிடைத்த தகவல்கள் கொண்டு முந்திய விடயங்களை புதுக்கியும் மாற்றியும். செம்மைப்படுத்தியும் அளித்த நினைவுப் பேருரைதான் இது.

இவ்வுரை மூன்று பகுதிகளை உள்ளடக்கி இருந்தது. முதல் பகுதி தமிழர் மத்தியில் இசை வளர்ந்த வரலாறு பற்றியதாகும். இரண்டாம் பகுதி இந்த நீண்ட வரலாற்றுப் பின்னணியில் தமிழ்ச் சினிமா உருவான வரலாறும் அதன் பின்னணிகளும் பற்றியதாகும். மூன்றாம் பகுதி அந்த ஆய்வுச் சுருக்கத்தை ஆற்றுகையாக அளிப்பதாகும். எனது உரை மூன்று செயற்பாடுகளை ஒரே நேரத்தில் உள்ளடக்கியிருந்தது . ஒன்று உரை, இரண்டு மல்டிமீடியாவில் பவர்பொயின்ரில் ஆற்றுகை, விளக்கமும் பாடப்படும் பாடல்களும் காட்சியாக, மூன்று மேடையில் பக்க வாத்தியக் கலைஞர்களான தபேலா இசைப்போர், மிருதங்கம் இசைப்போர் வயலின் இசைப்போர், உடுக்கு இசைப்போர் ஹார்மோனியம் இசைப்போர் அமர்ந்திருந்து பின்னணி இசைக்க, ஆற்றுகையளர்கள் பாடி, ஆடி நடித்து காட்சிகளை ஆற்றுகைகள் மூலம் தருதல், உரை, மல்டிமீடியா ஆற்றுகை என மூன்று விடயங்களை ஏக காலத்தில் செய்தது எனது நினைவுப்பேருரை இவ்வண்ணம் புதிய முறையில் நினைவுப்பேருரை நிகழ்த்த அனுமதி தந்த கல்விக்குழுவுக்கு என் மனம் நிறைந்த நன்றிகள்.

பொதுவாக நினைவுப்பேருரைகள் பல்கலைக்கழகங்களில் ஒரு சடங்காகவே நிகழ்த்தப்பட்டு வருகின்றன. பேசும் பேச்சை அவர்கள் ஏற்கனவே பெற்று சிறு பிரசுரமாக வெளியிட்டு அதனை வந்தோருக்கு விநியோகிப்பர்.

அதில் நினைவுக்குரியவர் பற்றிய சிறு அறிமுகமும், பேருரை நிகழ்த்துபவர் பற்றிய சிறு அறிமுகமும் நிகழ்த்தவிருக்கும் உரையும் இடம்பெறும். உரை நினைவுப்பேருரைக்குரியவர் சார்ந்தும் இருக்கலாம் அல்லது அவர் ஈடுபாடு காட்டிய துறையாகவும் இருக்கலாம். அல்லது உரை நிகழ்த்துபவர் வேலை செய்யும் துறையாகவும் இருக்கலாம். இம்முறையும் இதுவே நடந்ததாயினும்

எனது உரை ஓர் ஆற்றுகையாக நிகழ்த்தப்பட்டதுடன் ஆற்றுகை செய்யும் முறைமையும் ஆற்றுகைக்கான பாடல்களும் நூலில் இடம்பெற்றிருந்தன.

இதனால் இதனை ஆற்ற விரும்புவோருக்கு ஓர் ஆற்றுகைப் பிரதி கிடைத்தது எனலாம். உண்மையில் ஆற்றுகையின் தலைப்பு தமிழர் மத்தியில் இசை கிளைவிட்ட முறைமை என்பதாகும்.

யாழ்பல்கலைக்கழகத்தில் ஓர் இசைத்துறை இருக்கிறது. அதில் கர்நாடக சங்கீதமும் பண்ணிசையும் கற்பிக்கப்படுகிறது. கர்நாடக இசையும், பண்ணிசையுமே தமிழர் இசை என்ற ஒரு கட்டமைப்பு அங்கு வேரூன்றி விட்டது. அதற்கான பண்பாட்டுப்பின்புலமும் அங்கு உண்டு. தமிழிசை என்பது ஒரு பேராறு. அது வரலாற்றினூடாக வெளியிலிருந்து வந்த பல இசை மரபுகளையும் தன் வயமாகிய வண்ணம் பல தரப்பட வளர்ந்துள்ளது.

கோவிலுக்குள் பாடப்படும் இசைகளான கர்நாடக இசையும் பண்ணிசையுமே தமிழர் இசையாகக் கட்டமைக்கப்பட, கோவிலுக்கு வெளியே மக்கள் மத்தியில் நிலவிய நாட்டாரிசை, கூத்திசை, இசை நாடக இசை, சிறு தெய்வக்கோவிலில் இசைக்கப்படும் கரண இசை பின்னாளில் பிரபலமான சினிமா இசை, மெல்லிசை என்பன தமிழிசையாகத் தமிழிசை வல்லுமர்களால் ஏற்கபடுவதில்லை. எனது உரையிலும் ஆற்றுகையிலும் நான் தமிழிசையின் பன்மையை அழுத்தினேன். ஆரம்பத்தில் திரை பிடிபட்டு இருக்கும் திரைக்குப் பின்னால் ஒரு பெண் நிற்பாள். உரைஞரான நான் உரை ஆரம்பிப்பேன்.

தமிழர் இசை தமிழர் வாழ்விலிருந்து உருவாவது முதலில் தாலாட்டே எமக்குக் கேட்கும் முதல் இசை என்பேன், உடனே திரை தூளியாக மாற அப்பெண் தாயாக மாறித் தாலாட்டுவாள் ஏனையோர் உறவினராக அவளுடன் இணைவர்.

பிள்ளைகள் வளர அவர்களை ஊர்க்கோவிலுக்கு பெற்றோர் அழைத்துச் செல்வர்.

அங்கு அவர்கள் சடங்கிசை அல்லது கரண இசை கேட்பர் என நான் கூற

திரை நீக்கப்பட அங்கு செம்பேந்தி நிற்கும் இரு பெண்கள் செம்பெறிந்து மாரி அம்மன் பாடலுக்கு ஆடுவர் . இதுவோர் சடங்கிசையாகும்

பின்னர் இறக்கும்போதும் நாம் இசையுடன் போகிறோம் என்று கூற

திரை நீளவாட்டில் கிடத்தப்படும் அதனை ஒரு ஆளாக உருவகித்து அதன் தலை மாட்டிலும் கால் மாட்டிலும் சிலர் அமர்ந்திருக்க தாய் ஒப்பாரி வைப்பாள்.

அதன்பின்னர் நான் 3000 வருட தமிழர் வரலாறு கூறி மிகப்புராதன காலத்தில் காட்டில் மூங்கிலில் வண்டுகள் துளையிட்டிருக்கும் காற்று அதனூடாக வருகையில் ஓர் இசை பிறந்திருக்கும், அதனை கண்ணுற்ற ஒருவர் அதனை அப்படியே இசைத்திருக்கலாம் எனக்கூற, ஆற்றுகையளர் ஒருவர் வந்து

கீழேகிடந்த புல்லாங்குழலை எடுத்து ஊதிப்பார்த்து அதன் சப்தம் கேட்டு வியப்படைந்து, பின்னர் மெல்ல மெல்ல அதனை ஊத ஒரு பண் பிறக்கும்.

இதுவே குறிஞ்சிபண் அரிகாம்போதி அரி எனும் வண்டு அந்த மூங்கில் கம்பில் துளைத்த ஓட்டைகளினூடு புறப்படும் ஒலி என விளக்கி அதில் அமைந்த பெரும்பாணாற்றுப்படையில் வரும் ஒரு காட்சி அந்த இசையில் நிகழ்த்திக்காட்டப்படும். ஒரு இடையன் ஆடுமாடுகள் மேய்த்து வருவதகவும்,அவன் கூழ் காய்ச்சி குடிப்பதாகவும் புல்லாங்குழல் இசைப்பதாகவும் அக்காட்சி அமையும்

இவ்வாறே புறநானூற்று வீரத்தாய், சிலப்பதிகார மாதவி கோவலன், பல்லவர்கால திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் என்போர் பண்ணிசை பாடி மேடையில் தோன்றுவர். அப்பர் சூலை நோய் வந்து துடிப்பார், சம்பந்தர் யாழ்ப்பாணருடன் யாழ்முறிப்பண்பாடி யாழை முறிப்பார். அதன்பின் சோழகாலதில் கம்பன் தனது இராமாயாணத்தை இசையுடன் அரங்கேற்றுவான். இரமாயணப்பாடல் ஒன்றுக்கு இராவணன் அபினயிப்பான். அடுத்த காலமான நாயக்கர் காலத்தில் குமரகுருபரர் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் தமிழின் அழகொழுகப்பாடுவார். அதன் பின் அருணகிரிநாதர் சந்தத் திருப்புகழ் பாடுவார். பல்லவ காலத்தில் சிவனும் விஸ்ணுவும் பிடித்த இடத்தை இப்போது மீனாட்சியும் முருகனும் பிடித்துக்கொள்கிறார்கள்.




அடுத்து குறவஞ்சிப்பாடல், பள்ளுப்பாடல்கள், கூத்துப்பாடல்கள் எனச் சென்று முத்துத் தாண்டவரின் ஆடிக்கொண்டார் என்ற கீர்த்தனை அறிமுகம் செய்யப்பட, ஒருவர் ஆனந்தத் தாண்டவம் ஆடுவார் அதன் பின் பார்ஸி நாடக இசையும்

அது சினிமா இசையாக மாறியமையும் கூறப்படும். பாபநாசம் சிவன், ராமநாதன் விஸ்வநாதன் - இராமமூர்த்தி ஆகியோர எவ்வண்ணம் கர்நாடக இசையையும் பார்ஸி நாடக இசையையும் ஹிந்துஸ்தானி இசையையும் கலந்து சினிமா இசையை உருவாக்கினர் என்பன பாடல்கள் மூலம் கூறப்படும். அதன் பின்னர் இளையராஜாவின் வருகை கிராமிய இசை சினிமாவில் உட்புகுந்த கதை

அதன் பின்னர் ரகுமானின் மூலம் உலக இசை தமிழ்சினிமாவுக்குள் வந்தமை கூறப்பட்டு, ஒவ்வொரு போக்கையும் பிரதிபலிக்கும் சினிமாப் பாடல்கள் பாடப்படும்

இந்த தமிழிசை அனைத்து மதக் கடவுளரையும் பாடியது எனக்கூறி எங்தக் காலத்திலும் எந்த நேரத்திலும் எங்கள் யேசுவை நான் துதிப்பேன் எனும் ஜேசுநாதரைத் துதிக்கும் பாடலும், இறைவனிடம் கையேந்துங்கள் அவன் இல்லையென்று சொல்லுவதில்லை எனும் நாகூர் ஹனிபாவின் அல்லாஹ்வைத் துதிக்கும் பாடலும் பூமியில் மானிட ஜெனமம் எடுத்துமோர் எனும் பாகவதரின் புத்த பகவானைத் துதிக்கும் பாடலும் இசைக்கப்படும். அதன் பின்னர் உழைக்கும் மக்களிசை பெண்கள் எழுச்சி இசை எனச் சமுகப்பிரச்சனைகளை இசை கூறுவது உரைக்கப்பட்டு, அதற்கான பொருத்தமான பாடல்களும் பாடப்பட்டு இறுதியில்

இன்குலாப்பின்
மனுசங்கடா நாங்க மனுசங்கடா
உன்னைப்போல அவனைப்போல
எட்டுச் சாணு உயரமுள்ள மனுசங்கடா

எனும் தலித் இசையுடன் இந்தப் பிரவாகம் முடிவடையும்.

இங்கு கர்நாடக இசை பண்ணிசை தவிர்ந்த இன்னும் பல இசைகளும் தமிழரிடமுண்டு அது ஓர் அழகிய பிரவாகம். அந்தப் பிரவாகம் அனைத்தையும் அனைத்துக்கொண்டோடுகிறது என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது.

# பாதயாத்திரையின் மகிமைகள்!

சங்கத்தமிழரின் சொந்தத் தெய்வம் முருகப்பெருமான் ஆவார். முருகவழிபாட்டில் கபிலர் பரணர் நக்கீரர் போன்றோர் வழிபட்டுத் திளைத்தனர். ஈழத்தமிழரின் பண்பாட்டு பாரம்பரிய அடையாளமாக குவிமையமாகத் திகழ்வது கதிர்காமம்.



அன்று அகத்தியர், கபிலர், பரணர், புலஸ்தியர், போகர், கோரக்கர் போன்றோர் இந்தியாவிலிருந்து இலங்கை வந்து உகந்தை மலையூடாக பாதயாத்திரை மேற்கொண்டு கதிர்காமம் சென்று முருகப்பெருமானைத் தரிசித்ததாக கர்ண பரம்பரைக் கதைகள் கூறுகின்றன.

அவர்கள் பாதம்நோக வெயில்காய்ந்து, மழையில் நனைந்து, ஆபத்தான ஆரணியம் கடந்து, கொடிய மிருகங்கள் கொன்றுண்ணும் தன்மை அறியாது, பல நூறு மைல் தூரம் பயபக்தியுடன் நடந்து முருகப் பெருமானை தரிசித்ததாக வரலாறு கூறுகின்றது.

அதனை அடியொற்றியதாக 1972ஆம் ஆண்டில் அமெரிக்க முருக பக்தர் பற்றிக் ஹரிகன் கதிர்காம பாத யாத்திரையை ஒழுங்கமைக்கப்பட்ட குழுவடிவில் ஆரம்பித்தார். அதன் தொடர்ச்சியாக 1978இல் அவர் ஓய்வுபெற்றதும் அவர் தாங்கி வந்த வேலை காரைதீவைச் சேர்ந்த வேல்சாமி மகேஸ்வரனிடம் ஒப்படைத்தார்.

அன்றிலிருந்து 20வருடங்களாக வேல்சாமி தலைமையில் பாதயாத்திரை நடைபெற்று வருகின்றது. ஆரம்பத்தில் வெருகலிலிருந்து இது ஆரம்பித்தது. எனினும் நாட்டின் அமைதி நிலவிய பிற்பாடு 2012 முதல் சந்நிதியிலிருந்து இப்பாதயாத்திரை ஆரம்பமானது.



வடக்கு, கிழக்கு, ஊவா ஆகிய 3 மாகாணங்களையும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு அம்பாறை, மொனராகல ஆகிய 7 மாவட்டங்களையும் இணைத்து, 56 நாட்களில், 98 ஆலயங்களைத் தரிசித்து, 815கிலோ மீற்றர் தூரத்தை நடந்து கடக்கும் இப்பாதயாத்திரை இலங்கையின் மிகமிக நீண்ட தூர கதிர்காம பாதயாத்திரையாகக் கருதப்படுகின்றது.

இவ்வருடம் கடந்த மே மாதம் 17ஆம் திகதி சந்நதியில் ஆரம்பித்த வேல்சாமி தலைமையிலான 92 பேரடங்கிய பாதயாத்திரைக் குழுவினர் 38 நாட்கள் பயணித்து காரைதீவைக் கடந்த ஞாயிறன்று (24)வந்தடைந்தனர்.

அவர்கள் காரைதீவு நந்தவன சித்திவிநாயகர் ஆலயத்தில் பகல்பொழுதை அநாயாசமாகக் கழித்துக் கொண்டிருக்கையில் அவர்களுள் 20 பேரிடம் கண்ட பேட்டியின் விபரம் இங்கு வாசகர்களுக்கு சுருக்கமாகத் தரப்படுகின்றது.

## கதிர்காம பாதயாத்திரீகர்களின் அனுபவப்பகிர்வுகள்

தலைவர் வேல்சாமி மகேஸ்வரன்(வயது 65), காரைதீவு கூறுகையில்:

நான் கடந்த 20 வருடமாக பாதயாத்திரையில் பயணிக்கின்றேன். 7 வருடங்களாக சந்நதியிலிருந்து தலைமைதாங்கி வேல்தாங்கி பயணித்துவருகின்றேன். பல தடவைகள் பல அற்புதங்கள். அதிசயங்கள். இம்முறை வரும்போது பெரியநீலாவணை நாககன்னி ஆலயத்தில் தெய்வமாடிய பெண் என்னிடம் வந்து "1000எலும்புகளில் 1 எலும்பைத் தேர்ந்தெடுத்துள்ளேன். அதுதான் நீ. எவ்வித இடர்கள் நேரிடினும் கைவிடாது தொடர்ந்து வேல்தாங்கி பயணிக்கவேண்டும்" என்றார்.

வந்தாறுமுலையில் நித்திரையில் அசரீரி கேட்டது. இம்முறை தங்கள் "வேலை கதிர்காமம் தெய்வானை அம்மன் ஆலயத்துள் வைக்கவும்" என்று கேட்டது. வழமையாக கதிர்காமமுன்றலிலுள்ள அரசமரத்தின் கீழ்தான் வைப்பது. ஆனால் இம்முறை இந்த வாக்கின்படி செய்ய வேண்டும். எல்லாம் அவன் செயல்.

வருடாவருடம் இத்தனை அடியார்களையும் அழைத்து தலைமை தாங்கிவருவதென்பது எனக்கு ஒரு பாரமாக சுமையாகத் தெரியவில்லை. அனைத்தும் முருகனின் செயல். அவன்தான் அவனது வேல்தான் எம்மனைவரையும் எந்த விக்கினமுமில்லாமல் அழைத்துச்செல்கின்றது.

பீதாம்பரம் கந்தசாமி (வயது 65) இணுவில் கூறுகையில்:

9வது தடவையாக வேல்சாமியுடன் வருகின்றேன். 2013இல் வாழைச்சேனையால் வரும்போது திடிரென மாரடைப்பு வந்தது. 5 நிமிடம் தாமதித்திருந்தால் அன்று மரணித்திருப்பேன். ஆனால் உடனடியாக மட்டு. வைத்தியசாலையில் அனுமதித்து 17நாட்களில் சரியாகப்போய்விட்டது. 5வருடமாக பயணிக்கின்றேன். ஒரு சத்திரசிகிச்சையுமில்லை. பிரச்சினையுமில்லை. கடந்தமாதம் கைதடியில் 16நாட்கள் கைகழன்று ஆஸ்பத்திரியில் இருந்தேன். பாதயாத்திரை என்றதும் புறப்பட்டுவிட்டேன். இப்போ நன்றாகவுள்ளது.

சீனித்தம்பி சாந்தாவதி(வயது 66) - கல்லடி, மட்டக்களப்பு:

**விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா**

சந்நதியிலிருந்து 12வது தடவையாக வேல்சாமியுடன் பயணிக்கின்றேன். மட்டக்களப்பிலிருந்து 15வருடமாக பயணித்தேன். நாட்டிலே சகல இன மக்களும் சமாதானமாக நிம்மதியாக வாழவேண்டும். இனிமேல் பிரச்சினை வரக்கூடாது என்று வேண்டியே இப்பாதயாத்திரையில் ஈடுபடுகின்றேன். ஒருதடவை உகந்தையிலிருந்து 9பேருடன் பயணித்தபோது காட்டுக்குள் வழி தவறினோம். நாககன்னி வடிவில் எமக்கு வழிகாட்டப்பட்டது. இன்னுமொரு தடவை ஊறணியால் வரும்போது வேல்சாமியின் வேலிலிருந்து ஒளிவரக்கண்டேன்.

கதிர்காமு மாணிக்கவாசகர்(வயது 59) லண்டன், இணுவில் கூறுகையில்:

கடந்த 30வருடமாக லண்டனில் இருந்தேன். 2002இல் காசி போனேன் 2007இல் கைலாயம் போனேன். 2016இல் ஐயப்பசாமியிடம் சென்றேன். இந்துமதத்தின் அற்புதங்கள் எனும் சிவகுமாரன் எழுதிய புத்தகத்தில் வேல்சாமியின் பாதயாத்திரையை கண்ணுற்று அதில் பயணிக்கவேண்டுமென்ற அவாவிவிலிருந்தேன். அது இம்முறை கைகூடியுள்ளது.

சிவலிங்கம் புவனேஸ்வரி(வயது 59) – பாலையூற்று திருமலை: கூறுகையில்:

எனது மகளுக்கு சிறுநீரகத்தில் கல் என வைத்தியர்கள் கூறினர். என்னால் ஒன்றுமே செய்யமுடியவில்லை. 2011இல் வெருகலிலிருந்து பாதயாத்திரையில் வேல்சாமியுடன் பயணித்தேன். மகளின் சிறுநீரகக்கல் இருந்த இடம் தெரியாமல் போயிற்று. இது 8வது தடவை. எனக்கு வேல்சாமி தந்தை என்றால் சாந்தாவதி தாய். அப்படி நினைந்து பயபக்தியுடன் பயணிக்கின்றேன். 2012இல் வரும்போது நந்திக்கடலருகே பாரிய தாகம். நாவரண்டு தள்ளாடினோம். அவ்வேளை கடற்படை ஜீப்பில் படையினர் வந்து 2 போத்தல்களில் தண்ணீர் தந்தார்கள். குடித்துவிட்டு திரும்பிப் பார்த்தோம் ஜீப்பையும் காணவில்லை. படையினரையும் காணவில்லை. முருகப்பெருமானின் அருளை எண்ணி வியந்தேன்.

சுப்பிரமணியம் நந்தபாலன்(வயது 57) கற்கோவளம் பருத்தித்துறை கூறுகையில்: இது வேல்சாமியுடனான 7வது பயணம்.தாயின் நோயை குணப்படுத்த வேண்டி சந்நதியில் நேர்த்திவைத்தேன். நோய்குணமாகி எம்முடன் 10வருடங்கள் வாழ்ந்தார். அதற்காக கதிர்காம பாதயாத்திரையிலீடுபடுகின்றேன் .

ஆசீர்வாதம் யோசப்(வயது 53) கன்னியா, திருமலை கூறுகையில்;

எனக்கு பிறந்தவுடன் இரு கண்களும் தெரியாமல் போய்விட்டது. நான் பிறப்பால் றோமன் கத்தோலிக்கன். 2007இல் சைவப்பிள்ளையை மணம்முடித்து சைவத்திற்கு மாறி பாதயாத்திரையிலீடுபட்டேன். என்னே ஆச்சரியம் ஒரு கண் இப்போ நன்றாகத் தெரிகிறது. ஒருவைத்தியமும் பார்க்கவில்லை. முருகனிடம் வேண்டினால் நிச்சயம் கிடைக்கும்

துரைராஜசிங்கம் சுசீலா(வயது 57) – கெருடாவில் தொண்டமானாறு கூறுகையில்:

இது 3வது தடவையாகும். எனது மகன் ரஜீவன் 2012இல் கப்பலில் கனடா சென்றார். செல்லும்வழியில் தண்ணீர், சாப்பாடு இன்றி நோய்வந்தது. ஒன்றுமே செய்யமுடியாமல் இந்தியாவிற்கு அனுப்பினார்கள். என்ன செய்வதென்றறியாமல் மகனைக் காப்பாற்றுமாறு வேண்டி பாதயாத்திரையில் ஈடுபட்டேன். இன்று மகன் சுகமாக இருக்கிறார்.

அரியரட்ணம் அஜந்தன்(வயது 40) செல்வச்சந்நதி கூறுகையில்:

எமது குடும்பத்தில் 10பேர். சந்நதி வாசலில் கற்பூரம்விற்று சட்டிபானை கழுவித்தான் எம் 10 பேரையும் வளர்த்தவர் எம் அம்மா ராசாத்தி. இன்று எம்மில் 4பேர் வெளியில். இருவர் இல்லை. எனது உடம்பில் பல ரவைக்கூறுகள் உள்ளன. 2மைல் நடந்தால் 2மாதம் படுக்கையில் கிடக்கவேண்டும். ஆனால் பாதயாத்திரை சென்று வந்த பிற்பாடு ஒரு பிரச்சினையுமில்லை. 4வது தடவையாக இப்போ பயணிக்கின்றேன்.

2015இல் காட்டுக்குள் நாவலடி தாண்டிச்செல்கையில் மாலையானதும் வழி தவறியபோது பறவை வடிவில் வந்து பெருமான் எங்களுக்கு வழிகாட்டினார். 2016 இல் ஏழுமலைக்குச் சென்றபின் வள்ளிமலைக்கு செல்ல முடியாமல் அமர்ந்திருந்தவேளை என்னை எழுப்பி செல்ல வைத்தவர் அவர். நம்பினால் கிடைக்கும். சந்தேகமேயில்லை. நம்பிக்கை அவசியம்.

எனக்கிருந்த நோய் மற்றும் பல பிரச்சினைகளை தீர்த்துவைத்தவர் முருகப்பெருமான். நம்புங்கள் முருகன் நல்லவன். நிச்சயம் நடக்கும்.

சின்னத்தம்பி பரஞ்சோதி(வயது 54) மட்டக்களப்பு) கூறுகையில்:

4வது வருடமாக பாதயாத்திரையில் ஈடுபட்டுவருகின்றேன். மக்கள்

தொடர்ச்சி... (பக்கம் -19 )



# நடந்தாய் வாழி களனி கங்கை

## களனி பாலத்திற்கும் ஆமர்வீதிக்கும் நடுவே தோன்றிய பெரிய நிறுவனங்களின் சுவடுகள்

தொடர்ச்சி...

பங்குதாரர்களின் ஒருவரான செல்வநாதன் என்பவர் வீரகேசரியின் நிருவாகத்திலும் இணைந்திருந்தவர்.

ஆமர் வீதியில் சினிமாஸ் குணரத்தினத்தின் கெப்பிட்டல் திரையரங்கும் அதனையடுத்து மஸ்கன்ஸ் என்ற அஸ்பஸ்டஸ் தொழிற்சாலையும் சென். அந்தனீஸ் கம்பனியும் அமைந்துள்ளன. இங்கிருந்து எஸ்லோன் குழாய்கள் தயாரிக்கப்பட்டன.

அந்தனீஸின் உரிமையாளர்தான் இலங்கையின் கோடீஸ்வரர்களில் ஒருவரான மறைந்த ஞானம் அவர்கள். இவர் வீரகேசரி பத்திரிகையை வெளியிடும் எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் நிறுவனத்தின் தலைவராகவும் விளங்கியவர். மக்கள் திலகம் எம்.ஜீ.ஆர். நடித்த நினைத்ததை முடிப்பவன் திரைப்படத்தை தயாரித்தவர்!!

ஆமர் வீதியில்தான் சினிமாஸ் குணரத்தினம் அவர்களின் கே. ஜி. இண்டஸ் ரீஸ் அமைந்திருந்தது. இங்கிருந்து மக்களின் அன்றாட பாவனைக்கான பல பொருட்கள் உற்பத்தியாகின. இந்த குணரட்ணம் அவர்களின் சில சினிமா திரையரங்குகளும் கொளுத்தப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன. இத்தனைக்கும் அவர் தயாரித்து வெளியிட்ட அனைத்துமே சிங்களப்படங்கள்தான். இறுதியில் அவரும் வேறு ஒரு சம்பவத்தில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இலங்கையில் வடக்கில் போர்க்காலம் தொடங்கியதும், ரயில் சேவைகளும் வவுனியாவுடன் மட்டுப்படுத்தப்பட்டதை அறிவீர்கள். அச்சமயம் சினிமாஸ் குணரத்தினத்தின் கே. ஜி. பஸ்கள்தான் யாழ்ப்பாணத்திற்கான சேவையில் ஈடுபட்டன.

இவ்வாறு, களனி பாலத்திற்கும் ஆமர்வீதிக்கும் மத்தியில் தமிழ்ப்பேசும் இனங்களின் தொழிற்சாலைகள், நிறுவனங்கள் பல முன்னர் இருந்தன. சில தற்போதும் இயங்குகின்றன.

பேரினவாதிகளின் மத்தியிலிருக்கும் வன்முறையாளர்களை 1983 இல் தூண்டிவிட்ட சக்திகள், எவ்வாறு தமிழர்களின் பொருளாதாரத்தை சூறையாடியிருக்கின்றன என்பதை ஆராய்வதற்கும் இந்த வரலாற்று ஆதாரங்கள் தேவைப்படுகின்றன.

இது இவ்விதமிருக்க அரசியலில் உலகப்புகழ் பெற்றவரும், இலங்கையில் இன்னமும் தீர்க்கப்பட முடியாத இனப்பிரச்சினைக்கும் அடிக்கடி அரசியல் அமைப்பு மாற்றப்படவேண்டிய தேவைக்கான சிக்கலான முடிச்சினை உருவாக்கியவரும் இந்தப்பிரதேசத்தில்தான் 1906 ஆம் ஆண்டில் பிறந்திருக்கிறார்!!!

யார் அவர்...!? அடுத்தவாரம் அவருடைய கதையுடன் சந்திப்போம்.

(தொடரும்)

# கட்டிளமைப் பருவ உளநலம்

தொடர்ச்சி...

உயிரியற்துறை, கணிதத்துறை இவற்றுடன் தொடர்புடைய பல்வேறு பாடங்கள் இலங்கை முழுவதிலும் உள்ள பல்கலைக்கழகங்களில் உள்ளன. இக்கற்கை நெறிகள் ஆங்கிலத்திலேயே இடம்பெறும், அத்துடன் உசாத்துணை நூல்கள் பொதுவாக ஆங்கிலத்திலேயே கிடைக்கும். இப் பீடங்களுக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழகம் நுழைவதற்கு முன் ே ப முன்னாயத் த செயற்பாடுகளில் ஈடுபடுவது மிகவும்



அத்தியாவசியமானது. அவ்வாறு இல்லாவிட்டால் ஆரம்பிக்கும் காலநெருக்கீடுகள், பல்வேறு உடல், உள உபாதைகளுக்கும் விபரீத முடிவுகளுக்கும் சில மாணவர்களை உட்படுத்தலாம். பொதுவாக மருத்துவபீட மாணவர்கள் அதிக நெருக்கீடு, மனஉளைச்சல், தவறான முடிவுகளால் உயிரை மாய்த்துக்கொள்கின்றார்கள் அல்லது பின்வாங்குதல் போன்ற செயல்களைச் செய்ய விளைகின்றனர்.

காதல் வயப்படுதல்

--------------------------------------------------------

பொருத்தமான வாழ்க்கைத் துணையைத் தேட, காதல்வயப்பட்டு அதில் நீண்டகாலம் நிலைத்திருக்க மிகப்பொருத்தமான இடம் பல்கலைக்கழகம் எனலாம். தமது எதிர்கால வாழ்க்கைக்குப் பொருத்தமான மிகச்சிறந்த நபரை எந்த பீடங்களிலிருந்தும் தெரிவு செய்யக்கூடிய அரங்கமாக பல்கலைக்கழகங்கள் உள்ளன. அத்துடன் தமது பெற்றோர்கள், சகோதர, சகோதரிகளின் விருப்புகளையும் உள்வாங்கி அவரவர் பண்பாட்டு, மொழி, கலாச்சார, சமய முறைமைகளுடன் ஒத்துழைக்கக்கூடிய ஒருவரை தெரிவுசெய்து உங்களது அடுத்தக்கட்ட வாழ்க்கையின் அத்திவாரத்தை இடலாம். இளமானி கல்வியை கற்கும்போது உயர்கல்வி கற்கைகள் எதிர்காலத் திட்டங்கள், போன்றவற்றையும் நன்கு திட்டமிட்டு தயாரித்தால் உங்கள் கட்டிளமைப்பருவம் மிகவும் வளமாக, பட்டைதீட்டிய வைரமாக பிரகாசிக்கும்.

ஆசிரிய முன்மாதிரிகைகள்.

--------------------------------------------------------

உங்களுக்கென்று தனிப்பட்ட குடும்ப, சமூக, ஆன்மீக வாழ்க்கைக்கு பொருத்தமான முன்மாதிரியான பேராசிரியர்கள், விரிவுரையாளர்களை உங்கள் பீடங்களிலும், பல்கலைக்கழகங்களிலும் இருந்து தேர்ந்தெடுத்து அவர்களின் வாழ்க்கை முறையில் காணப்படுகின்ற எளிமை, தன்னடக்கம், பொறுமை, பொறுப்புக்கூறல், நற்பழக்க வழக்கங்கள், பிரச்சனைகளை கையாழும் திறன், ஏனையவர்களுடனான அணுகு முறைகள், ஆளிடை தொடர்பு போன்ற பல உயர்ந்த பண்புகளை உங்கள் ஆசான்களிடமீருந்தே கற்றுக்கொள்ளலாம். இவை ஒவ்வொன்றிற்கும் உதாரண புருசர்களாக இருக்க தகுதியற்ற ஆசிரியர்களும் இருக்கலாம். அவர்களை அரிசியிலிருந்து கல்லை வேறாக்குவது போன்று வேறாக்க முடியும். பல முன்மாதிரிகை ஆசிரியர்கள் தற்போதைய பல்கலைக்கழக மாணவர்களுக்கு தேவைப்படுகின்றனர். அல்லாவிட்டால் அவர்கள் தனியே தமது பெயர்களின் பின் பெற்றுக்கொள்ளும் ஒரு பட்டத்துடன் மட்டும் சமூகத்திற்குள் விடப்படும் பட்டதாரிகளாகவே இருப்பர்.

# ' மட்டக்களப்புத் தமிழகம் ' தந்த பண்டிதர் வி.சீ. கந்தையா

தொடர்ச்சி...

மக்களின் வாழ்வியல் சார்ந்த அனைத்து விழுமியங்களும் வரலாற்றில் இருந்து ஓரநிலைக்குத்தள்ளப்படுகின்றன. "

இந்த நூலை மறுபதிப்புச்செய்வதற்கு அனுமதியளித்திருக்கும் அமரர் பண்டிதர் வி. சீ. கந்தையா அவர்களின் புதல்வர் இளங்கோவன் அவர்கள், " ஏராளமான தமிழ் அன்பர்களது எதிர்பார்ப்பினை நிறைவு செய்யும் வகையில் இப்பழம்பெரும் நூலினை இரண்டாம் பதிப்பு செய்ய முன்வந்து, பலவிதமான சிரமங்களுக்கு மத்தியில் இத்தூய தமிழ்ப்பணியை முன்னெடுத்துச் செல்லும் எக்ஸில் நிறுவனத்தாருக்கு தமிழ் நெஞ்சங்களது பாராட்டுதல்களும் நன்றிகளும் என்றென்றும் நிலைத்திருக்கும்." என்று பாராட்டும் நன்றியும் தெரிவித்துள்ளார்.

குன்றக்குடி அடிகளார், தனிநாயகம் அடிகளார், பேராசிரியர் வி. செல்வநாயகம், முன்னாள் அமைச்சர் சு. நடேசபிள்ளை, மட்டக்களப்பு இராமகிருஷ்ண ஆசிரிமத்தின் சுவாமி நடராஜாநந்தா ஆகியோர் மட்டக்களப்பு தமிழகத்தின் முதல் பதிப்பிற்கு வழங்கிய வாழ்த்துரைகளும் இந்த இரண்டாம் பதிப்பில் தவறவிடப்படாமல் மீண்டும் பதிவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தகுந்தது.

பண்டிதர் கந்தையா அவர்கள் இந்த நூலின் முன்னுரையில், "கல்கி" கிருஷ்ணமூர்த்தி, ஈழகேசரி ஆசிரியர் இராஜ அரியரத்தினம், முதலைக்குடா தமிழறிஞர் சிவசம்பு, காரைதீவு அன்பர்கள் தம்பிராசா, கயிலாய பிள்ளை கப்புகனார், அ.ஸ. அப்துஸ் ஸமது, அகமது லெவ்வை, பல்கலைக்கழக விரிவுரையாளர் ப. சந்திரசேகரம், சிவானந்தாவில் பணியாற்றிய தியாகராஜா ( இவர் அங்கு அதிபராகவும் மட்டக்களப்பு மேயராகவும் இயங்கியவர்) பேராசிரியர் வித்தியானந்தன், எ.்.ப். எக்ஸ். சி. நடராசா உட்பட பல பெரியோர்களையும் அவர்கள் இந்த அரிய நூல் வெளிவருவதற்கு என்னென் வழிவகையில் உதவினார்கள், ஆலோசனைகளை வழங்கினார்கள் என்பதையும் விரிவாக பதிவுசெய்துள்ளார்.

மட்டக்களப்பு பிரதேசத்தின் ஆத்மாவையே இந்த நூலில் ஆவணப்படுத்தியிருக்கும் பண்டிதர் கந்தையா, மாணவர்களுக்கும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பேராசிரியர்களுக்கும் உதவும் வகையில் உசாத்துணையாகவே வழங்கியிருக்கிறார்

இந்த நூலில் பண்டிதர் அவர்கள் குறிப்பிட்டுள்ளவர்களில் பலர் அவரைப்போன்று இன்றில்லை. அந்த முன்னோர்கள் குறைந்த வளங்களுடன் தேடல் உணர்வுடன் தமிழினத்திற்காக மேற்கொண்ட அளப்பரிய சேவைகளின் பதச்சோறாகவே மட்டக்களப்பு தமிழகம் விளங்குகிறது.

பண்டிதர் வி. சீ. கந்தையா அவர்கள் என்றென்றும் கொண்டாப்படவேண்டியவர். முதல் பதிப்பினை 1964 இல் வெளியிட்ட குரும்பசிட்டி, ஈழகேசரி பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றமும், இரண்டாம் பதிப்பினை எந்த சேதமும் இன்றி அழகாக வடிவமைத்து 2002 இல் வெளியிட்ட பிரான்ஸ் எக்ஸில் இலக்கிய அமைப்பினரும் தமிழ்கூறும் நல்லுலகினால் என்றும் பாராட்டப்படவேண்டியவர்கள்.

(தொடரும்)

**மலைகளைப் பேசவிடுங்கள்**

தொடர்ச்சி...

# மலையகத் தமிழர்கள் என்போர் யார்?

உருவாக்கிவைத்த அரசியல் அடையாளம் மலையக தமிழ் மக்களையும் வாக்குரிமை உள்ளவர்களாக மாற்றியது. மலையகத் தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதியாக 1936 இலேயே கோ.நடேசய்யர் இலங்கை அரசவையில் அமர்ந்த வரலாறு மலையகத் தமிழருடையது. தொடர்ச்சியாக தான் இறக்கும்வரை அந்த பதவியில் இருந்த அவரது அரசியல் செல்நறி இலங்கை இந்திய காங்கிரஸ் உருவாக்கத்தோடு மாற்றம் கண்டது .

( தொடரும்)

# கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்க பொதுக்கூட்டம்

தொடர்ச்சி...

அடிப்படையில் 2018-2019 வருடத்திற்கான நிருவாகிகள் தெரிவு செய்யப்பட்டதுடன் பீடங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கான பிரிதிநிதிகளும் அத்துடன் கிழக்கொளி சஞ்சிகைக் குழு, கலை கலாசாரக் குழு, விளையாட்டுக் குழு போன்ற உப-குழுக்களுக்கான உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.



# புலயவெளி பேச்சியம்மன் ஆலய கணனி கற்கை நிலையம்

## தகவல் தொழில் நுட்பத்துறையில் காலடி எடுத்து வைப்பவர்களுக்கான கணனி பயிற்சி

COURSES

INFORMATION AND COMMUNICATION TECHNOLOGY

தொடர்புகளுக்கு : 0771516203

அனைத்து வயதினருக்குமான படிப்படியான நேரடிப் பயிற்சி நெறி
ஆர்வம் உள்ளவர்களுக்கு மாத்திரம்

(இது லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் ஆதரவு மற்றும் நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் கிராம அபிவிருத்தித் திட்டம்.)





# MEGAM AGENCY

Import, Export Clearing Forwarding & Customs
Tel/Fax 2445383 Hotline (+94 77 773 2226)
megamagency@yahoo.com

உங்கள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி விடயங்களை / சுங்கப் பணிகளை திறம்படச் செய்து முடிக்க நாடுங்கள்..

#61,A.G HINNI APPUHAMY MW, COLOMBO -13





All Kind of Gem & Jewellery



# SUN GEM & JEWELLERY (pvt) Ltd.

Gold Centre, Shop No. 84, 180, N H M Abdhul Carder Mw, Colombo 11, Sri Lanka.
Tel : +94 11 2330664, +94 11 2330663 Fax : +94 11 2322204 Email : sungempvt@gmail.com


Printed and Published by Arangam News (Pvt)Ltd No 227 Bar Road Batticaloa